# செம்மலர்

நிலம் 1 துகள் 22 வள்ளுவர் ஆண்டு 2051, 12 - 18 மார்கழி 2020

வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-


## யாழ்ப்பாணத்தில் சமூகத் தொற்று?



# "நாங்கள் இருக்கிறோம்!"

## முண்டியடித்து முன்வந்த இளைஞர்கள்



■ குமரன் ■

கடந்த வாரம் முழுவதும் கொட்டித் தீர்த்து விட்ட மழை மக்களை குறிப்பாக யாழ்ப்பாண மக்களை நிலை குலையச் செய்துவிட்டது. ஏழை முதல் வசதி படைத்தவர் வரை அனைவரது அன்றாட கருமங்களையும் புரட்டிப்போட்டு வெள்ளத்தை உண்டாக்கி, யாழ்ப்பாணத்தை வெள்ளக் காடாக்கி விட்டுச் சென்றுவிட்டது புரெவிப் புயல்.

குளங்கள், குட்டைகளை ஒட்டியிருந்த இடங்களில் தண்ணீர் வீடுகளுக்குள் புகுந்துகொண்டது. சில இடங்களில் இடுப்பிற்கு மேலும் வீடுகளுக்குள் வெள்ளம் நின்றது. வீதிகளை பெருமளவில் உயர்த்திவிட்டதனாலும், அப்படி வீதிகளை மேம்படுத்தியபோது ஏற்கனவே இருந்த வெள்ள வாய்க்கால்களை மூடிவிட்டதனாலும் வெள்ள நீர் வடிந்தோட முடியாமல் வீடுகளுக்குள் வெள்ளம் வந்ததும் நடந்தது.

இதனால் பெட்டி படுகைகள், வீட்டுப் பாவனைப் பொருட்களுடன் பலரும் இடம்பெயர வேண்டியிருந்தது. சிலர் இடம்பெயர்ந்து பாடசாலைகள் பொது இடங்களில் தங்கினர். மற்றும் சிலர் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கினர்.

பொது இடங்களில் தங்கியிருந்தவர்களுக்கு அரச அதிகாரிகள் சமைத்த உணவை வழங்கினார்கள். வெள்ளம் வடியும் வரையும் இந்த சமைத்த உணவு வழங்கப்பட்டது. ஆனால், வீட்டில் உணவுப் பொருள்கள் இருந்தாலும் சமைத்துச் சாப்பிடவும் முடியாமல், பொது இடங்களிலும் சென்றும் தங்க முடியாமல் அல்லாடிய மக்கள் கூட்டத்தினரும் ஆங்காங்கே கணிசமாக இருந்தனர்.

இப்படிப் பரிதவித்து நின்றவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி சமைத்த உணவுப் பொதிகளை விநியோகித்த நல்லுள்ளங்கள் மற்றும் அமைப்புக்கள் பல. புரெவிப் புயலின் தாக்கம் எதிர்பார்த்த அளவிற்கு இல்லை என்று ஆட்சியாளர்கள் அறிக்கைவிட்டனர். ஆனால் அரசின் உதவியும் இன்றி, பொது இடங்களிலும் தங்க முடியாமல் அல்லாடிய மக்களில் பலருக்கும் உண்மையில் உதவிகள் தேவைப்பட்டன.

# செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்


மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781


உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**




## வெறும் கை முழம் போடாது

கடந்த வாரத்தில் நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆற்றிய உரையும் அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனக்கான நேரத்தில் 5 நிமிடங்களை வழங்கியமையும் பெரியளவில் சமூக வலைத் தளங்களில் சிலாகிக்கப்பட்டது. கூடவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனின் உரையும் சமூக வலைத்தளங்களில் கவனத்தைப் பெற்றது. ஆனால் கஜேந்திரகுமாரின் உரைக்கு நிகராக சாணக்கியனின் உரையை மதிப்பிட்டுவிடக்கூடாது என்கிற பிடுங்குப்பாடும் தொடர்ந்தது. இதற்கு மேலாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், சி.வி. விக்னேஸ்வரன் ஆகியோரும்கூட கவனத்துக்குரிய உரைகளையாற்றி இருந்தனர்.

கஜேந்திரகுமாரின் உரையில் கவனத்திற்குரிய ஒரு மையப் பொருள் இருந்ததை மறுத்துவிடமுடியாது. நடந்தது இனப்படுகொலை என்பதைச் சிங்கத்தின் குகைக்குள் நின்றுகொண்டு அவர் சொன்னார். அதனைத் தர்க்க ரீதியாக நிறுவவும் முற்பட்டார். அந்த உரைக்கு இடைஞ்சல் செய்த சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் அவரது கருத்துக்களை எதிர்கொள்வதற்குப் பதிலாகப் புலிகள் செய்த போர்க்குற்றம் பற்றியெல்லாம் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசுவதில்லை என்பதுபோன்ற சிறுபிள்ளைத்தனமான சீண்டல்களைச் செய்துகொண்டிருந்தனர். (இடையில் புலிகளும் போர்க் குற்றங்களைச் செய்தார்கள் என்று அந்த உரையில் கஜேந்திரகுமார் தெளிவாக ஏற்றுக் கொண்டார். இதுவரையில் இதே கருத்தைச் சொல்லி வந்ததற்காகச் சுமந்திரனை சமூக ஊடகங்களில் வறுத்தெடுத்தவர்கள் முன்னணி ஆதரவாளர்கள். இப்போது அவர்கள் வாயடக்கம் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்)

எது எப்படியிருந்தாலும் கஜேந்திரகுமாரின் உரை கவனத்திற்குரியது என்பதில் மாற்றுக்கருத்தில்லை. அது சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சென்றடையவில்லை என்றாலும் அவரால் சொல்லப்பட்ட கருத்தும், சொல்லப்பட்ட இடமும், சொல்லப்பட்ட விதமும் நிச்சயம் பல நாட்டுத் தூதர்களினதும் கவனத்தை ஈர்க்கும். அவர்களுக்கு ஒரு தெளிவான செய்தி தமிழர் தரப்பிலிருந்து முன்வைக்கப்பட்டிருக்கும் என்பதிலும் மாற்றுக் கருத்தில்லை.

ஆனால், இத்தகைய எழுச்சி மிகு உரைகளால் தமிழர்களுக்கு ஆகப்போவது என்ன? எதுவும் நடக்காது என்பதை மட்டும் அடித்துக்கூறலாம். தந்தை செல்வா காலத்திலிருந்து இத்தகைய எழுச்சி மிகு, உணர்ச்சி மிகு உரைகள் தமிழர் தரப்பிலிருந்து நாடாளுமன்றத்தில் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், அவற்றால் பௌத்த சிங்கள பேரினவாதத்திடம் சாதிப்பதற்கு ஒன்றுமில்லை.

முன்னணி நாடாளுமன்றில் ஆற்றும் இத்தகைய உரைகளால் கூட்டமைப்பினர் மற்றும் விக்னேஸ்வரன் ஆகியோரும் அதற்குக் குறைவான உரைகளை ஆற்ற முடியாத நிலையை ஏற்படுத்துகிறார்கள் என்கிற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது. ஆனால், யார் ஆற்றினால் என்ன செவிடன் காதில் ஊதும் சங்குகள்தான் அவை என்கிற நிலையில் அதன் மீது அதிக கவனம் செலுத்தப்படுவது வீண். வாக்கு அரசியலைப்பலப்படுத்தவும் கட்சி அரசியலை முன்கொண்டு செல்லவும் வேண்டுமானால் இத்தகைய உரைகள் பயன்படக்கூடும். அதைத் தாண்டி இத்தகைய உரைகளால் ஆன காரியமும் ஒன்றுமில்லை, ஆகப் போகின்ற காரியமும் இல்லை.

அதற்காக நாடாளுமன்றில் உரைகளே தேவையில்லை என்றும் சொல்லவில்லை. தாராளமாக உரையாற்றுங்கள். ஆனால், மக்களிடம் தேசியத்தையும் விடுதலையையும் எடுத்துச் செல்வதற்கான வேலைத் திட்டங்கள் மீது அதிக கவனம் வையுங்கள் என்பதுதான் கோரிக்கை. களத்தில் எதுவுமே இல்லை. மக்களைத் தயார்ப்படுத்தாமல் வெறும் உரைகளால் வெற்றியைப் பெறமுடியும் என்பது பகல் கனவு மட்டுமே!

"நான் முகப் புத்தகத்தில் உதவி தேவை என்று ஒரு பதிவு போட்டதும் உடனடியாகவே பலரும் தொடர்புகொண்டு பேசினார்கள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொருத்தர் சமைத்த உணவுகளை வழங்கினார்கள். ஏனோ தானோ என்கிற உணவுகளல்ல. மூன்று நேரத்திற்கும் தரமான உணவகங்களில் இருந்து பெற்ற உணவுப் பொதிகளே தரப்பட்டன" என்கிறார் காயத்திரி. அவரது வீட்டில் அவரது கழுத்தளவிற்குத் வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கும் பணியில் முற்றுமுழுதாக தம்மை ஈடுபடுத்தி இயன்றளவு பேருதவி வழங்கியவர்களில் சிலரையாவது இந்தச் சமூகத்திற்கு அடையாளப்படுத்தலாம் என்று தேடத் தொடங்கினோம்.

"எங்கட சனத்துக்கு நாங்கள் செய்யாம வேற யார் செய்யிறது, சமூகத்தில எவ்வளவோ பிரச்சினையள் இருக்கு அதுகள நிறைவேற்ற வேண்டிய தேவை எங்களை போல இளைஞர்களுக்கு நிறையவே இருக்கு...." இளம் பெண்ணான செ.நிவேதா. பல்கலைக்கழக மாணவியான அவர் மனிதம் என்கிற அமைப்போடு இணைந்து பணியாற்றுகின்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினை மையமாக கொண்டு இயங்கிக் கொண்டிருக்கின்ற மாணவர்கள் சார்ந்த ஓர் தொண்டு அமைப்பு இந்த மனிதம். இது அடிப்படையில் கல்வி சார்ந்த ஓர் அமைப்பாக இருப்பினும், மனிதாபிமான ரீதியில் வெள்ள இடர் உதவிகளையும் செய்திருக்கின்றது.

"200 பேருக்கு உதவி வழங்கியிருக்கிறம்" என்கிறார் நிவேதா. இவர்களுக்கு எப்படிப் பணம் கிடைக்கும்? "பல்லைக் கழகப் பட்டமளிப்பு விழாக்களின்போது சேகரிக்கும் பணம்தான் எமது சேமிப்பு" என்று 'கப் கெலக்சன் மணி' களியாட்டத்துக்கு மட்டுமன்றி நல்ல பணிகளுக்கும் செல்லும் விதத்தை விளக்குகின்றார். இருந்தாலும் இந்த வெள்ள இடர் உதவிக்கு விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் என்று பலரும்கூட பண உதவிகளை வழங்கியிருக்கின்றனர் என்பதையும் அவர் குறிப்பிட்டார்.

"சனம் சரியா பாதிக்கப்பட்டிருக்கு எண்டு தெரிஞ்ச உடனுமே எங்கட உறுப்பினர்கள் தங்களால இயன்ற பணங்களை சேர்த்து பாதிக்கப்பட்ட இடங்களில இருக்கிற ஆக்களுக்கு தேவையான சமைச்ச சாப்பாட்டைக் கொடுத்தம், அதே போல ஊரில இருக்கிற வசதி படைச்ச ஆக்கள், பெரிய கடை முதலாளிமார் எண்டு அவையளும் எங்களுக்கு உதவியா காசுகள், சாமானுகள் எண்டு தந்திச்சினம் அதை கொண்டு தொடர்ந்தும் எங்கட சேவையை நிப் பாட்டாமல் செஞ்சம்" என்கிறார் ச.லக்ஸன். விதையனைத்தும் விருட்சமே என்கிற தொண்டு அமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் அவர்.

இயற்கை பாதுகாப்பு மற்றும் கல்விச் செயற்பாடுகள் சமூக பிரச்சினைகள் என பலவற்றையும் இனங்கண்டு தமது அமைப்புத் தொடர்ந்து உதவி வருவதாக அவர் தெரிவித்தார்.

"வெள்ளத்தால எத்தினையோ பேர் பாதிக்கப்பட்டு இருக்கினம், அப்பிடியான ஆக்களுக்கு உதவி செய்ய பல பேர் முன்வருவினம். இருந்தாலும் யாரும் கழுத்தளவோ, இடுப்பளவோ வெள்ளத்துக்குள்ள இறங்கிப் போய் உதவி செய்யிறது எண்டுறது குறைவுதான்.. அதுக்காக தான் நானும் என்ட நண்பர்களுமா சேர்ந்து வெள்ளத்தால சரியா பாதிக்கப்பட்டிருக்கிற ஆக்களுக்கு உதவி செய்யவேணும் எண்டு ஆரம்பிச்சம். தொடக்கத்தில என்ர ஸ்ருடியோ வருமானத்தில வந்த ஒரு தொகையை கொண்டு தான் .உதவி செய்ய வெளிக்கிட்டம். இருந்தாலும் தேவை அதிகமா இருந்தபடியால பேஸ்புக்கில உதவி செய்ய விரும்பிறவை உதவி செய்யலாம் எண்டு பதிவிட்டம், அதை பாத்திட்டு சிலர் உதவி செஞ்சாங்கள் அப்பிடி வந்த காசில தேவையான பொருள்கள், சமைச்ச சாப்பாடு, தண்ணீர்ப்போத்தல் எண்டு தொடந்து குடுத்துக்கொண்டு வாறம், நானும் தொடக்கத்தில கஸ்டப்பட்டுத்தான் முன்னுக்கு வந்தனான் எண்ட படியால கஸ்டப்படுற ஆக்களின்ர வலி தெரியும். அதால முடிஞ்சளவு உதவி தேவையான ஆக்களுக்கு செஞ்சுகொண்டிருக்கிறம்.." என்கிறார் எந்தவொரு அமைப்பினையும் பிரதிநிதித்துவபடுத்தாமல் தனது நண்பர்களுடன் சேர்ந்து வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவையாற்றி வரும் கொக்குவிலைச் சேர்ந்த ஜெ.கஜானன்.


**உதவி செய்ய பல பேர் முன்வருவினம். இருந்தாலும் யாரும் கழுத்தளவோ, இடுப்பளவோ வெள்ளத்துக்குள்ள இறங்கிப் போய் உதவி செய்யிறது எண்டுறது குறைவுதான்..**


இதில் ஆச்சரியப்படத்தக்க உண்மை என்னவென்றால், மக்கள் பாதிக்கப்பட்டதும் அவர்களுக்காக உடனடியாக ஓடிவந்து உதவி செய்தவர்கள் அனைவரும் இளைஞர்கள்தான். மூத்தவர்களின் நிதி உதவி மற்றும் வழிகாட்டல்களோடு களத்தில் இறங்கி உதவியவர்கள் இளைஞர்கள்தான்.

இருந்தாலும் சில வன்முறைக் கும்பல்களின் செயல்களைக் கொண்டு ஒட்டு மொத்த இளைஞர்களுமே சரியில்லை அல்லது தரமற்றவர்கள் என்று நாகூசாமல் சொல்லிவிடுகிறோம் என்பதை நினைக்கையில் அதைக்கூறும் ஒவ்வொருவரும் வெட்கித் தலைகுனிய வேண்டும்.

| *யாழ் மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டோர் விபரம் (11.12.2020 வரை)* | |
|---|---|
| பாதிக்கப்பட்ட குடும்பங்கள் | *25,497 குடும்பங்கள்* |
| பாதிக்கப்பட்ட அங்கத்தவர் எண்ணிக்கை | *85,139 பேர்* |
| வெள்ளத்தினால் ஏற்பட்ட மரணங்கள் | *02 பேர்* |
| வெள்ளத்தினால் காயமுற்றோர் | *06 பேர்* |
| சேதமடைந்த வீடுகள் | *96 வீடுகள்* |
| பகுதியளவு சேதமடைந்த வீடுகள் | *3084 வீடுகள்* |
| சுயதொழில், சிறுகைத்தொழில் பாதிப்பு | *1043 பேர்* |
| அடிப்படை கட்டமைப்புகள் பாதிப்பு | *37 பேர்* |
| இடைத்தங்கல் முகாம்கள் | *02 முகாம்கள் (கோப்பாய்)* |

# ‘தோல்வியடைந்த அரசு’

## சொல்லப்படாததா? பொருத்தமற்றதா?

● ஸூடோ ஸ்வாமி



பண்டைய மன்னராட்சிக் காலத்தில் புலவர்கள் தமது கவித்திறம் மற்றும் மொழித்திறம் என்பவற்றை மன்னர் மற்றும் அரசவைக்கு நிருபித்துக் காட்டி பரிசுகளை பெற்றுச் சென்றதாக கதைகள் உள்ளன. அதிலும் மன்னனை மகிழ்விக்கும் விதமாக, அவரைப் புகழும் விதமாக தமது மொழித்திறனைப் பயன்படுத்திய கவிஞர்களுக்கு அந்தக் காலத்தில் பெறுமதியான பொருட்களும் கிடைத்து வந்தன. இவ்வகையான தருணத்தை நினைவுபடுத்தும் சுவாரஷ்யமான காட்சி ஒன்று, 23ஆம் புலிகேசி படத்திலும் சேர்க்கப்பட்டிருந்தது. பாணபத்திர ஓணாண்டி என்னும் புலவர், புலிகேசியின் அரசவைக்குள் நுழைந்து நிகழ்த்திய கலகமும் அதன் உடனடிப் பின்னான நிகழ்வுகளும் வாசகர்களுக்கு இவ்விடத்தில் மனத்திரையில் வந்துபோயிருக்கலாம்.

கிட்டத்தட்ட மேற்சொன்ன நிலைமைகளோடு ஒப்பிட்டு பார்க்கக்கூடியதான அமளிதுமளி ஒன்று கடந்த வாரத்தில் இலங்கை நாடாளுமன்றத்தில் அரங்கேறி இருக்கிறது. லண்டன் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியான எதிர்க்கட்சித் தலைவரின் ஆங்கில உரையில் பிழை பிடிக்கப்போன சபாநாயகர், அவர் பயன்படுத்தியிருக்காத வசனம் ஒன்றினை நீக்கப் போவதாக அறிவித்த வேளையிலேயே இந்த சலசலப்பு தோன்றியிருந்தது.

சஜித் பிரேமதாச நாடாளுமன்றில் உரை நிகழ்த்திக் கொண்டிருக்கையில் குறுக்கிட்ட சபாநாயகர், சஜித் அவர்கள் பயன்படுத்தியதாகக் கருதிய ஒரு பதம் தொடர்பில் சர்ச்சை ஒன்றினை தோற்றுவித்திருந்தார். 2021ஆம் ஆண்டுக்கான பாதீட்டின் மீதான மூன்றாம் வாசிப்பு நாடாளுமன்றில் இடம்பெற்றுக்கொண்டிருந்தபோதே இந்த சர்ச்சை உருவாகியிருந்தது.

இலங்கையை அவர், தோல்வியடைந்த அரசு (**Failed state**) எனக் குறிப்பிட்டார் எனக் கருதிய அவைத் தலைவர், அந்த வசனத்தினை ஹன்சார்டிலிருந்து நீக்கப் போவதாக மன்றில் அறிவித்தார்.

அதற்கு பதிலுரைத்த சஜித், தான் அவ்வாறு தனது உரையில் சொல்லவில்லை என்பதில் உறுதியாக இருந்ததுடன், தான் பயன்படுத்தாத வசனம் தொடர்பில் குழப்பம் எழுந்ததனால் சற்றுச் சூடாகியும் இருந்தார். அதே வேளை, தான் தோல்வியடைந்த, தகுதியற்ற மற்றும் திறமையற்ற ஆட்சி என்றே குறிப்பிட்டார் எனவும், தோல்வியடைந்த அரசு என சொல்லவில்லை எனவும் வாதித்தார்.

> சஜித் பிரேமதாசவின் ஆங்கிலமொழிப் புலமை மீது ஆர்வத்தினையும் சபாநாயகர் மகிந்த யாபா அபேவர்த்தனவின் கேள்விச் செல்வம் தொடர்பில் சந்தேகத்தினையும் கிளப்பிவிட்டிருந்தது.

> தோல்வியடையந்த ஆட்சி என்பதற்கும் தோல்வியடைந்த அரசு என்பதற்கும் இடையிலான வேறுபாட்டை சபாநாயகர் புரிந்துகொள்ள வேண்டும்

தோல்வியடையந்த ஆட்சி என்பதற்கும் தோல்வியடைந்த அரசு என்பதற்கும் இடையிலான வேறுபாட்டை சபாநாயகர் புரிந்துகொள்ள வேண்டும் எனக் கோரிக்கை விடுத்த அவர், தனது ஆங்கிலப்புலமைக்கு மதிப்பளிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.



### கஜேந்திரகுமாரின் ஒத்துழைப்பு

ஆங்கிலத்தில் நடந்த இந்த சம்பாஷணை சில நிமிடங்கள் நீடித்த நிலையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களும் அதில் பங்கெடுத்தார். குறித்த பகுதியை நீக்குவது தொடர்பான நடவடிக்கைக்கு இருக்கக்கூடிய சட்டபூர்வ தன்மை குறித்து அவர் கேள்வியெழுப்பினார். எனினும் அதனைச் சாட்டாக பாவித்து தனது ஆங்கில மற்றும் அரசியல் அறிவை நிரூபிக்க முனைந்த தயாசிறி ஜயசேகரவிற்கு தகுந்த மறுத்தான் ஒன்றை எதிர்க்கட்சித் தலைவர் வழங்கி வைத்தார்.

நாடாளுமன்றத்தில் நிகழ்ந்த இந்த அல்லோலகல்லோலம், சஜித் பிரேமதாசவின் ஆங்கிலமொழிப் புலமை மீது ஆர்வத்தினையும் சபாநாயகர் மகிந்த யாபா அபேவர்த்தனவின் கேள்விச் செல்வம் தொடர்பில் சந்தேகத்தினையும் கிளப்பிவிட்டிருந்தது. இலங்கை ஒரு தோல்வியடைந்த நாடு என கூறியவர் யார் என கேட்கக்கூடிய புதிர் கேள்வி ஒன்றிற்கு, விடுகதைப் பாணியில் ஹாஷ்யமாக சபாநாயகரின் பெயரை சொல்லக்கூடிய நிலைவரத்திற்கு இட்டுச் சென்றுவிட்டது இந்தச் சம்பவம்.

### நலிந்த அரசுகளின் தரவரிசையில் நாம் எங்கே?

ஆனால், நாடுகளின் நிலைவரங்கள் தொடர்பில் வருடாந்தம் அறிக்கை விடும் அமெரிக்காவை சேர்ந்த நிபுணர்களை உள்ளடக்கிய அமைப்பு ஒன்று வெளியிட்டிருக்கும் 2020ஆம் ஆண்டுக்கான அறிக்கை, இலங்கையை ஒரு ஆரோக்கியமான நாடாக காண்பித்திருக்கவில்லை.

178 நாடுகளின் தரவுகளை மதிப்பீடு செய்து அதற்கேற்றவாறு நாடுகளை பட்டியலிட்டிருக்கும் அந்த அறிக்கை, 178ஆம் இடத்தில் பின்லாந்தினை வரிசைப்படுத்தி மிகவும் நிலையானது எனக் குறிப்பிட்டிருக்கையில், யேமன் நாட்டினை முதலிடத்தில் வரிசைப்படுத்தி மிகவும் உயர்ந்த விழிப்பிற்குரியது (**Very high alert**) என வகைப்படுத்தியிருக்கிறது.

இந்த வரிசைப்படுத்தல் கிரமம் எப்படிப்பட்டது என்பது தெரியவந்த நிலையில், சஜித் தனது உரையில் தோல்வியுற்ற அரசு என உதாரணம் காட்டிய வட கொரியா 30ஆம் இடத்தினைப் பிடித்திருக்கிறது. இலங்கையோ, 52ஆம் இடத்தில் வரிசைப்படுத்தப்பட்டிருக்கிறது உயர் எச்சரிக்கைக்குரிய (**High warning**) நாடுகளின் பட்டியலினுள்.

### அறிக்கையை உருவாக்கும் அளவீடுகள்

பல்வேறுபட்ட தலைப்புகளின் கீழ் நாடுகளின் நிலைவரத்தினை அலசி ஆராயும் இந்த அமைப்பு, பல்வேறு அளவுருக்களின் அடிப்படையில் நாடுகளை ஆராய்ந்தே அறிக்கையை ஆக்குவதாகக் கூறுகின்றது. ஒத்திசைவு சுட்டிகளின் கீழ் பாதுகாப்புத்துறை மற்றும் குழுக்களின் மனக்குறைகள் அளவீடு செய்யப்படுவதோடு பொருளாதார அளவுகாட்டிகளின் கீழ் பொருளாதார வீழ்ச்சி, சீரற்ற அபிவிருத்தி மற்றும் மூளைசாலிகள் வெளியேற்றம் என்பவற்றையும் அளவிடுகிறது.

அரசின் சட்டபூர்வத் தன்மை, பொதுச்சேவைத் துறை, மனித உரிமைகள் (22 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத்தில் சமூகத் தொற்று?

## ஊடுருவியது கொரோனா

● ரி.பி.அன்ரன், குமரன்

இலங்கையில் 146 பேரின் உயிர்களைக் காவு கொண்டுள்ள உலகப் பெருந் தொற்றான கொரோனா யாழ்ப்பாணத்திற்குள் சமூகத் தொற்றாகப் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதாரத்துறையினர் எச்சரிக்கின்றனர்.

சுன்னாகம், மருதனார் மடத்தில் 48 பேருக்கு எழுந்த மானமாக நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போது சந்தையில் வியாபாரம் செய்யும் முச்சக்கரவண்டிச் சாரதி ஒருவருக்குத் தொற்று ஏற்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது என்று சுகாதார அதிகாரிகள் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள்.

யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தொற்று உறுதிப்படுத்தப்பட்டது தொடர்பான தகவலைத் தனது முகப் புத்தகத்தில் பதிவேற்றம் செய்திருந்தார்.

தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் நபர் காலையில் மருதனார் மடம் சந்தையில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடுபவர் என்றும் ஏனைய நேரங்களில் முச்சக்கரவண்டிச் சேவையை வழங்கிவருபவர் என்றும் அதிகாரிகள் கூறினர்.

இவர் யாழ்ப்பாணத்திற்கு வெளியே சென்றதன் மூலமோ அல்லது அவரது வீட்டிற்கு கொழும்பு மற்றும் ஏனைய பகுதிகளில் இருந்து யாரும் வந்ததன் மூலமோ தொற்றுப் பரவியிருப்பதற்கான வாய்ப்புக்கள் எதுவும் இதுவரையில் கண்டறியப்படவில்லை என்கிறார்கள் சுகாதார அதிகாரிகள்.

தெற்கில் இருந்து மருதனார் மடம் சந்தைக்குக் காய்கறி ஏற்றி வந்தவர்கள் மூலமாக இந்தத் தொற்று ஏற்பட்டிருப்பதற்கான சாத்தியங்களை மறுக்க முடியாது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தற்போதிருக்கும் நிலையில் மருதனார் மடம் நபருக்கு எப்படித் தொற்று ஏற்பட்டிருக்கும் என்பதை உறுதிப்படுத்துவது குதிரைக் கொம்பு என்பதையும் அதிகாரிகள் ஏற்றுக்கொள்கிறார்கள். எனவே கூடியளவில் இதுவொரு சமூகத் தொற்றாகப் பரவுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன என்கிற அச்சம் சுகாதாரத்துறையினரிடம் இருக்கின்றது.

"இது சமூகத் தொற்றாக இருப்பதற்கான வாய்ப்புக்களே அதிகம். ஆனால் இலங்கையில் அதிகாரத்தில் உள்ளவர்கள் யாரும் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எனவே ஆபத்தை உணர்ந்து மக்களே தங்களைத் தற்காத்துக்கொள்ளும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவேண்டும்" என்று தனது பெயர் விவரங்களை வெளியிடக்கூடாது என்கிற நிபந்னையுடன் செம்மண் பத்திரிகையிடம் பேசிய சுகாதாரத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கைக்குள் கொரோனா தொற்று மீண்டும் பரவத் தொடங்கியது எப்படி என்று இதுவரையில் கண்டுபிடிக்க முடியாதபோதும் ஏற்பட்டிருப்பது சமூகத் தொற்று இல்லை என்று இதற்கான கட்டுப்பாட்டுச் செயலணி தொடர்ந்து மறுத்து வருகின்ற நிலையிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

ஆனால், உலக சுகாதார அமைப்பின் கருத்துப்படி தொற்று ஏற்பட்ட வழிவகைகளைக் கண்டறிய முடியவில்லை என்றால் அதனைச் சமூகத் தொற்றாகவே கருதவேண்டும். இது ஒரு ஆபத்தான நிலை, இந்த நிலையில் தொற்றைக் கண்டறிந்து கட்டுப்படுத்துவது சிக்கலானது என்றும் அது கூறுகின்றது.

பருவ மழை காலமும் தொடங்கிவிட்ட நிலையில் வடக்கில் தொற்றுப் பரவல் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன என்கிறார்கள் சுகாதார அதிகாரிகள்.

உலகம் முழுவதும் 7 கோடி 10 லட்சம் பேர் இந்தப் பெருந் தொற்றால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சுமார் 16 லட்சம் பேர் வரையிலானோர் உயிரிழந்திருக்கிறார்கள். இலங்கையில் இதுவரையில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 31 ஆயிரத்துக்கும் அதிகம். கார்த்திகை மாதத்தில் நோய் பரவல் மிகத் தீவிரமடைந்திருக்கிறது. நாளாந்தம் நூற்றுக் கணக்கானவர்கள் தொற்றுக்குள்ளாகி வருகின்றார்கள். கடந்த ஒரு வாரமாக 500 முதல் 700 வரையான நோயாளர்கள் நாளாந்தம் தொற்றுக்குள்ளாகியிருக்கின்றனர்.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்திலும் சமூகத் தொற்றுக்கான வாய்ப்பு ஏற்பட்டிருப்பதால் மக்கள் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றி, முகக் கவசங்களைத் தவறாது அணிந்து, சமூக இடைவெளியைத் தவிர்க்காது பின்பற்றி, அடிக்கடி கைகளை நன்று சவர்க்காரம் போட்டுக் கழுவி வருமுன் காத்துக்கொள்வதே புத்திசாலித்தனமானது.



கோப்புப்படம்
(மருதனார்மடம் சந்தை)



# மகர ஒரு கொடூரச் சிறை...!

நியூட்டன்

நாட்டின் சட்ட திட்டங்களானவை பொதுமக்களைப் பாதுகாப்பவையாக இருப்பது அவசியம். ஜனநாயக நாட்டில் இது அதிகளவில் எதிர்பார்க்கப்படுவதுண்டு.

சமூக நடைமுறைகளுக்கு ஒவ்வாத விடயங்களான கொலை, கொள்ளை, போதைப் பொருள் கடத்தல், பாதாளக் குழுக்களின் நடவடிக்கை, ஏமாற்றுவேலைகள், பண மோசடி போன்றவை நடக்கும்போது அவற்றை மேற்கொண்டவர்களை உடனடியாகக் கைது செய்து சாதாரண பொது வாழ்விலிருந்து அவர்களை அப்புறப்படுத்தி வைத்திருக்கும் இடமே சிறைச்சாலை.

குற்றம் புரிந்தவர்களையும் குற்றம் புரிந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படுபவர்களையும் காவல்துறையினர் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும்போது அந்த நபரை நீதிவான் ஒருவரின் கட்டளைக்கிணங்கச் சிறைப்படுத்த முடியும் (குற்றம் நீதிமன்றத்தால் உரிய சாட்சியங்களின் மூலம் நிரூபிக்கப்படும்வரை அவரைச் சந்தேகநபர் என்ற அடிப்படையிலேயே கையாளவேண்டியிருக்கும். ஒருவர் தான் செய்த குற்றத்தைத் தானே ஏற்றுக்கொண்டால்கூட நீதிபதி தீர்ப்பு வழங்கும் வரை அவர் சந்தேகநபரே).

**இலங்கைச் சிறைகளில் இல்லாத விடயங்கள்**

ஒரு சந்தேகநபரை நீதிவானின் கோரிக்கைக்கிணங்கப் பொறுப்பேற்று அவரது குற்றம் தொடர்பில் விசாரித்து, அந்த விசாரணைகள் முடிவுக்கு வரும்வரை குறிப்பிட்ட நபரைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டியது சிறைச்சாலை நிர்வாகத்தின் கடப்பாடாகும்.

அத்தோடு ஒரு சிறைச்சாலையானது ஒரு கைதியின் பாதுகாப்பு, கரிசனை, மறுவாழ்வு ஆகிய 3 விடயங்களிலும் அக்கறை செலுத்தவேண்டும் என்பது சட்ட ஏற்பாடாகும். இந்த 3 விடயங்களும் இலங்கைச் சிறைச்சாலைகளில் எந்தளவுக்குப் பின்பற்றப்படுகின்றன என்பது கேள்விக்குறி.

சிறைச்சாலை ஒன்றின் முதன்மை ஏற்பாடான பாதுகாப்பு என்ற விடயம் கேள்விக்குறியானதன் விளைவே மகர சிறைச்சாலையில் அண்மையில் ஏற்பட்ட அசம்பாவிதங்களாகும்.

**மகர அசம்பாவிதம்**

1983ஆம் ஆண்டில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் நடந்த படுகொலை 2000ஆம் ஆண்டில் களுத்துறைச் சிறைச்சாலையில் நடந்த படுகொலைகள் என இதற்கு முன்பும் பல அத்துமீறல்கள் நடந்தன. அரசியல் கைதிகளாக இருந்த ஜே.வி.பி. இளைஞர்களுக்கும் இவ்வாறான பாதிப்புகள் கடந்த காலத்தில் இடம்பெற்றன. ஏற்கனவே இடம்பெற்ற கலவரங்களை விட அண்மையில் மகர சிறைச்சாலையில் இடம்பெற்ற அசம்பாவிதம் வித்தியாசமானது. கொரோனாத் தொற்றுக் காரணமாகச் சிறைக்குள் இறக்கவேண்டிய நிலை ஏற்படும் என்று கைதிகள் பயந்ததன் அடிப்படையிலேயே அவர்கள் குழப்பங்களை விளைவிக்கத் தொடங்கினர்.

பொதுவாகச் சிறைச்சாலைகளில் இருவேறுபட்ட நிலையில் கைதிகள் உள்ளனர். குற்றம் நிரூபிக்கப்பட்டுப் பல வருடச் சிறைத் தண்டனை, ஆயுள் தண்டனை, தூக்குத் தீர்க்கப்பட்டவர்கள் என உள்ள கைதிகள் வெள்ளை நிறக் காற்சட்டை மற்றும் வெள்ளை நிற மேலங்கியுடன் அங்கு இருப்பர். இவர்களை அச்சுக் கைதிகள் என்று அழைப்பது வழக்கம். இவ்வாறான கைதிகளே சிறைச்சாலைக்குள் சமையல்வேலை, தையல் வேலை, சலவை, தச்சு, நெசவு, பின்னல் வேலை மற்றும் அலுவலக உதவி என எல்லாவற்றையும் மேற்கொள்வர்.

மற்றையது தடுப்புக் காவலில் உள்ள கைதிகள். இந்த வகைக் கைதிகள் வழக்கு விசாரிக்கப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்படும்வரை அடைத்து வைக்கப்பட்டிருப்பர். இவர்களை ஆங்கிலத்தில் ''றிமாண்ட் பிறிசினர்ஸ்'' என்பர்.

**புதிய கைதிகளின் வருகையே காரணம்**

மகர சிறைச்சாலையில் ஏற்கனவே பல அச்சுக் கைதிகள் இருந்தவேளை, வேறு சிறைகளில் இருந்த பல புதிய கைதிகள் அங்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளனர். அவ்வாறு கொண்டு செல்லப்பட்டவர்களில் பலருக்கும் கொரோனாத் தொற்று இருக்கின்றது என்கிற தகவல் பரவியதை அடுத்து அவர்கள் மூலம் தமக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட வாய்ப்புண்டு

> புதிய கைதிகளுக்கு கொரோனாத் தொற்று இருக்கின்றது என்கிற தகவல் பரவியதை அடுத்து அவர்கள் மூலம் தமக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட வாய்ப்புண்டு என்று தெரிவித்து மகர அச்சுக் கைதிகள் கலகத்தில் இறங்கினார்கள்

என்று தெரிவித்து மகர அச்சுக் கைதிகள் கலகத்தில் இறங்கினார்கள் என்று கூறப்படுகிறது.

கலவரத்தில் இறந்த தடுப்புக் காவல் கைதிகள் 11 பேரில் 8 பேருக்குத் தொற்று இருந்தமை உறுதியுமாகியுள்ளது. இதை வைத்துப் பார்க்கும் போது அச்சுக் கைதிகளின் சந்தேகம் நியாயமானதாகப்படுகிறது.

**கடுமையான சிறைச்சாலை!**

மகர சிறைச்சாலை சாதாரண காலங்களில் ஒரு கடுமையான சிறைச்சாலை. இலங்கையில் உள்ள ஏனைய சிறைகளில் சிறைச்சாலை நிர்வாகத்தினருக்குத் தொல்லை கொடுக்கும் அல்லது முரண்படும் கைதிகள், சிறை உடைப்புக்கு முயல்வோர் எனப் பலரை உடனடியாக மகரவுக்கு மாற்றுவதுண்டு.

அங்கு அவர்களுக்குக் குளிக்கக் கூடத் தண்ணீர் வழங்கப்படுவதில்லை என்று அங்கு அடைக்கப்பட்டு வெளியேறிய கைதி ஒருவர் கூறினார். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் பலர் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

**சிறைச்சாலை அதிகாரிகளுக்குச் சுடும் அதிகாரம்**

காவல்துறை, தரைப்படை, கடற்படை, வான்படை என்பவற்றுக்கு இருக்கின்ற துப்பாக்கியால் சுடும் அதிகாரத்தைவிடத் துப்பாக்கிச் சூட்டை நினைத்த மாத்திரத்தில் மேற்கொள்வதற்கான சிறப்பு அதிகாரம் சிறை ஊழியர்களுக்கு உண்டு. இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. நீதிவான் மற்றும் நீதிபதியின் உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி தப்பி ஓடி விடாமலும், தற்கொலை செய்துவிடாமலும், வெறொருவரால் கொலை செய்து விடாத படியும், பார்த்துக்கொள்ளும் பொறுப்புச் சிறைச்சாலை நிர்வா கத்துக்குரியது.

மற்றைய காரணம், கைதியைச் சிறையிலிருந்து நீதிமன்றுக்கு அழைத்துச் செல்லும்போது கைதிகள் தப்பியோட முயற்சித்தால் அல்லது கைதியாக இருப்பவர் வழக்கின் முக்கிய சாட்சியாக இருந்து வெளியே இயங்கும் வேறு ஆயுததாரிகள் அவரைக் கொல்ல முயற்சிக்கும்போது தற்காப்புக்காகத் துப்பாக்கிச் சூடு செய்து அதைத் தடுக்கும் கடப்பாடு சிறைச்சாலை நிர்வாகத்துக்குரியது.


**மகரவில் சில முரண்கள்**

சிறைச்சாலைகளில் "லொக்கேசன் அதிகாரி" என்று ஒருவர் இருப்பார். அவர் ஒரு கைதியை எந்த அறையில் பூட்டுவது என்பதைத் தீர்மானித்துப் பதிவுப் புத்தகத்தில் பதிந்தபின்னரே குறிப்பிட்ட அறையில் அந்தக் கைதியைப் பூட்டுவது வழக்கம். திடீரென ஒரு கைதியை விசாரணைக்காக அல்லது வழக்குக்காக அழைக்கப்படும்போது அந்தப் பதிவை வைத்து உடனடியாக அந்தக் கைதி பூட்டப்பட்டிருந்த அறையைக் கண்டுபிடித்துவிடுவர். ஆனால் மகர சிறையில் கொல்லப்பட்ட 11 பேரில் 7பேர் மட்டுமே உடனடியாக அடையாளம் காணப்பட்டனர். இது மகர சிறைச்சாலையின் நடைமுறைகளில் முரண் இருப்பதைக் காட்டுகிறது.

மகர சிறையில் கைதிகள் முதன்மைக் கதவை உடைத்து வெளியேற முற்பட்டார்கள் என்பது முக்கிய குற்றச்சாட்டாக உள்ளது. அதனால் அவர்கள் கொரோனாப் பரவலை மக்களுக்குக் கொண்டுபோய்விடாதபடி கட்டுப்படுத்தினோம் என்கின்றனர் சிறை அதிகாரிகள்.

சிறைச்சாலைகளுக்குப் பொறுப்பான அமைச்சர் லொகான் ரத்வத்த (முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்தையின் மகன்) இறந்தவர்களில் யாரும் துப்பாக்கிச் சூட்டில் இறக்கவில்லை என்கிறார். ஒரு சிறைச்சாலை நிர்வாகத்தின் கடமையாகவுள்ள பாதுகாப்பு, கரிசனை, மறுவாழ்வு என்பன மகர சிறைச்சாலையில் கேள்விக்குறியாகியுள்ளன என்பதே இவற்றிலிருந்து புலப்படுகின்ற உண்மை.











# மலம் சேகரிக்கும் வினோதத் தேனீக்கள்...!

● நியாக்குட்டி

> "ராட்சதக் குளவிகள் அதிக மலம் கொண்ட இந்தப் படைகள் மீது தாக்குதல்களை நடத்தாமல் விலகிச் செல்வது கண்டறியப்பட்டுள்ளது."

தேன் வாங்குவதானால் தற்போதெல்லாம் ஒன்றுக்குப் பலமுறை யோசிக்க வேண்டியிருக்கிறது. காரணம் தேனில் கலப்படம் நிறைந்து கிடப்பதுதான். தூய்மையான தேன் என்று கூவிக் கூவி விற்றாலும் அதன் தூய்மை குறித்துச் சந்தேகப்படுமளவுக்குத் தேனின் மணமும் சுவையும் இருக்கின்றன.

வீதியோரங்கள், சந்தைகள் எனச் சாதாரண மனிதர்கள் கூவிக் கூவி விற்கின்ற தேனாகட்டும் பெரு நிறுவனங்கள் விளம்பரப்படுத்தி விற்கின்ற தேனாகட்டும் அனைத்துமே இயற்கையாகக் கிடைக்கின்ற தேனுக்கு அப்பாற்பட்டவையாகத்தான் இருக்கின்றன. தேனீக்கள் சேகரிக்கின்ற இயற்கையான தேன் கிடைப்பது என்பது முயற்கொம்பாக இருக்கிறது.

அவ்வாறிருக்கத் தேனீக்கள் மலத்தைச் சேகரிக்கத் தொடங்கியுள்ளன என்கிற 'பகீர்' தகவல் ஒன்று தீயாய்ப் பரவி வருகிறது.

**வியட்நாம் தகவல் இது...**

வியட்நாமில் உள்ள தேனீக்கள் தங்கள் கூடுகளைச் சுற்றி விலங்குகளின் மலத்தைச் சேகரித்து வைத்திருந்ததை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். தேனீக்கள் மலத்தைச் சேகரித்தமையை மாத்திரமல்ல அதற்கான காரணத்தையும் அவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இதிலிருந்து தேனீக்கள் தமது எதிரிகளை விரட்டுவதற்குக் 'கருவிகளை' (மலம்) பயன்படுத்துகின்றன என்றும் இதை ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். அதாவது பிற விலங்குகளிடமிருந்து தேனைப் பாதுகாப்பதற்காகத் தேன் சேகரிக்கின்ற கூட்டருகில் மல வாசனையைப் படரவிடுகின்றனவாம் தேனீக்கள். எருமைச் சாணம் மற்றும் மனிதச் சிறுநீர் ஆகியவற்றை இதற்காகத் தேனீக்கள் சேகரித்துள்ளன.

இந்தக் கண்டுபிடிப்புப் பற்றியும், அதன் பின்னாலுள்ள காரணிகள் பற்றியும் ''ப்ளொஸ் வன்' என்கிற இதழில் ஆராய்ச்சியாளர்கள் எழுதியுள்ளனர். தேனீ வளர்ப்பில் ஈடுபடுகின்ற வியட்நாமின் உள்நாட்டவர் ஒருவர் கூறியதற்கிணங்கத் தேடியபோதே இது கண்டறியப்பட்டது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

**தேனைப் பறிகொடுப்பதையும் தாக்குதல்களையும் தடுக்கும் திட்டம்**

தேனைச் சேகரிக்கின்ற தேனீக்கள் தமது கூட்டருகில் மலத்தைச் சேகரித்திருப்பதற்குக் காரணம் தாம் சேகரித்த தேனைப் பிற உயிரிகள் கையகப்படுத்துவதைத் தடுக்கவும், பிற உயிரிகளின் தாக்குதல்களில் இருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ளவுமே என்று தெரியவருகிறது. மாபெரும் ''ஹார்னெட்டுகள்'' என்று ஆங்கிலத்தில் அடையாளப்படுத்தப்படுகின்ற கொடிய இராட்சதக் குளவிகளின் தாக்குதல்களைத் தடுக்கவும் தேனின் வாசத்தை நுகர்த்துவந்து அவைபோன்ற பிற பெரிய தேனீக்கள் தேனைத் திருடுவதைத் தடுக்கவுமே சாதாரண தேனீக்கள் இவ்வாறு தமது கூடருகில் மலம் சேர்த்து மணம் படர விடுகின்றன என்று அமெரிக்காவின் மாசசூசெட்ஸில் உள்ள வெல்லஸ்லி கல்லூரியின் உயிரியல் பேராசிரியர் டொக்டர் மாட்டிலா கூறுகிறார்.

அத்தோடு வேட்டையாளர்களிடமிருந்து தாக்குதல்களைத் திசை திருப்புவதற்கும் தேனீக்கள் இது போல பலவிதமான உத்திகளைப் பயன்படுத்துகின்றன என்கிறார் அவர்.

**விலகி நடக்கும் எதிரிகள்**

ஆசியாவின் ராட்சதக் குளவிகள் சாதாரண தேனீக்களை விட ஐந்து மடங்கு பெரியவை. பலமானவை. ஒரு தேனிக் காலணியைச் சில மணிநேரங்களில் ஒரு பெருங் குளவியால் படுகொலை செய்ய முடியும். அந்தப் பெருங்குளவியால் மனிதர்களுக்குக்கூட ஆபத்தே. ஆனால், அந்த ராட்சதக் குளவிகள் அதிக மலம் கொண்ட இந்தப் படைகள் மீது தாக்குதல்களை நடத்தாமல் விலகிச் செல்வது கண்டறியப்பட்டுள்ளது.

தேனீக்களின் தேன் சேகரிக்கின்ற (அருகில் மலமும் சேகரித்துள்ள) பகுதியில் பெருங்குளவிகள் தரையிறங்கினாலும் அவை 94 சதவீதம் குறைவான நேரத்தையே அங்கு செலவிட்டன என்று கண்டறியப்பட்டுள்ளது. ஆசியத் தேனீக்களின் இந்த நுட்பம் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவில் உள்ள அவைகளது சகாக்களிடம் இல்லை என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். எது எப்படியோ... இனித் தேனீ சேகரிக்கும் தேனில்தான் மிகக் கவனமாக இருக்கவேண்டும் போல...? கலப்படம் பரவாயில்லை... மலம்...!!!




# ஏஞ்சலின் அறிவுரை...?



ஹொலிவூட்டின் பிரபல நடிகை. உலகிலேயே அதிக சம்பளம் பெறும் பிரபலங்களில் ஒருவர். உலகெங்கிலும் மனிதாபிமான நோக்கத்துடனான நற்பணிகளை ஊக்குவிப்பவர். ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான நிறுவனம் மூலம் ஏதிலிகளுடன் பணியாற்றி கவனத்தை ஈர்த்தவர். உலகின் மிகவும் அழகான பெண்களில் ஒருவர். திரைக்கு வெளியிலும் பரவலாகச் செய்திகளில் இடம்பிடிப்பவர். ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புத் தூதர் எனப் பல பரிமாணங்களில் மிளிர்பவர் ஏஞ்சலினா ஜோலி.

சிறந்த நடிகைக்கான ஒஸ்கர் விருதையும் பெற்றவர். பிரபல வார இதழுக்குப் பேட்டி அளித்துள்ள அவர் குடும்ப வன்முறை குறித்தும், அதிலிருந்து பெண்கள் தங்களைத் தற்காத்துக் கொள்வதற்கான வழிமுறைகள் குறித்தும் பல்வேறு தகவல்களை அறிவுரைகளாகக் கூறியுள்ளார்.

குடும்ப வன்முறையைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள். நண்பர்களை உருவாக்கிக் கொள்ள முயலுங்கள். அவசர உதவிகளுக்குத் தொடர்பில் இருங்கள். உதாரணமாக, உங்கள் நண்பரிடமோ அல்லது குடும்ப உறுப்பினரிடமோ உங்கள் இருவருக்கும் மட்டுமே புரியக்கூடிய வகையிலான சமிஞ்ஞை மொழிகளைக் கற்றுக் கொடுங்கள். உங்களுக்கு ஏதேனும் அவசர உதவி தேவைப்படும்போது அவற்றைப் பயன்படுத்தி அவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

சொல்வதற்குக் கவலையளித்தாலும் உங்கள் குடும்பம் மற்றும் நண்பர்களில் அனைவருமே உங்களை ஆதரிப்பார்கள் என்றில்லை. சிலவேளைகளில் உங்களுக்கு உதவுபவர்கள் அந்நியர்களாகவே இருக்கக்கூடும். அல்லது குடும்ப வன்முறையில் பாதிக்கப்பட்ட வேறு நபர்களாகவோ, ஆதரவுக் குழுக்களாகவோ இருக்கக் கூடும். அதேபோல பாதிக்கப்பட்டவர்கள்; உதவி கோரும்போது, அவர்களுக்கு உறுதுணையாக நில்லுங்கள் என்றுள்ளார்.

இதைவிடவும் அந்தச் செவ்வியில் ஏஞ்சலீனா பெருந்தொகை அறிவுரைகளை அள்ளி வழங்கியுள்ளார்.

● கமலநாதன்

# வெள்ள இடரும் தமிழரும்

இத்தகைய அநீதியைத் தமிழருக்குச் சிங்கள வரோ, முஸ்லிம்களோ இழைக்கவில்லை. தமிழர்களே இழைத்துக் கொண்டார்கள்.

தமிழ்நாட்டிலும் இலங்கையின் வடக்குக் கிழக்கில் தமிழர் வாழும் பகுதிகளிலும் புரவிப் புயல் மூலம் அதிகளவு மழை பெய்திருக்கிறது. 2015ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில் பெய்த மழையால் இந்தியாவின் சென்னை நகரம் வெள்ளத்தால் மூடப்பட்டது. அந்த மழைநீரால் கூவம் ஆறு சுத்தமாகக் கழுவப்பட்டிருந்தது.

இந்த அனுபவத்துக்கும் அதற்குப் பின்னர் முகம்கொடுத்த மழை மற்றும் வெள்ள அனுபவங்களின் தொடர்ச்சியாகவும் தற்போது மற்றொரு வெள்ள இடருக்கு அந்த மக்கள் முகம் கொடுத்திருக்கிறார்கள். புரவிப் புயலின் போக்கு, அது தரும் அதிக மழை பற்றி வானிலை அவதானிப்பாளர்கள் முன்னறிவித்தல்களை மேற்கொண்டதாலும், அதிலிருந்து தற்காத்துக்கொள்வதற்குரிய வழிவகைகளை முன்னெடுத்திருந்ததாலும் அங்கு உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன.

உரிய நேரத்தில் கழிவு வாய்க்கால்கள் தூர் வாரப்படவில்லை என்று இந்த வெள்ளம் தொடர்பில் விவசாயிகள் அதிகம் ஆதங்கப்பட்டிருந்தார்கள். கழிவு வாய்க்கால்களை மூடித் தனிநபர்களும், அரச துறையினரும் மதில் மற்றும் தடுப்புச் சுவர்களைக் கட்டி நீரின் போக்கை மாற்றியதும் சிறிய குளங்களை மூடிக் கட்டடங்களை எழுப்பியதும் தான் இதற்குக் காரணங்களாக இருக்க முடியும்.

**தமிழ்நாட்டில் உள்ளக மாற்றம்**

தமிழ் நாட்டில் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றம் அல்லது சமூக மாற்றத்தின் எதிரொலிதான் இந்த நீர் தேங்குவதற்குக் காரணம் என்பதை யாரும் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. பழைய பண்ணைமார்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள், நாட்டாமைமார் என இருந்த சமூகத் தலைவர்கள் தமது சொந்த ஊர்களை விட்டு வெளியேறியது தான் அந்தச் சமூக மாற்றம்.

> மனிதர்களின் செயற்பாடுகளால் பாதிப்படைகின்ற — மாற்றமடைகின்ற இயல்பு நிலைகளை மழை மற்றும் வெள்ள இடர்களுக்கு முன்னர் ஒழுங்கமைப்பதற்கு எவரும் இல்லாது போயிற்று

ஒரு பண்ணையார் அல்லது நாட்டாமை எனப்பட்டவர்கள் கூட்டுக் குடும்பமாக ஒரே வீட்டில் வாழ்ந்ததற்கு அப்பால் தை மாதம் தொடங்கி மார்கழி மாதம் வரை வருடம் முழுதும் தமது ஊரில் என்னென்ன விடயங்களைச் செய்யவேண் டும் என்பதைத் தீர்மானித்தார்கள். வருடம் தோறுமான தொழில் மற்றும் போகத்துக்குரிய வேலைகளில் அக்கறையுடன் இருந்தார்கள்.

உரிய நேரத்தில் வாய்க்கால்களைத் தூர் வாருவது, குளம், கம்மாய் (நீர் தேங்கி நிற்கும் சிறு தரவை நிலம்) போன்றவற்றைச் சீர்செய்வது, பருவ காலப் பயிர்களை விதைப்பது அல்லது நாட்டுவது, சடங்குகள் - சம்பிரதாயங்கள் கோவில் திருவிழாக்கள், ஆடு, மாடு, கோழி வளர்ப்பு என ஒரு கிராமத்தின் முழு நிர்வாகமும் போகத்துக்கேற்ப வேலைகளும் அவர்களால் திட்டமிடப்பட்டன.

அவர்களின் தலைமையில் ஊரிலுள்ளவர்கள் பணி செய்தார்கள். தற்போது அந்தக் கட்டமைவு குலைந்து கிடக்கிறது. இந்தக் கிராமத் தலைவர்களுக்கு வயதாகியும், காலம் சென்றும்விட அவர்தம் பிள்ளைகள் சென்னை, டெல்லி என்று பெரு நகரங்களை நாடியும், வெளிநாடு என்றும் படிப்பு மற்றும் தொழில் நிமித்தம் சென்று அங்கேயே தங்கிப் பின்னர் பெரு நகரங்களிலேயே குடியேறியும் விட்டமையே இதற்குக் காரணம். கடந்த 25 வருடங்களாக மிக வேகமாக இது நடந்தேறிக்கொண்டிருக்கிறது.



**மாற்றுத் தலைமைகள் இல்லை**

கிராமத் தலைவர்கள் இல்லாமல்போக அவர் தம் பிள்ளைகளும் கிராமங்களைவிட்டு வெளியேறிவிட அந்தக் கிராமங்களில் இவ்வாறான ஒழுங்குபடுத்தல்களைச் செய்வதற்கு மாற்றுத் தலைமைகள் உருவாக்கப்படவில்லை. பண பலமும் தலைமைத்துவப் பண்பும் இல்லாத அடிமட்டத்தவர்கள் கையறு நிலைக்குத் தள்ளப்பட்டனர். தற்போது கிராமங்களில் அரசியல் தலைவர்களின் செல்வாக்கு மேலோங்கியிருக்கிறது.

வாய்க்கால்களைத் தூர் வாருவதில் அசமந்தம், குளங்களைச் சீர்திருத்தாது இருத்தல் ஆகியவற்றுடன் வயல் நிலங்களூடாக முதன்மை வீதிகளை அமைப்பது, அதியுயர் மின் தொலைத் தொடர்புக் கோபுரங்களை அமைப்பது, அவற்றை எதிர்க்கின்ற கிராமத்தவர்களைப் பழிவாங்குவது, மண், கல் போன்ற கனிய வளங்களைச் சூறையாடி விற்பது எனப் பல்வேறு வேண்டத்தகாத விடயங்கள் இவர்களின் ஆதிக்கத்தால் கிராமங்களில் மலிந்தனவே தவிர உருப்படியான காரியங்கள் எவையும் நடக்கவில்லை.

அதாவது மனிதர்களின் செயற்பாடுகளால் பாதிப்படைகின்ற - மாற்றமடைகின்ற இயல்பு நிலைகளை மழை மற்றும் வெள்ள இடர்களுக்கு முன்னர் ஒழுங்கமைப்பதற்கு எவரும் இல்லாது போயிற்று.

**பெரு நிறுவனங்களின் செயற்பாடு**

'கோர்ப்பிறேட்' எனப்படும் தனியார் முதலீட்டு நிறுவனங்களின் தொழிற்சாலைகள் என்பன இயற்கையையும் கிராமங்களையும் குழப்பி விட்டன. கிராம மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் கண்டு கொள்ளப்படாது போயின.

இந்தியாவில் போன்றதான நிலமைகள் வடக்குக் கிழக்குத் தமிழர்கள் வாழும் பகுதிகளில் காணப்படாவிட்டாலும் யாழ். குடாநாட்டில் பல குளங்கள், ஏரிகள், குட்டைகள், துரவுகள் என் பன மூடப்பட்டுக் கட்டுமானங்களை எழுப்பிய காரணத்தால் வெள்ள இடருக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது.

மழைநீரை உரியவாறு தேக்கி வைக்கவோ, நிலத்தடி நீராக்கவோ, தேவையற்ற உபரி நீரை உரிய நேரத்தில் கடலைச் சென்றடைய வைக்கவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பல குளங்களில் குடியிருப்புகள் அமைக்கப்பட்டுவிட்டன. யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரை திட்டமிட்டுப் பல நீரேரிகளில் குப்பை கொட்டிப் பின்னர் ஆடு, மாடு, கோழிக் கழிவுகளைக் கொட்டி (காணியைப் பிடிக்கத் திட்டமிட்டவர்கள் வேண்டும் என்றே இதைச் செய்தனர்) அந்த இடத்தில் துர்நாற்றம் வீசுகிறது என்று அரச அதிகாரிகளிடம் முறையிட்டு அவர்களைக் கொண்டு தமது விருப்பத்துக்கு ஏற்றபடி அந்தக் குளங்களையும் குட்டைகளையும் மூட வைத்திருக்கிறார்கள்.

நில அளவைத் திணைக்கள வரைபடங்கள், நீர்ப்பாசனத் திணைக்கள வரைபடங்கள், வீதி தொடர்பான வரைபடங்கள் என 1950, 60களில் யாழ்ப்பாணத்தின் நிலைமையை ஆராய்ந்தால் இந்த மாற்றத்தை அடையாளம் காணமுடியும். இதைவிடத் தொடர்வண்டிக்கென அமைக்கப்பட்ட வீதி, நெடுஞ்சாலைகள், பாலங்கள், மதகுகள், கொங்கிறீட் வீதிகள் என அமைக்கும்போது மேற்குறித்த திணைக்களங்கள் இணைந்து பணியாற்றாததன் காரணமாகப் பல கழிவு வாய்க்கால்கள் மூடப்பட்டும் மண் நிரம்பியும் இருக்கிறது. இத்தகைய அநீதியைத் தமிழருக்குச் சிங்களவரோ, முஸ்லிம்களோ இழைக்கவில்லை. தமிழர்களே இழைத்துக் கொண்டார்கள்.

இதுபற்றித் துறைசார்ந்த அதிகாரிகளிடம் தொலைபேசியில் கேட்டால் ''செய்தவனைப் போய்க் கேள்'' என்று திமிராகப் பேசுகிறார்கள். அதாவது தாங்கள் பதவியில் இருக்கும்போது அவை நிகழவில்லையாம், தமக்கு முன்னர் பதவியில் இருந்த பொறியாளர்களின் காலத்தில் நிகழ்ந்ததால் அவர்களிடமே அது பற்றிக் கேள்வி கேட்கட்டுமாம்! நல்லாயிருக்கிறது பொறுப்புக் கூறல். இப்படியிருந்தால் ஒவ்வொரு மழை காலத்திலும் இனிமேல் இதுதான் கதி!



# விதி மாற்றிய விதி!

## மாற்றுவீரர் சர்ச்சையால் மண் கவ்விய ஆஸ்திரேலியா

■ சி.விமலன்

கடந்த வாரம் நடைபெற்று முடிந்த இந்திய - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 20/20 துடுப்பாட்டத் தொடரில் இந்தியா 2 - 1 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது. முதலிரு போட்டிகளிலும் வென்று தொடரைக் கைப்பற்றியது இந்தியா. மூன்றாவது போட்டியை ஆஸ்திரேலியா வென்றது.

முதலாவது போட்டியில் காயமடைந்த ஜடேஜாவிற்குப் பதிலாக சஹல் களமிறங்கியமை சர்ச்சையை ஏற்படுத்தியது. இது தொடர்பான ஐ.சி.சியினுடைய 1.2.7 விதியின்படி ஒரு வீரருக்குப் பந்து தலையிலோ அல்லது தொண்டைப் பகுதியிலோ தாக்கி விளையாட முடியாத பட்சத்தில் அவருக்குப் பதிலாக இன்னொரு வீரரை மாற்று வீரராக (Concussion Substitute) களமிறக்க முடியும்.


வழமையாக இது போன்ற சந்தர்ப்பத்தில் களமிறங்கும் வீரர் களத் தடுப்பில் மட்டுமே ஈடுபட முடியும். ஆனாலும் 2019ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய விதியின்படி காயமடைந்த வீரர் துடுப்பாட்ட வீரராக இருந்தால் அவருக்குப் பதிலாக இன்னொரு துடுப்பாட்ட வீரரையும் காயமடைந்த வீரர் ஒரு பந்து வீச்சாளராக இருந்தால் அவருக்குப் பதிலாக இன்னொரு பந்துவீச்சாளரையும் பயன்படுத்தலாம். அதேவேளை துடுப்பாட்ட வீரர் ஒருவர் காயமடைந்தால் அவருக்குப் பதிலாக ஒரு சகலதுறை வீரர் களமிறக்கப்படும் பொழுது அவரைப் பந்து வீசாமல் தடுப்பதற்கான அதிகாரம் போட்டி நடுவருக்கு உண்டு.

பந்து தலையில் பட்டு ஒரு வீரர் மூளை அதிர்ச்சியினால் வெளியேறும் போது அவ்வணிக்குத் தீமை ஏற்படாமல் இருப்பதைத் தவிர்ப்பதற்கே இந்த விதி அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் மூலம் காயமடைந்த வீரரின் அபாயத்தைத் தொடக்கத்திலேயே தடுக்க முடியும். 2019 ஆவணி (ஒகஸ்ட்) மாதம் நடைபெற்ற ஆஷஸ் தொடரில் அறிமுகமான இந்தப் புதிய விதியின் பிரகாரம் லோர்ட்ஸில் நடைபெற்ற போட்டியில் ஸ்ரீவ் ஸ்மித், ஜோப்ரா ஆர்ச்சரின் பந்துவீச்சில் தலையில் காயமடைந்து வெளியேறிய பொழுது மர்னஸ் லபுசான் இந்த விதியில் அறிமுகப்படுத்தப்பட்ட முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

இந்த விதியின் அடிப்படையிலேயே இந்திய - ஆஸ்திரேலியப் போட்டியில் ஜடேஜாவிற்குப் பதிலாக சஹல் களமிறக்கப்பட்டார். போட்டியின்போது மிட்செல் ஸ்ரார்க்கின் பந்து 49.2 ஓவரில் ஜடேஜாவின் தலையில் படுவதற்கு முன்னதாகவே தசைப்பிடிப்பால் அவர் அவதிப்பட்டு வந்திருந்தாலும் அணியின் நெருக்கடியான சூழலைக் கருதி அவர் தொடர்ந்தும் வலியோடு துடுப்பாடி இருந்தார். பந்து தலையில் பட்டபோது இன்னமும் நான்கு பந்துகள் மாத்திரமே மீதமிருந்த காரணத்தால் தொடர்ந்து விளையாடியும் உள்ளார்.

இந்நிலையில்தான் ஆஸ்திரேலிய அணியின் தலைமைப் பயிற்சியாளரான ஜஸ்ரின் லாங்கர், சஹலின் களமிறக்கலுக்குத் தனது எதிர்ப்பை போட்டி நடுவரான டேவிட் பூனிடம் தெரிவித்தார். பந்து ஜடேஜா தலையில் பட்டும் மைதானத்திற்குள் இந்திய அணியின் மருத்துவரோ, பிசியோதெரபிஸ்டோ வராத காரணத்தால் தலையில் பந்து பட்டதனால் அவர் களமிறங்கவில்லை மாறாகத் தசைப் பிடிப்பின் காரணமாகவே ஜடேஜா களமிறங்காமல் இருந்துள்ளார், எனவே ஐ.சி.சியினுடைய புதிய விதியின்படி சஹல் விளையாடப் போட்டி நடுவர் வாய்ப்பளித்தமை தவறு, அத்தோடு ஜடேஜா விரல்களைப் பயன்படுத்தி பந்துவீசுபவர் ஆனால் சஹல் மணிக்கட்டைப் பயன்படுத்தி பந்துவீசுபவர், இதனால் தங்களது துடுப்பாட்ட வியூகத்திற்கு இது பாதிப்பாகலாம் என்றும் லாங்கர் எதிர்ப்புத் தெரிவித்தார்.

இது குறித்து விராட் கோலி, "ஜடேஜாவுக்கு தலையின் ஒரு பக்கத்தில் பந்து தாக்கியதால் இன்னும் கொஞ்சம் கிறுகிறுப்பு இருக்கிறது" என்று பரிசளிப்பின்போது கூறியிருந்தார். ஜடேஜா பந்து தலையில் பட்டதனால் தான் விளையாடவில்லையா அல்லது தசைப்பிடிப்பால்தான் விளையாடவில்லையா என்ற உண்மை இந்திய அணிக்கே வெளிச்சம்.



அந்த வகையில் ஜஸ்ரின் லாங்கரின் கருத்தில் உண்மை இல்லாமல் இல்லை என்றாலும் சஹல் மணிக்கட்டைப் பயன்படுத்திப் பந்து வீசுபவர் என்பதனால் அது துடுப்பாட்ட வியூகத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று அவர் கூறியதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இந்தப் போட்டியில் சஹல் 3 முக்கிய விக்கெட்டுக்களைக் கைப்பற்றி வெற்றிக்கு காரணமாக அமைந்தார். ஆட்டநாயகன் விருதையும் பெற்றுக்கொண்டுள்ளார் என்பது உண்மைதான். ஆனாலும் ஒரு தொடர் தொடங்குவதற்கு முன்னதாகவே எதிரணியினருக்கான வியூகங்களை எவ்வாறு அமைப்பது, அதன் பந்து வீச்சாளர்களை எவ்வாறு எதிர்கொள்வது போன்ற விடயங்களை ஒவ்வொரு அணியும் முற்கூட்டியே தயார்ப்படுத்தி வைத்திருக்கும். அதிலும் தற்போது இந்திய அணியில் தவிர்க்க முடியாத பந்துவீச்சாளரான சஹலின் சுழலைச் சந்திப்பதற்கான அனைத்து திட்டங்களையும் அவர்கள் அறிந்தே வைத்திருப்பார்கள். இந்த நிலையில் ஜஸ்ரின் லாங்கரின் கருத்து வியப்பை ஏற்படுத்துகின்றது.

அத்தோடு ஆஸ்திரேலிய அணியினர் சஹலின் பந்து வீச்சை எதிர்கொள்வது இத்தொடரில் இது முதன் முறையல்ல. ஏற்கனவே நடைபெற்ற ஒரு நாள் தொடரில் ஆஸ்திரேலிய அணியினர் அவரது பந்தைச் சிறப்பாக எதிர்கொண்டதோடு போட்டி ஒன்றில் அதிகளவான ஓட்டங்களை(89) கொடுத்த இந்தியச் சுழற்பந்து வீச்சாளர் என்ற மோசமான சாதனையை முதல் ஒருநாள் போட்டியில் சஹல் படைப்பதற்கும் காரணமாக இருந்துள்ளனர்.

அத்தோடு இரண்டாவது ஒருநாள் போட்டியிலும் சஹல் 71 ஓட்டங்களை வாரி வழங்கியும் இருந்தார். அதனால்தான் இந்தப் போட்டியில் ஆடும் பதினொரு பேரில்கூட அவர் உள்ளடக்கப்படவில்லை. எனவே ஜஸ்ரின் லாங்கரின் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

*ஐ.சி.சி. மாற்று வீரர்கள் விதியில் ஒரு பந்து வீச்சாளருக்குப் பதிலாக இன்னொரு பந்து வீச்சாளரைப் பயன்படுத்தலாம் என்று உள்ளதே தவிர பந்துவீச்சு முறைகள் குறித்தொன்றும் கூறப்படவில்லை.*

அதேவேளை ஜடேஜாவிற்குப் பதிலாகப் புதிய தொரு வீரர் மாற்று வீரராக அறிமுகப்படுத்தப்பட்டிருந்தால் அது சிலவேளைகளில் ஆஸ்திரேலிய அணியினருக்கு நெருக்கடியை உண்டு பண்ணியிருக்கலாம். அத்தோடு ஐ.சி.சி. மாற்று வீரர்கள் விதியில் ஒரு பந்து வீச்சாளருக்குப் பதிலாக இன்னொரு பந்து வீச்சாளரைப் பயன்படுத்தலாம் என்று உள்ளதே தவிர பந்துவீச்சு முறைகள் குறித்தொன்றும் கூறப்படவில்லை.

ஜடேஜா சகலதுறை வீரராக இருப்பதனால் அவருக்குப் பதிலாக இன்னொரு சகலதுறை வீரரே களமிறக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இந்திய அணியில் மாத்திரம் அல்ல இன்று விளையாடும் சர்வதேச அணிகளின் சகலதுறை வீரர்கள் அனைவரையும் கூட்டினாலே விரல் விட்டு எண்ணி விடக் கூடிய நிலையே காணப்படுவதனால் சகலதுறை வீரருக்குப் பதிலாக இன்னொரு சகலதுறை வீரரை மாற்று வீரராகக் களமிறக்குவதென்பது நடைமுறைச் சாத்தியம் அற்றதே. ஏனென்றால் அணியில் இருக்கும் ஒன்றிரண்டு சகலதுறை வீரர்களும் ஆடும் 11 பேரில் விளையாடினால் மாற்று வீரராக இன்னொரு சகலதுறை வீரர் களமிறங்க வாய்ப்பே இல்லை.

உண்மையில் ஐ.சி.சியினுடைய இந்தப் புதிய விதியின்படி இந்தப் போட்டியில் பந்து பட்டதனால் ஏற்பட்ட மூளை அதிர்ச்சியை அணியின் மருத்துவராலோ, பிசியோவாலோ முறையாகக் கண்டறியப்பட்டு இருக்க வேண்டும். அவர்கள் காயமடைந்த வீரரைப் பரிசோதனை செய்து அவர் உண்மையிலேயே காயமடைந்திருக்கிறார் என்றோ, அதன் பாதிப்பு இன்னமும் இருக்கிறது என்றோ உறுதிப்படுத்திப் போட்டி நடுவரிடம் மாற்று வீரருக்கான கோரிக்கையை விண்ணப்பத்தில் கொடுக்க வேண்டும். ஆனால் ஜடேஜா விடயத்தில் இங்கு நடைபெற்றது என்னவென்றால் பந்து பட்டவுடன் மைதானத்திற்குள் மருத்துவரோ, பிசியோவோ வரவில்லையே தவிர ஏனைய நடைமுறைகள் இந்திய அணியால் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன. இந்த விடயத்தை முன்னாள் வீரர்களான சஞ்ஜே மஞ்ரேக்கர், ரொம் மூடி போன்றவர்களும் முன்வைத்துள்ளார்கள்.

அதேவேளை பந்து தலையில் படும்போது உடனடியாகவே அந்த நேரத்தில் மூளை அதிர்ச்சி ஏற்படும் என யாரும் சொல்ல முடியாது. 24 மணி நேரத்திற்குள் அறிகுறிகளைப் பெறலாம். ஒரு துடுப்பாட்ட வீரராக எனக்கு அந்த அனுபவம் பல தடவைகள் ஏற்பட்டிருக்கின்றது. எனவே இந்திய அணியினர் சரியாகத்தான் இந்த விதியைப் பயன்படுத்தி உள்ளனர் எனக்கூறியுள்ளார் முன்னாள் வீரர் விரேந்திர ஷேவாக்.

தற்போது இது குறித்து ஒரு சர்ச்சை தோன்றியுள்ள நிலையில் மாற்று வீரர்களின் இந்தப் புதிய விதி விடயத்தில் அதை நியாயமான முறையில் பயன்படுத்துவதை ஐ.சி.சி. உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகின்றது. அத்தோடு இந்தச் சர்ச்சை தலையில் பந்து பட்டு வீரர்கள் வெளியேறும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் அல்லாது போட்டியின்போது வேறு வகையிலும் எதிர்பாராமல் காயமடைந்து விளையாட முடியாது வெளியேறும் வீரர்களுக்குப் பதிலாக மாற்று வீரர்களை அனுமதிக்கும் புதிய விதியை மீள்பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் உணர்த்துவதாக உள்ளது. ■

■ கதிரேசன் காத்தவராயன்

# வெள்ளமோ? கடலுக்கைவிடு! குடிதண்ணியோ? இரணைமடுவைக் கொண்டுவா!

?

தண்ணி நிக்கவேண்டிய இடங்களை யெல்லாம் அடாத்துப் பண்ணியோ மலிவாய் வாங்கியோ குடிமனையாக்கினது ஆற்றை பிழை? ஆக்கவிட்டது ஆற்றை பிழை?



“இஞ்சையெங்கை மழை பெய்யப் போகுதெண்ட திமிரோடை அபிவிருத்தி மிதப்பிலை இருந்த ஆக்களுக்கு நல்ல பாடமல்லே நடத்திக் காட்டியிருக்குது இயற்கை. எங்கடையாக்களுக்கு இருக்கிறதெல்லாம் எங்களுக்குத்தான் தெரியுமெண்டிற தலைக்கனம் கரைஞ்சுது பாத்தியளே? “எண்டு சொல்லிக்கொண்டே அதிலை பெரியமதவுக்குப் பக்கத்திலை றோட்டுக்கு மேலாலை பாயிற வெள்ளத்தைப் பாத்துக் கொண்டு நிண்ட மணியத்தாருக்கும் கந்தையருக்கும் கிட்டப் போனன்.

“ஓஓ கதிரேசண்ணை! வாவா...நீ நெடுகவும் சொல்லுற விசயந்தான் நடந்திருக்குது.. அண்டைக்கொருநாள் சொன்னனியல்லே தண்ணியிலை முட்டாமல் பாலங்கட்டிறாங்களெண்டு? இப்பதானே அது எனக்கு விளங்கிச்சுது! மதவு தன்பாடுவெள்ளம் தன்பாடு... அங்கபாரன்... நீநெடுகவும் இதுகளைச் சொல்லேக்கை உங்கை சில பேர் கதிரேசுவுக்கு தண்ணியிலைஆரோ சூனியம் செய்திட்டாங்கள் போலை எண்டு சிரிச்சவை கண்டியோ! இப்ப விளங்கியிருக்கும்...” எண்டார் மணியத்தார்.

“இதுகளை முதலே யோசிச்சுச் செய்யிறதுக்கு ஆளில்லை எண்டாகிப் போச்சு... அரசியலும் அப்பிடி நிர்வாகமும் அப்பிடி திட்டமிடலும் அப்பிடி....எங்கடை தலையெழுத்து எண்டு கந்தையர் கவலைப்பட்டதிலை நியாயம் இருக்கோ இல்லையோ? அந்தந்த நேரத்துக்கு அலுவல் பாக்கிற ஆக்கள்தானே எங்களிட்டை எல்லா இடங்களிலையும் இருக்கினம்...முன்யோசினை எண்டது கொஞ்சமும் இல்லையல்லே எங்கடையாக்களிட்டை?” எண்டபடியே அங்கை சம்பர் வந்தார்.

“அட..! சம்பண்ணை என்னத்திலை வாறியள்? போட்டிலையே? உங்கடை பக்கம் குளமாயல்லே மாறிப்போயிருக்கெண்டறிஞ்சம்?” எண்டு நான் கேட்டன். அதுக்குச் சம்பர் ஒரு சிரிப்புச் சிரிச்சார். பிறகு, “அது கதிரேசண்ணை உங்கடை பாசையிலை சொல்லுகிறதெண்டால் ஊருக்கை தண்ணி வரயில்லை. ஊர்தார் தண்ணிக்கை போட்டுது. என்னவிளங்குதே நான் சொல்லுறது?... மூண்டு குளங்களும் அதுகளைத் தொடுக்கிற வாய்க்காலுகளும் இருக்கவேண்டிய இடங்களிலை நாங்கள் போய்க் குந்தினம். இப்ப....? காலைமை குந்திற கொமேட்டுக்கு மேலாலை அரையடித் தண்ணி நிக்குது. அந்த அலுவலுக்கும் ஆற்றையன் வீட்டை போகவேண்டினதாய்ப் போச்சு எங்கடைபாடு எண்டு பெருமூச்சு” விட்டார் சம்பர்.

“உதுகளைத்தான் நான் நெடுகவும் மூச்சுக்கு மூச்சு சொல்லுறனான் கண்டியளோ. உந்த வயற் காணியள், குளக் காணியள், வாய்க்காலுகளைப் பிடிச்சு ஆக்கின காணியள் தரவைக் காணியள் எண்டு தண்ணி நிக்கவேண்டிய இடங்களையெல்லாம் அடாத்துப் பண்ணியோ மலிவாய் வாங்கியோ குடிமனையாக்கினது ஆற்றை பிழை? ஆக்கவிட்டது ஆற்றை பிழை? தண்ணி எப்பவும் சின்னக் குளங்கள் குட்டையளிலை நிறைஞ்சு நிலத்துக்கை போறது போக மிஞ்சினது பெரிய குளங்களிலை தேங்கிக்கொள்ளும். அதுகும் நிறைஞ்சு தெண்டால் கடலுக்கைபோகும். இது இயற்கை. நாட்டுக்குள்ள தங்கின தண்ணிதான் நிலத்துக்குக் கீழையாய்த் தேங்கி நிக்கும் அதைத்தான் நாங்கள் கிணத்தை வெட்டி வெளியில எடுக்கிறம். ஆறுகளே இல்லாத யாழ்ப்பாணத்தானுக்குள்ள ஒரே நல்ல தண்ணி வாய்ப்பு இதுதான். அதைத் துலைச்சுப்போட்டுத்தான் போத்தில் தண் ணிக்கு அடிபடுகிறம்...” மூச்சு வாங்கநிப் பாட்டினன்.

அதிலை நிண்டவை ஒண்டுமே சொல்லேல்லை.

அப்பதான் அங்கை வந்த தம்பர் “அண்ணை! வெள்ளம் பெரிசாப் போட்டது நன்மைக்குத்தான் போலை! இல்லையெண்டால் கடல் தண்ணி ஊருக்கை வந்திருக்குமாமல்லே? நில மட்டத்தை விடக் கடல்த் தண்ணி மூண்டு நாலு நாளாய் ஒரடி வரையிலை உயரமாயாமல்லே நிண்டதாம். கதிரேசண்ணை சொன்ன மாதிரி நல்லதண்ணியைக் கடலுக்கைவிடவெண்டு கோடிக்கணக்கிலை சிலவழிச்சுக் கட்டின வாய்க்காலுகளுக்குள்ளாலை கடல் இஞ்சைவரைக்கும் வந்திருக்கும் என்ன?” எண்டார்.

“என்ன தம்பர்! உன்ரை மேள் வீட்டுப் பக்கம் வெள்ளத்தாலை கடுங் கஸ்ரம் எண்டறிஞ்சன்... என்னவாம்?“ எண்டார் கந்தையர். “ஓஓ! புங்குடுதீவுப் பக்கத்தைக் கேக்கிறியளே? மேள் வீட்டடி முழுதும் முந்தி ஒரு குளமாயிருந்ததாம். உயர் பதவிக்காற ஆளொராள் ஊர்ச் சனம் சொல்லச் சொல்ல அப்பாவிச் சனத்தைப் பிடிச்சு அதுக்குள்ள ஒரு இருவத்தைஞ்சு வீட்டைக்கட்டி இருத்திக் கறன்டும் குடுத்தவராம். சின்ன மழைக்கும் போறவாற பதை சரியில்லையெண்டு அந்தச்சனம் குறைப்பட அதையும் அங்கையிஞ்ச சண்டை போட்டு: வெருட்டிப் போட்டாச்சாம். இப்ப வீட்டுக்குள்ளையே நாலைஞ்சடியிலை தண்ணி நிக்குதாம். குளந்தான் பாவம் என்னண்ணை?” எண்டார் தம்பர்.

“அது சரிதான் பாருங்கோ மேலிடங்களின்ரை முட்டாள்தனமான வேலையளாலை பாதிக்கப்படுறது பாவங்கள் சனங்களில்லே? அதிகாரியின்ரை திட்டமெண்டாலுஞ் சரி அமைச்சரின்ரை திட்டமெண்டாலுஞ் சரி காசைக்கரியாக்கிச் சனத்தை நடுறோட்டிலை விடுகிறதாயில்லே முடியுது? எங்களுக்கு எப்பதான் நல்லமுடிவுகள் கிடைக்கப் போகுதோ?” எண்டு அங்கலாச்சார் சண்முகத்தார்.

“ஒண்டு சொல்லட்டே? ஏசீ அறையுக்கையும் சொகுசு வாகனங்களிலையும் இருந்துகொண்டு, வந்து கிடக்கிற காசை முடிக்கிறதைப் பற்றி யோசிக்காமலுக்கு இருக்கவேணும். அதிலையும் முக்கியமாய் வெள்ளத்தைப் பற்றி வெள்ளத்துக்கை நிண்டு முடிவெடுக்கிறதைவிட சனம் குடிதண்ணிக்குக் குடத்தோடை அலையிறநேரம் யோசிக்கவேணும். குடிதண்ணிப் பிரச்சினையை கழுத்தளவு வெள்ளத்துக்கை நிண்டு யோசிக்கவேணும். ரண்டுமே ஒண்டுதான். இது ரண்டையும் இப்பிடி மாத்தி யோசிச்சால் வெள்ளப் பிரச்சினையும் வராது குடிதண்ணிப் பிரச்சினையும் வராது. இல்லையெண்டால் மாதன முத்தான்ரை ஆட்டுக்குட்டி - பானைக் கதைதான் தொடந்தும் நடக்கும் எண்டு நான் சொன்னது விளங்கயில்லையோ?

வெள்ளமோ....! வெட்டிக் கடலுக்கைவிடு.... நல்லதண்ணி இல்லையோ! இரணைமடுவுக்கு பைப்பைப் போடு! விளங்கிச்சுதோ? மண்டை விறைக்குது.... வரட்டே போட்டு” எண்டபடி வீட்டை வந்திட்டன்.



# பிரிட்டனைக் கடந்து வருமா மருந்து...?

● பொன்வண்டு

இலங்கையில் மட்டுமல்லாமல் பெருந்தொற்றின் பரவல் அதிகரித்து உலகம் தொற்றின் பிடிக்குள் சிக்கியிருக்கின்றது.

அடுத்தடுத்துப் பல தடுப்பூசிகள் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. பல நாடுகள், பல்கலைக் கழகங்கள், ஆராய்ச்சிக் குழுக்கள் எனப் பல தரப்பினரும் இந்தப் பெருந்தொற்றைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்கான தடுப்பூசிக் கண்டுபிடிப்புகளை முடுக்கிவிட்டுள்ளனர். தடுப்பூசிகள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனாலும் அவை அனைத்தும் இன்னமும் ஆராய்ச்சிக் கட்டத்திலேயே இருக்கின்றன.

இந்தத் தடுப்பூசிகள் விடயத்தில் கண்டுபிடிப்புத் தரப்பு முகம்கொடுக்கின்ற முக்கிய சாவால்கள் இரண்டு. வீரியம் மிக்க கொரோனா வைரஸ் குடும்பத்தின் கொவிட் 19 வைரஸுக்கு எதிராகத் திறம்படச் செயலாற்றுவது என்பது அதில் முதன்மையானது. அத்தோடு இந்தத் தடுப்பூசிகளைப் பயன்படுத்திய பின்னர் பக்கவிளைவுகள் எவையும் மனிதர்களுக்கு ஏற்படக் கூடாது. இவையிரண்டும் இந்தத் தடுப்பூசித் தயாரிப்பில் பெரும் சவாலாகவே இருக்கின்றன.

இந்தச் சவால்களைத் தகர்த்தது என்று உலக சுகாதார நிறுவனத்தால் அங்கீகாரம் கிடைக்கின்ற தடுப்பூசியே பாவனைக்கு வரும் என்பதால் தற்போதுவரை பல தடுப்பூசிகள் பல்லாயிரக் கணக்கான மனிதர்களுக்கு ஏற்றப்பட்டுப் பரிசோதனைக் கட்டத்தில் இருக்கின்றன.



“ பைஸர் என்கிற அங்குள்ள இந்த நிறுவனத்தின் தடுப்பூசியின் முன்னேற்ற மான நிலைகள் மேம்படுத் தப்பட்டு இன்றைக்கு அது மனிதர் களுக்குச் செலுத்தப் பட்டுள்ளது. ”

### முன்னேற்றகரமான தடுப்பூசிகள்

கொரோனா வைரஸிடமிருந்து மனிதர்களைக் காக்கக் கூடியது என்று பரிந்துரைக்கப்பட்டிருக்கின்ற ரெம்டெசிவிர் என்கிற மருந்து ஆய்வுகூட ஆய்வைத் தாண்டி மனிதர்கள் மீது செலுத்தி ஆய்வு செய்வதற்கு அனுமதிக் கட்டத்துக்கு வந்திருந்தது. அதைத் தொடர்ந்து பம்லனிவிமப் (**Bamlani vimab**) எனப்படும் மொனொகுளோனல் சிகிச்சைமுறைக்கும் உலக சுகாதார அமைப்பு அனுமதி அளித்தது.



இதைவிட அமெரிக்க அதிபர் ட்ரம்புக்குத் தொற்று ஏற்பட்டபோது செலுத்தப்பட்டு அவரைத் தொற்றிலிருந்து விடுவித்த இராணுவப் பயன்பாட்டுத் தடுப்பூசி குறித்தும் ஆராயப்பட்டு வருகிறது. இந்த நிலையில் இவற்றையெல்லாம் தாண்டிப் பைஸர் எனப்படும் மருந்துப்பொருள் உற்பத்தி நிறுவனம் தயாரித்த தடுப்பூசி ஒன்று வெகு முன்னேற்ற நிலையை அடைந்து அனைவரது கவனத்தையும் ஈர்த்திருந்தது.

பரிசோதனைக் கட்டத்தின் போது அந்தத் தடுப்பு மருந்து செலுத்தப்பட்டவர்களில் 90 வீதமானோரிடத்தில் வெற்றிகரமான பெறுபேற்றைத் தந்திருந்தது. 43 ஆயிரத்து 500 பேருக்குச் செலுத்தி இந்த மருந்தைப் பரிசோதித்தபோது பெரியளவில் பக்கவிளைவுகளை ஏற்படுத்தாமல் கொவிட் 19 தொற்றுக்கு எதிராகச் செயற்பட்டு அதைத் தோற்கடித்திருக்கிறது என்பது தெரியவந்தது.

பரிசோதனைக் கட்டத்தில் வெற்றிகரமாகச் செயலாற்றிய இந்தத் தடுப்பூசியை மனிதர்களுக்குச் செலுத்துவதற்கு அனுமதி கோரவிருப்பதாக அதைத் தயாரித்த நிறுவனம் சார்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்தோடு இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட தடுப்பூசிகளில் சிறந்தது என்றும் அதற்குப் புகழாரம் சூட்டப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அந்தத் தடுப்பூசி குறித்து இறுதியாக வெளியாகிய தகவல் அதன் வெற்றிகரத் தன்மையைப் பறைசாற்றியுள்ளது.

### முதல் முதியவர்

அயர்லாந்தின் வடக்குப் பகுதியைச் சேர்ந்த 90 வயதான பெண்மணி ஒருவர் உலகின் முதல் நபராக ஆனார். எந்த விடயத்தில் தெரியுமா? கொவிட் 19 தொற்றை எதிர்த்துச் செயற்படவல்ல தடுப்பூசியைத் தனக்கு ஏற்றிய முதல் நபர் என்ற பெயரைத்தான் அவர் பெற்றிருக்கிறார்.

அவருக்குத் தடுப்பூசி செலுத்தப்படுகின்ற ஒளிப்படங்களையும் அது குறித்த செய்திக் கோர்வைகளையும் பன்னாட்டு ஊடகங்கள் பலவும் பரவலாக வெளியிட்டன. அந்த வகையில்தான் உலகப் பெருந்தொற்றுக்கு எதிராகக் கண்டுபிடிக்கப்பட்ட தடுப்பூசியைச் செலுத்திய முதலாவது மனிதரும் முதிய மனிதரும் என்கிற பெயர் அவருக்குக் கிடைத்துள்ளது.

அவரது பெயர் மார்கரெட் கீனன். பிரிட்டனின் வரலாற்றில் மிகப் பெரிய நோய்த் தடுப்புத் திட்டம் ஒன்றில் முதலாவது தடுப்பூசி செலுத்தப்பட்ட பெண்ணாக இவர் கருதப்படுகிறார். மே பார்சன்ஸ் என்கிற தாதி பல்கலைக்கழக மருத்துவமனை ஒன்றில் வைத்து அவருக்கு பைசர் ஃபயோஎன்டெக் கோவிட் -19 தடுப்பூசியைச் செலுத்தியிருக்கிறார்.

மார்கழி மாதம் 8ஆம் திகதி அவருக்கு இந்தத் தடுப்பூசி செலுத்தப்பட்டது.

### பல போட்டியில் பிரிட்டன்

அமெரிக்கா, ரஷ்யா, சீனா எனப் பல நாடுகளும் கொவிட் 19 தொற்றுக்கான தடுப்பூசியைக் கண்டுபிடிப்பதற்குத் தீவிரம் காட்டினாலும் கொரோனா வைரஸைத் தோற்கடிப்பதில் மும்முரமாகப் பிரிட்டனும் செயற்பட்டு வந்தது. அந்த நாட்டின் மிகப் பெரும் பல்கலைக்கழகமான ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் சார்பிலும் பல தரப்புகள் இணைந்தும் இந்தத் தடுப்பூசிக் கண்டுபிடிப்பில் வேகம் எடுத்துச் செயற்பட்டன.

கொவிட் தொற்றால் மிக

(13ஆம் பக்கம் பார்க்க)

# பேத்தியைப் பிரசவித்த பாட்டி!



குழந்தையைப் பிரவசிப்பவரைத் தாய் என்கிறோம். தற்காலத்தில் தாய்மார் பல வகைப்பாட்டில் இருக்கின்றனர். வாடகைத் தாய் எனப்படுபவர் அதில் முக்கிய மானவர். வேறொரு தம்பதியினருடைய குழந்தை யைத் தனது கருப்பையில் தரித்து - வளர்த்துப் பிர சவிப்பவரையே வாடகைத் தாய் என்கிறோம்.


கருத்தரிப்பதில் இருந்து அதை நல்லமுறையில் வளர்த்துப் பிரசவிப்பது வரையான காலம் வரை யில் வாடகைக்கு அமர்த்தப்பட்டிருப்பவராக அவர் இருப்பார். குழந்தைப் பேறின்மை அதிகரித்துச் செல்கின்ற இந்தியா, இலங்கை போன்ற நாடு களில் இவர்களுடைய தேவை அதிகம் இருக் கிறது. இந்த வாடகைத் தாய் முறைமையை அரசு கள் அங்கீகரித்துமுள்ளன.

பிறிதொருவரின் குழந்தையைச் சுமப்பதே இந்த வாடகைத்தாய்மாரின் பணியும் தொழிலும். இவ்வாறிருக்கையில் இதையும் விஞ்சியதொரு ஆச்சரியத் தகவல் அமெரிக்காவில் பதிவாகியி ருக்கிறது. அந்த ஆச்சரியம் என்னவென்றால் பாட்டி ஒருவர் வாடகைத் தாயாக மாறித் தனது பேத்தியைப் பிரசவித்துள்ளார்.

நவீன உலகில் என்னவெல்லாம் நிகழ்கின்றன பாருங்கள். அமெரிக்காவில் நடந்த இந்தச் சம்ப வம் அத்தகைய ஒன்றுதான்.

அமெரிக்காவின் நெப்ராஸ்கா மாகாணத்தைச் சேர்ந்த 61 வயதுடைய சிசில் எலெட்ஸ் என்கிற பெண் ஒருவர்தான் இப்படியாகத் தனது பேத்தி யைப் பெற்றெடுத்து இருக்கிறார். இந்தச் சம்பவத் தில் மேலும் ஒரு குழப்பம் இருக்கிறது. அது என்ன வென்றால். சிசில் எலெட்ஸ் தனது மகன் மற்றும் அவரது கணவரின் குழந்தையைப் பிரசவித்திருப் பது தான்.

என்ன குழப்பமாக இருக்கிறதா? சிசில் எலெட் ஜின் மகன் மேத்திவ் எலெட்ஜ். அவர் சக பாலி னத்தவரான எலியட் டக்ஹர்டியைத் திருமணம் செய்து கொண்டார். இருவருமே ஆண்கள்...! உங்களுடைய புருவங்கள் உயர்வது புரிகிறது. சரி இதைக் கேளுங்கள்.



இவ்வாறு ஒரே பாலினத்தவர்களாகத் திருமணம் செய்து வழ்கின்ற இந்த இரண்டு ஆண்களினுடை யதும் குழந்தையைத்தான் தனது கருப்பையில் சுமந்துள்ளார் பாட்டி உறவான சிசில் எலெட்ஸ்.

முடிவில் தனது பேத்தியைப் பிரசவித்த பாட்டி யாகவும் தாய் ஆகவும் அவர் மாறியிருக்கிறார். அவர் பிரசவித்த அந்த அழகிய பெண் குழந்தை யின் பெயர் உமா லூயிஸ்.

தனது மகனான மேத்திவ் எலெட்ஜின் விந்த ணுவையும், அவன் திருமணம் செய்த சக பாலி னத்தவரான டக்ஹர்டியின் சகோதரியான லியா என்பவளின் கரு முட்டையையும் கருவாக்கிச் சுமந்தே இந்தக் குழந்தையைப் பெற்றுள்ளார் அவர். இதனால் 61 வயதில் தனது பேத்தியைத் தானே பெற்றெடுத்த பாட்டி என்கிற பெயரும் புகழும் அவருக்குக் கிடைத்துள்ளது.


அத்தோடு அமெரிக்காவில், குழந்தையைப் பெற்றெடுப்பவர் தாயாகக் கருதப்பட வேண்டும் என இருக்கும் சில சட்டங்களால் உமா லூயிஸின் பிறப்புச் சான்றிதழில், குழந்தையைப் பெற்றெடுத்த வராகப் பாட்டி சிசில் எலெட்ஜின் பெயரும், மேத்திவ் எலெட்ஜின் பெயரும் குறிப்பிடப்பட்டு இருக்கின்றன.

## வேகமாகப் பறந்த மனிதன்...!

சக் யேகர் என்கிற வானோடி சாவடைந்த செய்தி வெகு பிரபலமாகப் பேசப்பட்டது. காரணம்... ஒலியைவிட வேகமாகப் பறக்கின்ற வானூர்தியைச் செலுத்திய முதல் மனித னாக அறியப்படுகின்ற நபர் அவர். 97ஆவது வயதில் அவர் இறந்துள்ளார். கிட்டத்தட்ட 70 ஆண்டுகளுக்கு முன்னர் ஒலியை விட வேகமாகப் பறந்து வியப்பை ஏற்படுத்திய அவர், அமெ ரிக்காவின் மிக முக்கிய வானோடி. டாம் வோல்ஃப் என்பவர் எழுதி 1979 ஆம் ஆண்டு வெளியா கிய புத்தகமான 'தி ரைட் ஸ்டஃப்' இல் ஒரு முக்கிய பாத்திரமாகவும் ஆக் கப்பட்டார்.





இரண்டாம் உலகப் போரில் பல வானூர்தி களைச் செலுத்தியவர். போருக்குப் பிறகு சோதனை விமானியாக ஆனார். பல வானூர்தி களைப் பரிசோதித்தார். ஒலியைவிட வேகமாகப் பறக்கின்ற ஜெட் ராக வானூர்தி கள் பலவற்றைச் செலுத்திப் பிரபலமடைந்த அவருக்கு 1997ஆம் ஆண்டில் வானோடி யாகிய 50 ஆண்டுகள் நிறைவ டைந்தன. அதற்கு மதிப்பளிக்கும் வகையில் அவருக்குப் பிரிகேடியர் ஜெனரல் பதவி வழங்கப்பட்டது. ஒரு காலத்தில் ஒலியைவிட வேகமா கப் பறந்த அந்த மனிதர் வயது முதிர்வு காரணமாக இறந்ததுதான் தற்போதைய செய்தி...!



## ஹொலிவூட்டில் கால்பதித்த சிங்களப் பெண்...!



இலங்கையில் பிறந்து பிரிட்டனில் வாழ்ந்து வருகின்ற நடிகையான துசிதா ஜெயசுந்தர என்ப வர் அமேசோன் கலையகம் வெளியிடுகின்ற 'லோர்ட் ஒவ் தி ரிங்க்ஸ்' என்கிற இணையத் தொடரில் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளார். பிந்திய இந்தச் செய்திக்கு முன்னரே இலங்கையைச் சேர்ந்தவரான இவர் ஹொலிவூட் திரை களில் தோன்றியிருக்கிறார் என்பது தெரியவந்திருக் கிறது. அண்மையில் அமேசோன் நிறுவனம் வெளியிட்ட அறிவிப் பின் படி மேற்குறித்த தொடரில் இணைய வுள்ள 20 நடிகர்களில் ஒருவராக துசிதா ஜெயசுந்தர உள் ளார். இவர்கள் தற்போது நியூ சிலாந்தில் படப் பிடிப்பில் உள்ள னர். ஆனால், இதற்கு முன்ன தாகவே அவர் தி ஃபோரினர் (2017), டொக் மர் ஃபாஸ்டர்: எ வுமன் ஸ்கார்ன்ட் (2015) மற்றும் தி பில் (1984) ஆகிய திரைப்படங்களில் நடித் திருக்கிறார். 1971 ஆம் ஆண்டில் இலங்கை யில் பிறந்த ஜெயசுந்தர றோயல் அக்கடமி ஒவ் ட்றாமாற்றிக் ஆர்ட் என்கிற கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றவராம்...!



● பேர் அறிஞன்

# வளமிகு வாழ்விற்கான வழிகாட்டலின் நிலை...?

சமூகத்தினது சிந்தனையில் புலம்பெயர் மற்றும் உள்மட்டச் செயற்பாட்டாளர்களது செல்வாக்குப் பற்றிய பார்வையினது தொடர்ச்சியாகப் பண மீட்டுதல் அதனூடாகச் சமூகத்தில் செல்வாக்குச் செலுத்துதல் அல்லது தம்மில் தங்கி வாழும் ஒரு தொகுதிக்குத் தலைமை தாங்குதல் மற்றும் இத்தொகுதியினூடாகக் குறித்தவொரு சமூகத் தொகுதியைக் கட்டுப்படுத்துதல்போன்ற விடயங்களில் கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

இப்படியான சிந்தனைப்போக்கை புலம்பெயர்ந்துள்ளவர்களது சிந்தனை மற்றும் செயற்பாடுகளில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் அவதானிக்கக் கூடியதாக இருப்பதான கருத்துக்கள் புறந்தள்ளப்பட முடியாதவையே.

சமூகத்தை உன்னிப்பாக உடனிருந்து அவதானிக்கும் பலர் மேற்படி போக்கினைக் குழந்தையினது 31ஆவது நாட்சடங்கிலிருந்து அந்தியேட்டி வரையான குடும்ப நிகழ்வுகளிலும் பாடசாலை, சனசமூக நிலையம், கோயில் மற்றும் கழகங்கள் அமைப்புகள் மேற்கொள்ளும் நிகழ்வுகளிலும் பண்பாடு, மரபு, ஆன்மீகம், தூரநோக்கு பயனுறுதித் தன்மை போன்ற விடயங்களைவிட அதீதமான கவனம் ஆடம்பரம் நோக்கி நகரும் போக்கினையே காணமுடிகிறது எனும் அவதானம் முக்கியமானது.

ஆடம்பரம் நோக்கிய நகர்விற்கு அறிவு, பகுத்தறிவு இதனால் வழிநடத்தப்படும் பொதுச் சிந்தனை பல்பயன்பாடு தூரநோக்கிலான பயன்கள் போன்றவற்றைவிடப் பணம் மட்டுமே முக்கியமானதாகச் செயல்வழி ஒரு சூழல் தோற்றுவிக்கப்பட்டு வருகிறது எனும் கள யதார்த்தம் உணரப்படவேண்டிய ஒன்றாக இருக்கிறது. ஆனால்உணரப்படுகிறதா?

இவ்வாறான மனோ நிலையினது விளைவுகளில் முதன்மையானதாகப் போட்டிச் சூழலொன்று உருவாகிறது. அது வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் என்பதற்கப்பால் சிந்தனைத் தூண்டலை ஏற்படுத்த வழிதருமா என்றால் இல்லை என்பதைவிட வேறு பதில்கள் உண்டா?

புலம்பெயர் முதலீடுகளில் முதன்மையாகக் கருதக்கூடியதாகக் காணிக்கொள்வனவுகள் மற்றும் ஆடம்பரக் கட்டுமானங்கள் உள்ளன. இவற்றுக்கான பராமரிப்பு மற்றும் பயன்பாடுகள் தொடர்பான தூரப் பார்வை உண்டா? அந்நிய நாட்டுப் பயணங்கள் மற்றும் பல காரணங்களால் எண்ணிக்கையில் குறைவடைந்தபடியே இருக்கும் எமது சமூகத்தால் எதிர்காலத்தில் இவற்றைப் பராமரிக்கவியலாத சூழலில் அவற்றையாருக்குக் கைமாற்றப் போகிறோம்? அவை யாருடைய சொத்தாகப் போகின்றன? அதனாலெழும் இனவிகிதாசாரப் பரம்பல் மாற்றம் அதன் வழியாக ஏற்படுத்தப்படும் போட்டிகள் ஓரங்கட்டல்கள் என நீளும் பிரச்சினைகள் பற்றிய விழிப்பு நிலையை எப்படிப் பெறப்போகிறோம்?

> **இளைய தலைமுறையினரை வழிப்படுத்த வேண்டிய பொறுப்பிலுள்ள சமூகமானது மாறுபட்ட நிலையில் வழிநடாத்தப்பட்டுக் கையேந்திகளாகவும் சுயசிந்னைப் பஞ்சதாரியாகவும் மாறிக் கொண்டிருக்கிறது.**

தாயக வளப் பயன்பாடு அதற்கூடான ஒரு நிறைவான வாழ்வு எனும் எண்ணமானது மேற்கூறப்பட்டன போன்ற காரணங்களால் அபாயத்துள் விடப்படுகின்றது என்பதைச் சமூகத்தினது வனத்தில் உறைப்பாக உணரவைக்க வேண்டியதன் அவசியம் இதுதான். உள்வீட்டுச் சிந்தனையாக இவற்றையும் இவ்வாறான அல்லது இவற்றைவிடச் சற்றதிகமான அந்நியமாதல் சிந்தனைத் தூண்டலாக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் சிந்தனை மற்றும் செயற்பாடுகளையும் தூரநோக்கோடு சமூகம் பகுத்துணரச் செய்ய வெண்டிய ஒரு பெரும் பொறுப்பு ஆலோசகர் அல்லது வழிகாட்டுநருக்கு உண்டு.

சமூகம் முற்கற்பிதங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள் எனக் காலங்காலமாகக் கொண்டிருக்கும் சரக்குகளுக்கும் (காலாவதியானவை பழுதடைந்தவை உட்பட) தற்காலத்து உலக ஓட்டம் நாகரிகம் போன்ற சொற்களால் விவரிக்கப்படும் இறக்குமதிச் சரக்குகளுக்குமான ஒத்த மற்றும் எதிர் சிந்தனைகள், உணர்வுகள், உணர்ச்சிகள் போன்றவற்றுக்கும் அப்பால் தலைமேல் கொண்டாடும் மனோ நிலையைச் சரிவரப் புரிந்துகொண்டாலே தீர்வை நோக்கியதாகச் சிந்திக்கவும் செயற்படவும் முடியும்.

10

மேலே விவரிக்கப்பட்டவாறான சூழலில் இளைய தலைமுறையினரை வழிப்படுத்த வேண்டிய பொறுப்பிலுள்ள சமூகமானது மாறுபட்ட நிலையில் வழிநடாத்தப்பட்டுக் கையேந்திகளாகவும் சுயசிந்னைப் பஞ்சதாரியாகவும் மாறிக்கொண்டிருக்கிறது என்கிற யதார்த்தம் உண்மையில் கசப்பானது தான். ஏற்றுக்கொள்வதைவிட மாற்றுத் தெரிவேதும் இல்லை. எனவே தான் வழிகாட்டுதல் எனும் செயலொழுங்கின் முதலாம் நிலைப் பயனாளிகளா இளையவர்களை விடவும் சமூகமே இலக்கு ஆக்கப்பட வேண்டும். நடந்துகொண்டிருக்கும் செயலொழுங்கு மறுதலையானது.

வசதியாகப் பாடசாலைகளில் மாணவர்களை ஒன்றாக்கி ஆலோசனைத் தொழில் வழிகாட்டல் எனும் பெயரில் பரப்புரை நடாத்துதல், அறிக்கையிடல் என்பனவே இன்றைய செயலொழுங்கிலுள்ளவை.

குறித்த பிள்ளை செயலமர்வு முடிவில் தனக்கான வழியைத் தீர்மானிக்க முயலும்போது குடும்பத் தலையீடு குழப்புகிறது. பிள்ளையைக் குழப்பிய நிலையைக் குடும்பம் சமூகக் குழப்பத்தினால் பெறுகிறது.


இறுதியில் சமூகமே திசையறுந்து குழம்பி அலைகிறது. இந்தக் குழப்ப வரைபடம் உணரப்படாத வரையில் சமூகமும் அதனது சிந்தனை விரிவும் நெறிப்படுத்தப் படாத வரையில் வழிகாட்டுதல் எனும் பதமானது பதப்படுத்திய சடலமாகவே இருக்கும். அந்தப் பதமானது கூடியழுவதற்கே உதவப்போகிறது.

(தொடரும்)





# எ செபரேஷன்




**2011** ஆம் ஆண்டு வெளியாகிய ஈரானியத் திரைப்படம் இது. அஸ்கஃர் ஃபர்ஹாதி என்பவர் எழுதி இயக்கிய இந்தத் திரைப்படத்தில் லெய்லா ஹாடாமி, பெய்மன் மோஆதி, ஷாகாப் ஹோசினி, சாரெ பயட் மற்றும் சாரினா ஃபர்ஹாதி எனப் பலர் நடித்துள்ளனர்.

சிறந்த வெளிநாட்டுப்படத்துக்கான ஒஸ்கார் விருதை 2012ஆம் ஆண்டில் வென்றது. இந்த விருதைப்பெற்ற முதல் ஈரானியப் படமானது. அத்தோடு நிற்காது 61ஆவது பெர்லின் உலகத் திரைப்பட விழாவில் சிறந்த படத்திற்கான கோல்டன் பியர் விருதும், சிறந்த நடிகர் மற்றும் நடிகைக்கான சில்வர் பியர் விருதும் இதற்குக் கிடைத்தது. கோல்டன் பியர் விருது பெற்ற முதல் ஈரானியத் திரைப்படமாகவும் இது ஆனது. மட்டுமன்றிச் சிறந்த திரைப்படத்திற்கான கோல்டன் குளோப் விருதையும் வென்றது. சிறந்த திரைக்கதைக்காக ஒஸ்கார் விருதுக்கும் முன்மொழியப்பட்டது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆங்கிலம் அல்லாத ஒரு படமாக இது இந்தப் பகுப்பிற்கு பரிந்துரைக்கப்பட்டது. இவ்வாறாக 80க்கு மேற்பட்ட விருதுகளைத் தன்வசமாக்கிய படம் என்கிற புகழ் இதற்குரியது.

**கதை**

கணவன் - மனைவி ஆகியோர் விவாகரத்துக் கோருகின்றனர். கணவரைப் பிடிக்கவில்லையா, அவர் குடிகாரனா, கொடுமைப்படுத்துபவாரா, நடத்தை சரியில்லையா? என்றால் அப்படி எதுவுமே இல்லை... மிகவும் நல்லவர்! என்கிறாள் மனைவி. அவ்வாறாயின் எதற்காக விவாகரத்து...? என் மகளுக்கு வெளிநாட்டில் படிக்க வாய்ப்பு உள்ளது. அதனால் வெளிநாடு செல்லவேண்டும். இவரோ தனது தந்தையை விட்டு விட்டு வரத் தயாராக இல்லை. அவருக்கு அல்சைமர் என்கிற மறதி நோய். இவர் மகன் என்று கூட அவருக்கு இப்போது அடையாளம் தெரியாது. நான் மகளை அழைத்துப் போகவேண்டும். அதனால் விவாகரத்து வேண்டும் என்பது மனைவியின் வாதம். அப்பாவை விட முடியாது. விவாகரத்து தருகிறேன். ஆனால் மகள் என்னுடன் தான் இருக்கவேண்டும் என்பது கணவனின் வாதம்.


11 வயது மகள் தந்தையோடு இருக்கலாம். நீயும் குடும்பத்துடன் இரு! என்கிறது நீதிமன்றம். கோபத்தில் உள்ளூரில் உள்ள அம்மா வீட்டுக்குப் போகிறாள் மனைவி. மகள் தந்தையுடனும் தாத்தாவுடன் தங்குகிறாள். பகல் பொழுதில் வயதான தந்தையைப் பார்த்துக் கொள்ள ஒரு பணிப்பெண் அமர்த்தப்படுகிறாள். அவள் கர்ப்பம் தரித்திருக்கிறாள். தனது சிறிய மகளுடன் வேலைக்கு வருகிறாள். ஒரு முறை வயதானவருக்குச் சிறுநீர் கழிக்க உதவி செய்ய நேரிடுகிறது. அவள் தனது மதம் பற்றிப் பயந்துகொண்டே அவருக்கு உதவுகிறாள்.

அப்பாவிடம் சொல்ல மாட்டேன் என்று ஆறுதல் சொல்கிறாள் அந்தச் சிறு மகள். தனக்குப் பதில் தன் கணவனை அந்தப் பணிக்கு அமர்த்த முயல்கிறாள். மறுபுறத்தில் அவனோ கடன் ஒன்றைத் திருப்பிக்கொடுக்காததால் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைபடுகிறான்.

இடையில் ஒரு மருத்துவ அவசரத்துக்கு அந்தப் பணிப்பெண் பெரியவரைப் படுக்கையில் கட்டிவிட்டு வெளியே சென்று வருவதற்குள் அவர் கீழே விழுந்து அடிபடுகிறார். இதைப் பார்த்த கதாநாயகன் அவளை வேலையை விட்டு விலக்கி வீட்டை விட்டு வெளியே பிடித்துத் தள்ளுகிறான்.

மறுநாள்தான் தெரிகிறது. அவளுக்குக் கருச்சிதைவு ஏற்பட்டு மருத்துவமனையில் கிடக்கிறாள் என்று. தாய் வீட்டுக்குச் சென்ற மனைவியையும் கூட்டிக்கொண்டு அவளைப் பார்க்கச் செல்கிறான். என் குழந்தையைக் கொன்று விட்டாய்! என அந்தப் பணிப்பெண்ணின் கணவன் சண்டை போட்டு, வழக்கும் தொடுக்கிறான். அவள் கர்ப்பிணி என்பது தெரியாது என்றும் தான் தள்ளிவிட்டதில் அவளுக்குக் கருச்சிதைவு ஏற்படவில்லை என்றும் வாதிடுகிறான் கதாநாயகன்.

அப்பா பொய் சொல்கிறார் என்று கடும் மன உளைச்சலுக்கு ஆளாகிறாள் மகள். மனைவியும் இவனையே குறை கூறுகிறாள். குற்றம் நிரூபித்தால் அங்கு 3 வருடங்கள் சிறை. நோய் வாய்ப்பட்ட அப்பாவையும் பூப்பெய்தும் நிலையில் உள்ள மகளையும் ஆதரவின்றிவிட



முடியாது அதனால்தான் பொய் சொல்கிறேன் என்கிறான்.

இடையில் மனைவி தரப்புப் பிணை கொடுக்கவும், பணிப்பெண்ணின் கணவனுக்கு இழப்பீடு வழங்கவும் முன்வருகின்றான் கதா நாயகன். ஆனால், நீதிதான்வேண்டும் பணம் வேண்டாம் என்கிறான் அவள் கணவன். பணம் வாங்கினால் தன் மற்றக் குழந்தைக்கும் ஏதாவது நேரும் என்று அஞ்சுகிறாள் அந்தப் பணிப்பெண். பணம் தருகிறேன். ஆனால் நான் தள்ளியதால்தான் கருச்சிதைவு என்று குர் ஆன் மீது சத்தியம் செய் என்று கேட்கிறான் கதாநாயகன். பணிப்பெண் மறுக்கிறாள்.

அங்கேதான் உண்மை வெளிச்சத்துக்கு வருகின்றது. அல்சைமர் பெரியவர் தன்னை அறியாமல் சாலையைக் கடக்கும்போது அவரைக் காப்பாற்ற ஓடி வந்து ஒரு காரில் முட்டியதுதான் பாதிப்புக்குக் காரணம். முன் பகல் சம்பவத்தை அவள் யாருக்கும் சொல்லாமல் மறைத்துவிட்டாள். படம் முடிகிறது.

**கதையமைப்பும் நடிப்பும்**

2011இல் வெளியான படம் ஓர் ஆஸ்கர் விருதுடன் 81 விருதுகளை உலகத் திரைப்பட விழாக்கள் அனைத்திலும் தனதாக்கியது. அடுக்கு மாடி குடியிருப்பில் வீடு, வழக்கு நடக்கும் ஓர் அறை, ஒரு மருத்துவமனை அறை, பணிப்பெண் வீடு, பள்ளியின் சாலை முகப்பு என மிகக் குறைவான படப்பிடிப்புத் தளங்கள். இசை, நடனம், பாடல், சண்டை, நகைச்சுவைக் காட்சிகள் எதுவும் கிடையாது.

வேகம் வேகமாக ஓடும் கமரா கதை மாந்தர்களின் தவிப்பைப் பிரதிபலிக்கிறது. மொழி புரியாமல், பாத்திரங்களின் உரையாடலை மொழிபெயர்ப்பு வாக்கியங்களாகப் பார்க்கிறோம் என்பதையும் மறந்து நம்மைக் கதைக்களத்துடன் கட்டிப்போடும் வித்தைதான் படத்தின் வெற்றி.

**சிறந்த வாழ்வனுபவம்**

மகளின் வாழ்க்கைக்கு அக்கறைப்படும் நாயகி, தந்தையின் கடைசிக் காலத்தில் கடமை செய்ய நினைக்கும் நாயகன், பெற்றோர்கள் இணைய விரும்பும் மகள், பொருளாதாரச் சுமைக்காக வேலைக்கு வரும் பணிப்பெண், கருச்சிதைவுக்கு நீதி கேட்கும் அவள் கணவன், 'அம்மா திருடவில்லை' என்று அம்மாவுக்கு ஆதரவாக இருக்கும் பணிப்பெண்ணின் மகள், நரம்பியல் நோயால் பாதிக்கப்பட்டு இந்த நாடகத்தின் மையப் பொருளாய் நின்றும் அதை அறியாத வயதான பெரியவர் என அனைவர் வாழ்வும் துயர் மிகுந்தவை. ஆனால் அன்பும் நேர்மையும் மிக்கவர்கள். அடுத்தவர் துயர் துடைக்க முனைகிறார்கள். அத்தகைய இந்தப் படம் ஒரு நல்ல வாழ்வனுபவம். ■

# பிரிட்டனை...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐரோப்பிய நாடுகளில் பிரிட்டனும் ஒன்று. அங்கு இந்தத் தொற்றுக் காரணமாக 61ஆயிரத்துக்கு அதிகமானோர் இறந்துள்ளனர். இந்த நிலையில் ஐரோப்பிய நாடுகள் மத்தியில் பெருந்தொற்றுக்கு எதிரான மருந்தைக் கண்டுபிடிப்பதில் பிரிட்டன் காட்டிய அக்கறையும் கரிசனையும் அதிகமாகவே இருந்தது.

இந்த நிலையில்தான் பைஸர் என்கிற அங்குள்ள இந்த நிறுவனத்தின் தடுப்பூசியின் முன்னேற்றமான நிலைகள் மேம்படுத்தப்பட்டு இன்றைக்கு அது மனிதர்களுக்குச் செலுத்தப்பட்டுள்ளது. "தடுப்பூசி போடப்பட்ட முதல் நபராக நான் மிகவும் பாக்கியவாதியாக உணர்கிறேன்," என்று அதைத் தனது உடலில் செலுத்திய பின்னர் கீனன் கூறியுள்ளார். அவருக்குத் தடுப்பூசி செலுத்தப்பட்ட பின்னர் தனது நாட்டின் சுகாதார ஊழியர்களுக்குப் பிரிட்டனின் பிரதமர் போரிஸ் ஜோன்சன் நன்றி தெரிவித்தார்.

தமது இந்தத் தடுப்பூசியை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துக்குப் பரிந்துரைப்பதற்கும் போரிஸ் ஜோன்சன் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார் என்று பிரிட்டன் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**அனைவருக்கும் மருந்து...?**

பரிசோதனை முயற்சியாகவே முதற்கட்டமாக மேற்குறித்த முதிய பெண்மணிக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டிருக்கிறது. இந்தப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட இரண்டாவது நோயாளி வார்விக்ஷயர் என்கிற பகுதியைச் சேர்ந்த வில்லியம் ஷேக்ஸ்பியர் என்ற நபர் என்கிறது பன்னாட்டு ஊடகம் ஒன்று.

பைசர் ஃ பயோஎன்டெக் ஷாட்டின் 40 மில்லியன் அளவிளால மருந்துகளைப் பிரிட்டனே பதிவு செய்துள்ளது. ஒவ்வொரு நபருக்கும் இரண்டு அளவுகள் தடுப்பூசி தேவைப்படுவதால், அங்குள்ள 67 மில்லியன் மக்களில் 20 மில்லியன் மக்களுக்கே இந்த முதற்கட்ட ஊசிகள் போதுமானவையாக இருக்கின்றன. பிரிட்டனில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த மருந்து உடனடியாக அந்த நாட்டு மக்களுக்கே போதுமானதாக இல்லை. எதிர்வரும் முதல் வாரத்தில் சுகாதார ஊழியர்கள், பராமரிப்பாளர்கள், சில குடியிருப்பாளர்கள், 80 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஆகியோருக்கே அதைச் செலுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப் போகிறார்கள் என்றும் செய்திகள் வெளியாகின்றன.

இந்தத் தடுப்பூசி பிரிட்டனைத் தாண்டி வெளியே வரும் காலம்வரை அனைவரும் காத்திருக்க வேண்டும்.

# பாவம் அந்த மாடு!

பா.இராஜேஸ்வரி

சிறு கதை 3

எனக்குப் பதினாறு வயதாக இருக்கும்போது. விடுமுறைக்குக் கூட்டிக் கொண்டு போவதாக என்னை அழைத்துக் கொண்டு என் பெற்றோர் இந்தியாவுக்குப் போனார்கள். அங்கு போன போதுதான் அவர்கள் என்னை, முப்பது வயதுக்கார பணக்கார மாப்பிள்ளைக்குத் தாரை வார்க்கத் திட்டம் போட்டிருந்தது தெரிந்தது. எனக்கு அது பிடிக்கவில்லை அதைத் தாய் தகப்பனுக்குச் சொன்னேன், வயது பெரிய விடயமில்லை, வசதியான வாழ்க்கை கிடைப்பது அரிது என்றார்கள். மாப்பிள்ளையை எனக்குச் சரியாகத் தெரியாது அவரைப் புரியாது என்று பிடிவாதம் பிடித்தேன், அவர்கள் எனது அழுகையைப் பொருட்படுத்தாமல் நிச்சய தார்த்தம் செய்தார்கள். ஒரு நாள் வீட்டில் யாரும் இல்லாதபோது, எனக்கு மாப்பிள்ளையாக வரப்போகிறவர் தாலி கட்ட முதலே தன்னை எனக்குப் 'புரிய' வைக்கப் பார்த்தார்..'

உஷா இப்படிப் பகிரங்கமாகத் தனது கதையைச் சொல்ல வெளிக்கிட்டது விமலாவால் தாங்கமுடியாதிருந்தது. அங்கு இருக்கும் ஒவ்வொரு பெண்ணையும் முதற்தரம் அறிந்து கொள்வதுபோல் உற்று நோக்கினாள்.

அந்த அறையில் நிசப்தம். உஷா தொடர்ந்தாள்,

'ஒரு கிளியை அடைத்து வைத்த கூண்டுக்குள் ஒரு கொடிய பூனை புகுந்தால் என்ன நடக்குமோ அது எனக்கு நடந்தது. முன்பின் தெரியாத ஊரில் எனக்குத் தெரிந்தவர்கள் யாருமில்லை. அடுத்த வீட்டிலிருந்த ஒருத்தர் எனது கூக்குரல் கேட்டு வந்து கதவைத் தட்டினார். எனது நிலையைத் தெரிந்துகொண்டார். கதவைத் திறக்காவிட்டால் பொலிஸுக்குப் போன்பண்ணுவேன் என்றதால் கதவு திறக்கப்பட்டது. கடவுள் இருக்கிறாரே இல்லையோ.. அவர் அன்று எனது கடவுளாக வந்தார். மாப்பிள்ளை வீட்டார் பெரிய பணக்காரர்... பொலிஸை அல்ல மந்திரியையே விலைக்கு வாங்கக் கூடியவர்கள். ஆனால் பக்கத்து வீட்டுக்காரர், சமூகத்தில் மதிப்புடைய மருத்துவர். அவரின் தலையீட்டால் கல்யாண ஏற்பாடுகளிற் பிரச்சினை வந்தது.'

அந்த மாப்பிள்ளை என்னை இன்னொரு தரம் தொட்டால் தற்கொலை செய்வேன்" என்று சொன்னேன். அவர்கள் பயந்துவிட்டார்கள். எனது கன்னித்தன்மை சூறையாடப்பட்டதை விட அவர்களின் 'கண்ணியமான' குடும்பப் பெயர் சமூகத்தில் கெடக் கூடாது எனபதற்காகத் திருமணத்தை நிறுத்தினார்கள்'


உஷா சொல்லி முடிவதற்கிடையில் கமலா விசும்பத் தொடங்கினாள்.

'மஞ்சுளா.. நீ சந்தோசமாகத்தானே இருக்கிறாய்?' கமலா தாய்மையுடன் மஞ்சுளாவைக் கேட்டாள்.

இதுவரைக்கும் அப்பிள் ஜூசைக் குடித்துக் கொண்டிருந்த மஞ்சுளா, கமலாவின் கேள்விக்குப் பின் ஒரு கிளாஸ் சிவப்பு வைனை மடமட வெனக் குடித்து முடித்தாள்.

'என்னில் விருப்பமில்லாத எனது சொந்தக்காரனுக்கு என்னைச் செய்து வைத்தார்கள். கல்யாணமானதும் எல்லாம் சரிவரும் என்று சொன்னார்கள். அந்த மாப்பிள்ளையும் தனது பெற்றோருக்காக என்னைச் செய்தவர். எங்களின் முதல் இரவு மிக அசிங்கமானது என்று நினைக்கிறேன்.

எனது முப்பது வருட எதிர்பார்ப்புக்கள் இனிய கனவுகள் அன்று தகர்ந்து கொட்டுப்பட்டன. அவர் பெரிதாக ஒனறும் என்னுடன் பேசவில்லை. எனக்கு என்ன பிடிக்கும், எப்படி நடந்து கொள்ளவேண்டும் உடலுறவுக்கு நான் தயாரா என்ற எந்தக் கேள்வியும் கிடையாது. கதவைப் மூடிவிட்டு வந்து ஏதோ கடமைக்கு ஏறி விழுந்ததுபோல் ஏதோ செய்து முடித்தார். அவரில் பிழையில்லை என்று நினைக்கிறேன், எங்கள் கலாச்சாரம் அப்படியானது. ஆழ்மனத்தின் ஏக்கங்கள் வெளியே தெரியாமல் கவுரமாக வாழ்ந்துகொண்டிருக்கிறோம். அவர் எனைக்கு அடிப் பதோ பேசுவதோ கிடையாது. அவர் குடிப்பதோ, புகைப்பதோ எந்தக் கெட்ட பழக்கமும் கிடையாது. எங்கள் உடம்புகள் சேர்ந்து அடுத்த தலைமுறையை விருத்தி செய்கிறோம். குழந்தைகள் நன்றாக வாழ்கிறார்கள் படிக்கிறார்கள். அதன் திருப்தியில் தனிமனித ஆசாபாசங்கள் அமிழ்ந்து



போகின்றன. பொருளாதார சௌகரியத்தில், உங்களை விட நான் அதிர்ஷ்டசாலி. ஆனால், எங்கள் அந்தரங்க வாழ்க்கையில் பெரிய திருப்தி இருவருக்குமில்லை என்று அவருக்குத் தெரியும். ஆனா லும் ஒருநாளும் என்னை விட்டு இன்னொருத்தியை, சிந்தியாவின் காதலர் போலவோ, மார்க்ரெட்டின் புருஷன் மாதிரியோ பார்க்க மாட்டார்.

'மஞ்சுளா ஏதோ கற்பனையில் வாழ்ந்ததாக. வாழ்வதாகச் சொன்னாயே அது என்ன?' மார்க்கரெட் மஞ்சுளாவைப் பார்த்துக் கேட்டாள். அவளும் அந்த மாதிரியான விடயங்களையறியவேண்டும் என்ற அவல் அவளின் குரலில் ஒலித்தது.

'மஞ்சுளாவின் கன்கள் கலங்கின..' நான் ஒரு யதார்த்தவாதியல்ல என்ற நினைக்கிறேன். எனது உணர்வு ஆண் பெண் எல்லோருக்கும் ஏற்படும் உணர்வு என்ற நினைக்கிறேன். நான் அவரிடம் எதிர்பார்ப்பது, ஒவ்வொரு வினாடியும் ஐ லவ் யு என்ற பொய்மையான வார்த்தைகளல்ல.. ஒரு சினேகிதமான, உள்ளார்ந்தமான பிணைப்பு. திருமணம் என்ற பந்தத்துக்குள் செயற்படும் ஒரு, 'வியாபாரத்' தன்மையான உறவுக்குப்பால் அவரிடமிருந்து ஓர் அன்பான அணைப்பு,

இரவின் தனிமையில் பாவித்து ருசிக்கும் பண்டமாக என்னைப் பாவிக்காமல், இருவரும் அனுபவிக்கும் இன்பத்தை மனம் விட்டுப் பகிரும் ஒரு பார்ட்னராக அவரைப் பார்க்கக் கற்பனை செய்கிறேன். எங்கள் வாழ்க்கை அவற்றைத் தாண்டி நகர்ந்து பொய்மையாக, வசதியான பொருட்களுக்காக, குழந்தைகளைப் பராமரிப்பதற்காகப் போய்க்கொண்டிருக்கிறது.'

'அதாவது அவர் உங்களின் காதலின் உச்ச நிலைக்கு உன்னைக் கொண்டுசெல்லவில்லையா?' ஹிலரி பச்சையாகக் கேட்டாள். கமலா அவளைக் கோபத்துடன் பார்த்தாள்.

'கல்யாணமாகாத விமலா இருக்கு மிடத்தில் பேசக்கூடிய பேச்சா இது?' கமலா முணுமுணுத்தாள்.

உஷா, மஞ்சுளாவை ஆழமாகப் பார்த்தாள். இருவரும், இந்தியாவின் இரு வேறுபட்ட பிரதேசங்களிலிருந்து வந்த பெற்றோருக்கு லண்டனில் பிறந்து வளர்ந்த பெண்கள்.

'ஓ கமலா! விமலாவுக்குக் கல்யாணம் பற்றிய சில விவரங்கள் தெரிய வேண்டுமென்றுதானே இந்தப் பார்ட்டி வைக்கிறோம்' ஹிலரி கமலாவைக் கடிந்துகொண்டாள்.

'அதற்காக.. எல்லாவற்றையம் பகிரங்கப்படுத்துவதா?' கமலா வாதம் செய்தாள்.

'ஆமாம், பெரும்பாலான பெண்கள் எல்லாவற்றையும் ஒளித்து மறைத்து வாழ்வதாற்தானே இப்படியிருக்கிறோம்?' உஷாவின் குரலிற் கோபம்.. 'பெண்களுக்கு அபாயமான இடம் அவளின் கணவரின் வீடு என்று தெரியாமல் பாசாங்கு செய்யாதே கமலா' உஷா வெடித்தாள்.

'ஓ.யெஸ் உஷா சொல்வது சரி....' மார்க்கரெட் ஒத்துப்பாடினாள்.

வேர்ஜினியா எல்லோரையும் அளவிட்டுப்பார்த்தாள்.

'விமலா உனது புருஷனை யாரிடமும் பறிகொடுக்காதே. அது சரி, வேர்ஜினியா உனது காதலன் எப்படி?' மார்க்கரெட் உரத்த குரலில் கேட்டாள்.

வேர்ஜினியாவின் முகத்தில் ஒரு கவர்ச்சியான புன்னகை தவழ்ந்தது.

'நான் இப்போது சேர்ந்து வாழும் காதலன் எனது நான்காவது காதலன்... எனது முதலாவது காதல் எனது பதினைந்து வயதில் வந்தது... எனது பாடசாலைச் சினேகிதிகள் பலர் அப்போது போய் பிரண்ட்ஸ் வைத்திருந்தார்கள். எனக்கு அப்படியொன்றும் இருக்கவில்லை. அதனால் அவர்களின் ஓயாத கிண்டல்களுக்கும் கேலிகளுக்கும் ஆளானேன்... எங்கள் வீட்டுக்குப் பக்கத்திலிருந்த பீட்டர் என்ற பையனுடன் சின்ன வயதிலிருந்தே ஒன்றாகப் பாடசாலைக்குப் போவேன். எனது சினேகிதிகளின் கிண்டலிலிருந்த தப்ப அவனை எனது போய் பிரண்ட்டாக நடிக்கச் சொல்லிக் கேட்டேன். அவன் ஒரு நோஞ்சான். சரியாக ஒரு நல்ல உடுப்பும் போடத் தெரியாதவன்.

ஒருநாள் அவன் எனது செக்ஸ் 'போய்பிரண்ட்டாக' மாற முடியுமா என்று கேட்டேன். அவனும் சரி யென்றான். எங்களுக்கு, செக்ஸ் என்றால் என்ன வென்று தெரியாது' வேர்ஜினியாவின் முகத்தில் தனது பழைய வாழ்க்கையை நினைத்து ஒரு குறும்புத்தனமான சிரிப்பு வந்துபோனது.

அவள் தனது கதையைத் தொடர்ந்தாள்,

'வெளியில் சரியான பனியடித்துக் கொண்டிருந்தது. வீட்டில் யாருமில்லை. பீட்டர் அடிக்கடி வீட்டுக்கு வருவதால் யாரும் சந்தேகப்படவுமில்லை. அவனுக்கும் ஒருநாளும் எந்த கேர்ள்பிரண்ட்ஸ்சும் இருக்கவில்லை. நாங்கள் இரு முட்டாள்களும் சேர்ந்து ஏதோ பண்ணினோம். அவன் தனக்குத் தெரியாத ஏதோ செய்ய வெளிக்கிட நான் வலியில் அலறினேன். அவன் பயத்தில் மிரண்டுபோய் என்னுடன் சேர்ந்த முதான். அது மட்டுமல்லாமல், அவனின் அழுகான சேர்ட்டும் காலணியும் நாற்றமடித்தன. அது ஒருபக்கம் எனக்கு வாந்தியை வரப்பண்ணியது. அவன் என் நிலையைக்கண்டு நடுங்கி விட்டான்... அதன் பிறகு பல காலமாக ஆண்களைக் கண்டால் எனக்கு அருவருப்பு வரும்.'

வேர்ஜினியா தனது கதையைச் சொல்லிவிட்டுச் சிரித்தாள். அவர்கள் எல்லோரும், வேர்ஜினியாவின், 'முதலிரவில்' நாற்றமடித்த காலணி பற்றிச் சொல்லிச் சிரித்தார்கள்.

'அப்படியென்றால நீயும் இப்போது... லெஸ்பியனா' கமலா தயக்கத்துடன் வேர்ஜினியாவைப் பார்த்தாள்.

'இல்லை கமலா.. உலகம் பதினைந்து வயதைத்தாண்டி ஓடிவிட்டது. யுனிவர்சிட்டியில் இன்னும் இரண்டொரு காதலர்கள் வந்துபோனார்கள். எனது மனம் ஒரு முழுமையான காதலனை, எனது ஆத்மீகத் தோழனைத் தேடிக்கொண்டிருந்தது. அந்தக் கால கட்டத்தில் ஒரு ஓவியனைச் சந்தித்தேன். அவன் பிறவிக் கலைஞன். ரிச்சார்ட் ஸேர்லிங் பெண்களை ரசிக்கத் தெரிந்தவன். காதல் புரிவது என்பது வெறும் செக்ஸ் செயற்பாடு மட்டுமல்ல, அது ஓர் உயர்ந்த கலையழகின் வெளிப்பாடு என்று உணரப் பண்ணியவன். மனித உணர்வின் ஒவ்வொரு நரம்பிலும் உள்ள இன்ப உணர்வின் ரகசியங்களுக்கும் உயிர்கொடுக்கத் தெரிந்தவன். பெண்ணுடம்மை ஒரு வாத்தியக் கருவியாக மீட்டி உச்சநிலைக்குக் கொண்டு போகத் தெரிந்தவன்...'

வேர்ஜினியா பேசிக்கொண்டி

ருந்தாள்.

'ஆஹா எவ்வளவு இனிமையான காதலன்..' மார்க்கரெட் சந்தோசத்தில கூவினாள்.

'அப்புறம்' ஹிலரி ஆவலுடன் கேட்டாள்.

'பல வருடங்களாக ஒன்றாக இருக்கிறோம்.. கல்யாணம் செய்வோமா என்ற கேட்டான்.. எங்கள் சுதந்திரத்தைப் பறிகொடுக்க நான் விரும்பவில்லை.. நான் என்னால் முடிந்த வரை, பெண்களின் வாழ்க்கைநிலை உயர ஆராய்ச்சிகளையும் அறிக்கைகளையும் தயாரிக்க உலகமெல்லாம் திரிபவள், அத்துடன் அவனை ஒரு கட்டமைப்புக்குள் சிறைபட்ட கலைஞனாகப் பார்க்க நான் விரும்பவில்லை. சுதந்திரமான எங்கள் உறவுக்குள் நேர்மையிருக்கிறது. ஒருத்தருக்கு ஒருத்தர் உண்மையாக இருப்போம் என்ற எங்கள் உறவு மிக மிக நெருக்கமானது. ஒளிவு மறைவற்றது. எங்கள் இனிய நெருக்கம் சொர்க்கத்தின் வாசல்கள். அவனது முத்தங்கள் மதுக்கிண்ணத்தின் மறுபெயர்கள். அவன் அணைப்பு இசையும் தாளமும் இணைந்த நாதத்தின் சங்கமம். அவனுடன் காதல் புரிவது இன்னொரு பிறவி என்னுள் வாழ்கிறது என்று காட்டும் அனுபவங்கள், அந்த அனுபவம் நீடிக்கும்வரை அவனுடன் நான் வாழ்வேன்' வேர்ஜினியா தனது இனிய கலவி அனுபவங்களின் ஞாபகத்தில் தனது கண்களை மூடிக் கொண்டாள்.

'ம்ம்.. வேர்ஜினியா மாதிரி எல்லோரும் அற்புதக் கலைஞனைக் காதலனாக அடைய முடியாது... நாங்கள் பெண்கள் அதிகம் எதிர்பார்த்தால் எதையோ இழக்க வேண்டிவரும்.. எனது அம்மா சொல்வதுபோல, பெண்கள் ஆண்களைத் திருப்தி செய்வதில் சந்தோசமடைய வேண்டும். அதுதான் நல்ல குடும்ப அமைப்புக்குச் சரியான வழி..' கமலா தனது சேலைத்தலைப்பைச் சரி செய்தபடி சொன்னாள்.

விமலா தன்னைச் சுற்றியிருக்கும் பெண்களைப் பார்த்தாள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு சரித்திரங்கள். அவற்றை, ஆண்களால் முழுமையாகப் புரிந்துகொள்ளவோ எழுதவோ முடியாதவை.

'இங்கு பேசப்பட்ட விடயங்கள் உன்னைக் குழப்பியிருக்காது என்று நினைக்கிறேன்;' ஜேன் வால்ட்டர் சிரித்தபடி விமலாவை அணைத்து முத்தமிட்டாள்.

'ஏய் விமலாப் பெண்ணே.. உன்னுடையவனிடம் உனது பரிபூரணமான உலகத்தைப் புரிந்துகொள்' மார்க்கரெட் கண்களைச் சிமிட்டியபடி குறும்பாகச் சிரித்தாள்.

'எங்கள் ஒவ்வொருத்தரின் அனுபவங்களும் வித்தியாசமானவை. நீ கெட்டிக்காரப் பெண். சுயமையை இழந்து விடாதே' வேர்ஜினியா சொன்னாள்.

சிந்தியா விமலாவைத் தனது காரிற் கூட்டிக்கொண்டு வந்தாள்.

'விமலா, இன்று பலதரப்பட்ட அனுபவங்களைக் கேட்டாய். சிலர் பாரம்பரியங்களின் கட்டுக்கோப்புக்குள் வாழ்கிறார்கள், சிலர் புதுமை என்று ஒரு வித்தியாசமான வாழ்க்கை முறையைத் தேடுகிறார்கள், வேர்ஜினியா போன்றவர்கள் புதுமையிலும் புதுமையாக, பாரம்பரியத்தைக் கேள்வி கேட்பவர்களாக, புதுமையை ஆராய்பவர்களாக, வாழ்பவர்களாக இருக்கிறார்கள். உலகம் மிகவும் வேகமாக மாறிக் கொண்டிருக்கிறது. எங்களின் வாழ்க்கை மிக மிகக் குறுகியது. அந்த வாழ்க்கைக் காலத்தில் மற்றவர்களுக்காக முற்று முழுதாக வாழ்ந்து முடிக்க நாங்கள் அடிமாடுகளல்லர்... சுயமையை இழந்து, பொருளாதார வசதிக்காக, சமுகத்தின் அங்கீகாரத்துக்காக வாழ்வது தனது ஆத்மாவுக்குச் செய்யும் துரோகம் என்று நினைக்கும் உஷாவை நான் மிகவும் மதிக்கிறேன்' சிந்தியா தனது 'ஆசிரியைப்' பாணியிற் சொன்னாள்.

விமலா வீடு திரும்பக் கொஞ்சம் நேரமாகி விட்டது.

'ஹென் நைட்டும் மண்ணாங்கட்டியும்' அம்மா எரிந்து விழுந்தாள்.

அம்மாவின் சினேகிதிகள், விமலாவுக்கு முந்திய தலைமுறையினர். ஆண்கள் முன்னெடுக்கும் நடைமுறைக்குள் வாழப்பழக்கப்பட்டவர்கள். பெரும்பாலும், தமிழர்கள், ஒரே மொழி, ஒரே கலாச்சாரத்தைக் கொண்டவர்கள். அவர்களை ஆதிக்கம் செய்யும் ஆண்களின் பார்வையில் உலகத்தைப் பார்க்கப் பழகிக் கொண்டவர்கள்.

அம்மா பழைய உலகத்துப் பெண், விமலாவின் அலுவலக சனேகிதிகள் பல மொழி, பல சாதி, பல்லின, பல கலாச்சார வேறுபாடுகளைக் கொண்டவர்கள். பலவிதமான அனுபவங்களுக்குள்ளால் உலகத்தைக் கணிப்பிடுபவர்கள்.

அவர்கள் அம்மாவின் உலகத்தைக் காணாதவர்கள். ஒரு பதிய தலைமுறை வித்தியாசத்தில் வாழ்பவர்கள். புதிய சிந்தனைகளும், புதிய தேடல்களும் உள்ளவர்கள். ஆண்களின் பொருளாதாரத் தயவில் வாழ வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லாதவர்கள். அதனால் ஆண்களால் முன்னிலைப்படுத்தும், கலாச்சார, பொருளாதார, பண்பாட்டுக் கட்டுப்பாடுகளை முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்ளாதவர்கள்.

அம்மாவின் அடுப்படிச் சினேகிதிகளும், விமலாவின் அலுவலகச் சினேகிதிகளுக்கும் இடையில் அவர்கள் எல்லோரும் பெண்கள் என்ற ஒற்றுமையைவிடப் பல வித்தியாசங்களுள்ளன. அலுவலகச் சினேகிதிகளிற் பலர், தங்களுக்கென்ற சுயமையை அடையாளம் காட்ட முனைபவர்கள்.

விமலாவின் எதிர்காலக் கணவன் பரமேஸ்வரன் பெரிய வேலையிலிருக்கிறான். நல்ல சம்பளம். வீடு இருக்கிறது. அவளுக்கு அதைவிட வேறுவேலை தேவையில்லை என்று அவன் அடிக்கடி சொல்லியிருக்கிறான். அவன் அவளை வாழ்க்கை முழுதும் நன்றாக வைத்திருப்பான் என்று அவளின் தாய் பெருமையுடன் சொன்னாள். அவளுக்கு இருபத்தொன்பது வயது, அவள் கணவன் பரமேஸ்வரனுக்கு முப்பத்தி ஐந்து வயது. இருவரின் குடும்பத்தினரும் அவர்கள் விரைவில் குழந்தை பெற்றுக்கொள்வது நல்லது என்ற புத்திமதி சொன்னார்கள்.

சில கிழமைகளில் விமலாவின் திருமணம் சிறப்பாக நடந்தது.


விமலாவின் கழுத்தில் பத்தொன்பது பவுனில் பெரிய தாலி ஏறியது. இனி விமலா என்பவளுக்குத் தனியடையாளம் கிடையாது. அவளின் படிப்பு, பட்டம், உத்தியோக அனுபவங்கள் அத்தனையும் அவளுடைய பழைய சரித்திரம். உஷா சொல்வதுபோல் அவளின் உடம்பு இரவில் கட்டிலிலும் பகலில் வீட்டிலும் அவள் கணவனின் விருப்பங்களை நிறைவேற்றும். அவள் இன்று தொடக்கம், அந்த வீடு, அவளின் கணவர், அவனின் பெற்றோர்கள், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளைப் பராமரிக்கும் ஒரு வேலையாளி. அதன் ஊதியம், பொருளாதார வசதியான வாழ்க்கை, சமுதாய அங்கீகாரம்.

முதலிரவு முடிந்து விட்டது. கலவி செய்த களைப்பில் பரமேஸ்வரன் நல்ல நித்திரை. விமலாவின் நினைவில், வேர்ஜினியாவும் அவள் பார்ட்னர் றிச்சார்ட்டும் ஏனோ வந்து எட்டிப் பார்த்தார்கள். அவளால் தூங்க முடியவில்லை. கன்னி கழிந்த காயம் அவளிடம் சிறிதளவில் நோ தந்தது. மிகச் சிரமத்தின் பின் நித்திரையில் ஆழ்ந்தபோது, கட்டிவைக்கப்பட்டு சூடு போடப்படும் அந்த மாடு கனவில் வந்தது. மாட்டுக்குச் சூடுபோட்டு தோல் கருகி எரிந்த மணம் மூக்கில் அடிக்கு மாற்போல் இருந்தது.

சட்டென்று எழுந்தாள்.

(முற்றும்)

# பறக்குது பார் கொடி...!



சீனாவில் இருந்து பரவத் தொடங்கிய கொரோனா வைரஸ் உலகம் முழுதும் மக்களைக் கொன்று வருகின்றது என்று அமெரிக்கா சீறிச் சினந்துகொண்டிருக்கும் சமயத்தில் அமெரிக்காவுக்கு அடுத்து நிலவில் கொடி ஏற்றியிருக்கிறது சீனா. இதன் மூலம் நிலவில் கொடி நாட்டிய 2ஆவது நாடாகப் பதிவாகியுள்ளது சீனா.

அமெரிக்கா நிலவில் கொடி நாட்டிக் கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்குப் பிறகு சீனாவின் கொடி அங்கு பறக்கிறது. நிலவின் மேற்பரப்பில், காற்றில்லாமல் அசைவற்ற நிலையில் மட்டைபோன்ற மாதிரித் தோற்றத்தில் ஐந்து நட்சத்திரங்களைக் கொண்ட சீனாவின் செங்கொடி பறக்கும் படத்தைச் சீனாவின் விண்வெளி ஆய்வு அமைப்பு வெளியிட்டுள்ளது.

கொரோனாப் பெருந்தொற்றுக்கு மத்தியிலும் நிலவின் மேற்பரப்பு மாதிரிகளைப் பூமிக்குக் கொண்டு வரும் முயற்சியில் சீனா ஈடுபட்டு வருகிறது என்று அது குறித்த விரிவான தகவல்களைக் கடந்த வார இதழில் தந்திருக்கையில், நிலவில் தரையிறங்கிய சீனாவின் சாங் - 5 விண்கப்பல் அங்கு சீனக் கொடியை நாட்டியிருக்கிறது. அது அங்கிருந்து பூமிக்குத் திரும்புவதற்கு முன்னர் தான் நாட்டிய கொடியைப் படம் பிடித்துக்கொண்டு திரும்பியுள்ளது.



பூமியில் நாம் பயன்படுத்துகின்ற சாதாரண கொடி நிலவில் நீண்ட நாள்களுக்கு நிலைக்காது என்பதால் அதற்கொனப் தனியாகத் தயாரிக்கப்பட்ட கொடி ஒன்றையே சாங் 5 நிலவில் நாட்டியுள்ளது. இந்தக் கொடி 2 மீற்றர் அகலமும், 90 சென்டிமீற்றர் உயரமும், ஒரு கிலோ நிறையும் கொண்டதாம்...! அத்தோடு அதிக குளிரைத் தாங்கும் தன்மையுடையதாகவும் தயாரிக்கப்பட்டது என்று சீனாவின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலவை ஆராயத் தொடங்கிய சீனா கடந்த ஏழு ஆண்டுகளில் அங்கு மூன்றாவது முறையாகத் தற்போது தரையிறங்கியுள்ளது.

1969ஆம் ஆண்டு, அமெரிக்கா, நிலவுக்குக் அனுப்பிய அப்பலோ-11 விண்வெளி ஓடத்தில் சென்று, நிலவில் முதல் கொடியை நாட்டியவர் எட்வின் பஸ் ஆல்ட்ரின். அவர் அந்தக் கொடியை அப்பலோ-11 விண்கலத்துக்கு அருகிலேயே நட்டார். விண்கலம் சந்திரனில் இருந்து புறப்படும்போது, அவர் நட்ட கொடி சேதமாகி இருந்தது.

பின்னர் 1972ஆம் ஆண்டு வரை, அடுத்தடுத்து நிலவுக்குப் பயணித்த அமெரிக்கா அங்கு 5 கொடிகளை நட்டது. அமெரிக்கா அங்கு நட்ட ஐந்து கொடிகளும் நிலவில் நல்ல நிலையில் இருக்கின்றன என்று 2012 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா குறிப்பிட்டது. இந்த நிலையில்தான் அங்கு ஆறாவது கொடியாகச் சீனாவின் கொடி பறக்கின்றது.




சின்னத்தம்பி - புங்குடுதீவு

# பொல்லாத சுவாமி அறை

கதை 15


1990இல் நான் பதின்ம வயதுச் சிறுவன் அப்பப்பா, அப்பம்மாவுடன் கூட்டுக் குடும்பமாக நாம் இருந்தோம். எனக்கு இரண்டு சகோதரிகளும், ஒரு சகோதரனும். அப்பப்பாவின் வீடு மிகப் பெரியது. கல்வீடு ஆனாலும் அதன் கூரை கிடுகால் வேயப்பட்டது. விசாலமான விறாந்தையும் சுவாமி அறை உட்பட நான்கு சிறிய அறைகளும் உண்டு. அவை அணைத்துமே மாட்டுச் சாணகம் கொண்டு மெழுகப்பட்டிருந்தன.

அத்திபாரமிடப்பட்டு களி மண்ணால் நிரப்பப்பட்ட தரை. வாரத்துக்கு ஒரு தடவையாவது அப்பம்மாவும் அத்தைமாருமாகச் சேர்ந்து களிமண்ணோடு சாணகம் பிசைந்து வீடு முழுதும் மெழுகுவார்கள். தினமும் அதிகாலையில் மஞ்சள் தண்ணீர் தெளித்துச் சுத்தம் செய்வார்கள். அந்தச் சமயத்தில் விறாந்தையிலேயே இரவில் உறங்குவது வழமையாக இருந்தது.

அனைவரும் இரவு உணவை முடித்துக் கொண்டு, கதைபேசிக் கொண்டே விறாந்தையில் தூங்கிவிடுவோம். ஆனால், சுவாமி அறையின் வாசலுக்கு நேராகவும், குறுக்காகவும் எங்களைப் படுப்பதற்கு அப்பப்பாவும், அப்பம்மாவும் அனுமதிப்பதில்லை.

“சுவாமி அறைக்குக் குறுக்கே கிடக்கக் கூடாது. அது தெய்வங்கள் போக்குவரத்துச் செய்யிற பாதை. அதிலை கிடக்கக்கூடாது” என்று அவர்கள் எச்சரித்து எங்களை விலகிக் கிடக்கச் சொல்வார்கள். அதையும் மீறி நாங்கள் அவ்விடங்களில் அயர்ந்து தூங்கிவிட் டால், பின்னர் எங்களை அப்பால் நகர்த்தி வளர்த்தி விடுவார்கள்.

சுவாமி அறையின் வாசலைத் தவிர்த்து ஆனால், அதற்கு அண்மையாக உறங்கிஷக் கிடந்த நான் ஒரு தடவை உறக்கக் கலக்கத்தில் உருண்டு அந்த வாசலுக்குக் குறுக்காகப் போய்விட்டேன். நல்ல தூக்கம். தூக்கத்துக்கு இடையில் என்னைப் போர்வை ஒன்



றாலோ அல்லது பாத்திரம் ஒன் றாலே மூடி யாரோ அமத்துவதுபோல இருந்தது. என்னால் மூச்சுவிட முடியவில்லை. மூச்சு முட்டிக் கிடந்தேன். குரல் கொடுத்து யாரையாவது அழைக்கலாம் என்றால் அதுவும் முடியாமல் இருந்தது.

தொடர்ந்தும் என்னை யாரோ மிகவும் இறுக்கமாக அமர்த்திக்கொண்டேயிருந்தார்கள். வியர்வையால் குளித்துக்கொண்டிருந்த என்னால் எந்தப் பக்கமும் அசைய முடியவில்லை. ஆனாலும் எனது தேகத்தை நான் இடறிக் கொண்டு அந்தப் பிடியில் இருந்து என்னை விடுவிப்பதற்குத் தொடர்ந்து போராடினேன். இறுதிவரை அது முடியவே இல்லை. ஒரு கட்டத்தில் மிகவும் களைத்துப்போய்விட்ட நான் மூர்ச்சையடங்கிக் கொண்டிருந்தேன். இப்போது நான் அந்தப் பிடியில் இருந்து விடுவிக்கப்படுவதை உணர்ந்தேன்.

அந்தச் சாமத்தில் வியர்வையால் குளித்துப் பதறி எழுந்த என்னை அப்பப்பாவும் அப்பம்மாவும், அம்மா, அப்பா, அத்தைமார் எனப் பலரும் சேர்ந்து ஆசுவாசப்படுத்தினார்கள். வேப்பங்குலையால் தடவி வீபுதி இட்டார்கள். அவ்வாறு அவர்களும் அனுபவித்ததாகக் கூறினார்கள். காலங்கள் உருண்டோட அந்த வீடு பின்னர் ஓடால் வேயப்பட்டு, சீமெந்து இடப்பட்ட தரையானது. வீட்டின் தோற்றமும் மாறியது.

அப்பப்பா, அப்பம்மா இறந்து, அத்தைமாரும் திருமணம் முடித்து ஆளுக்கொரு திக்கில் போய்விட அதில் ஒருவருக்கு அந்த வீடு சீதனமாகியது. அவருடைய திருமணப் பொழுதில்... 2020ஆம் ஆண்டு ஆரம்ப காலம் அது. திருமண நாளுக்கு முன்னரான நாளில் திருமணத்தையொட்டி வந்திருந்த உறவினர்களால் நிறைந்திருந்தது அந்த வீடு.

அன்றிரவு பலர் கூடி உறங்கினார்கள். இரவு 3 மணியிருக்கும். சுவாமி அறைக்குள் படுத்திருந்த உறவினர் ஒருவர் பதறியடித்துக் கொண்டு வியர்வையால் குளித்தபடி வெளியே ஓடிவந்து சத்தமிட்டார். மிகவும் பயந்திருந்த அவர் நடுங்கிக் கொண்டிருந்தார். அத்தோடு 1990இல் எனக்கு நிகழ்ந்ததை அவர் அப்படியே ஒப்புவித்தார்.





யாழ்ப்பாணத்தில்

பாக்யா புத்தகசாலை - கொக்குவில்
(ஆடியபாதம் வீதி - கே.கே.எஸ். வீதிச் சந்திக்கருகில்) - 0212052419 / 0750415858

கொழும்பில்

பூபாலசிங்கம் புத்தகசாலை - வெள்ளவத்தை
கந்தையா அன்ட் சன்ஸ் - 357, காலிவீதி, பம்பலப்பிட்டி

தபாலில் பெற விபரங்களுக்கு (SMS மட்டும்) - 0769 355 944

https://www.facebook.com/tamilcomics/

# ஏந்நாளும் நலம் வாழ

மருத்துவம்



## மழைக்கால நோய்கள்

மருத்துவர் - கந்தையா சோதிதாசன்

புரவிப் புயலால் ஏற்பட்ட அதிக மழை வெள்ள இடர் நாட்டின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் மக்களின் இயல்பு வாழ்க்கையை நெருக்கடிக்குள்ளாக்கி இருக்கிறது.

இது இடப்பெயர்வுகள் பொருளாதார இழப்புகள் என்பவற்றை ஏற்படுத்தியிருப்பதோடு மழைக்காலத்திக்கே உரிய தடிமன், சளி, இருமல், நுளம்புகளால் பரவும் டெங்கு மற்றும் தோல் நோய்கள் என்பன பரவக் கூடிய சூழ்நிலையும் ஏற்படுத்தியிருக்கிறது.

சித்த மருத்துவ முறைப்படி உணவே மருந்தாக அமைகிறது. எமது சூழலில் கிடைக்கிற துளசி, தூதுவளை, இஞ்சி, ஆடாதோடை, நொச்சி, மஞ்சள் போன்ற மூலிகைகளைப் பயன்படுத்துவதன் மூலம் இந்த நோய்களில் இருந்து விடுபட முடியும்.

காய்ச்சல் மற்றும் தடிமன், ஆஸ்துமா என்பவற்றுக்கு நடு நரம்பு நீக்கிய ஆடாதோடை இலைகள் நான்குடன் அதிமதுரம் 10 கிராம், மிளகு 5 கிராம் என்பவற்றைத் தேன் விட்டு வதக்கி 200 மில்லி நீர் விட்டுக் கொதிக்கவைத்து 50 மில்லி ஆக்கி மூன்றுவேளை குடிக்கலாம் .

தொண்டை கரகரப்பிற்கு மூன்று மிளகை வெற்றிலையில் வைத்து மென்று தின்னக் குணமாகும்.

டெங்குக் காய்ச்சலுக்குப் பப்பாளி மரத்தின் இலை கசாயம் சிறந்த பயன் அளிக்கிறது ...

ஆயுர்வேத மருத்துவர் ஒருவரின் கண்காணிப்பில் நிலவேம்பு கசாயம் அருந்தியும் குணம் பெறலாம்.

பொதுவாக மழைக்கால நோய்கள் முதியவர்களையும் குழந்தைகளையுமே அதிகளவில் தாக்குகின்றன. இவர்களது உடலில் நோயெதிர்ப்பு சக்தி குறைவாயிருப்பதே இதற்குக் கரணம் ஆகும். எனவே நோயெதிர்ப்பு சக்தியை வழங்கக் கூடிய உணவுகளை இவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

இரவில் சிறிது மஞ்சள் போட்டுக் காச்சிய பாலை முதியவர்களுக்குக் கொடுப்பது சிறந்தது.

இதனோடு சத்தான பழங்களையும் மரக்கறி வகைகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

ஆவிபிடித்தல் சுவாச நோய்களுக்கு சிறந்த செலவில்லாத சிகிச்சை யாகும்.

சூடான நீரில் மஞ்சள், எலு மிச்சை, இஞ்சி, துளசி, வேப்பிலை ஆகிய வற்றில் ஏதேனும் ஒன்றை இட்டு ஆவி பிடிக்கலாம்,

உங்களால் தாங்கக்கூடிய அளவிலான சூடான நீரில் ஆவி பிடிக்கவும். 5 முதல் 10 நிமிடங்கள் வரை ஆவி பிடிக்கவும்.



இத்துடன் தாளிசாதி சூரணம், சுவாசகுடோரி, பிப்பிலியாசவம் போன்ற ஆயுர்வேத மருந்துகளை வைத்தியர் ஒருவரது ஆலோசனையின்படி பயன்படுத்திக் குணம்பெறலாம்.

மழைக் காலத்தில் ஏற்படுகின்ற நீர்ச் சிரங்கு போன்ற சரும நோய்களுக்கு குப்பைமேனி, மஞ்சள், பச்சை கற்பூரம் என்பவற்றை இட்டு தேங்காய் எண்ணெய்யில் காச்சிய குப்பை மேனித் தைலத்தைப் பயன்படுத்தி குணம் பெறலாம்.

# போதனையிலும் சாதனை சிறந்தது....

சாம் - ரமேஸ்குமார்

இந்து இதிகாசங்களையும், புராணங்களையும் காலம் காலமாய் நாம் திரும்பத் திரும்பப் படித்து வருகின்றோம். இருந்தும் எம் நாட்டில் காவல் நிலையங்களும், நீதி மன்றங்களும் ஏன் குற்றங்களால் நிரம்பி வழிகின்றன?

இராமயணத்தைப் பலமுறை படித்த பிறகும், கேட்ட பிறகும், பிறரின் மனையாள் மீது இருக்கும் ஆசையோ எமக்கு இன்னும் அடங்கவில்லை. மகாபாரதத்தைப் பலமுறை படித்த பிறகும், கேட்ட பிறகும், பிறரின் மண் மீது இருக்கும் பேராசையோ அல்லது பொறாமையோ இன்னும் குறைந்தபாடில்லை. எல்லாக் கேள்விளுக்குமான தகுந்த பதிலைத்தான் நாம் இன்று தேட வேண்டும்.

இராவணன் சிறந்த சிவ பக்தனாக இருந்தான். ஆனால் இராமனின் மனைவியான சீதையைத் தூக்கி வந்ததால் அவன் சிரச்சேதம் செய்யப்பட்டான். ஒருவன் சிறந்த இறை பக்தனாக இருந்தாலும், அதர்மத்தை நோக்கி அவன் செல்வானாயின் வதைக்கப்படுவான் என்பது இதிலிருந்து எமக்கு தெட்டத் தெளிவாக விளங்குகின்றது.

அதர்மத்தின் தரப்பாக நின்ற நூறு கௌரவர்களுக்கும் இறுதியில் நடந்த நிகழ்வுகள் எமக்கு இன்றும் நினைவில் இருக்கலாம். அவை நினைவில் இருந்தாலும், பிறரின் நிலபுலங்களில் இருக்கும் பேராசையும், பொறாமையும், அவை எல்லாவற்றையும் அபகரிக்க வேண்டும் என்ற எண்ணமும், சூழ்ச்சியும் இந்துக்களாக வாழும் எம்மிடமும் கடுகளவும் குறைந்தபாடில்லை.

இன்றும் எம் மத்தியில் எல்லைச் சண்டையும். வரம்பு, வாய்க்கால் சண்டையும் வரம்பு மீறித்தான் செல்கின்றன. ஆனால் இச்சண்டையில் ஈடுபடுவோர் இன்றும் தங்கள் பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் மகாபாரதத்தைப் போதித்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள். இதுவும் ஒரு வியப்புக்குறிதான்.

முன்னர் ஒரு காலத்தில் யாழ்ப்பாணம் 'கந்த புராண பூமி' என முன்னோர்களால் அழைக்கப்பட்டது. அந்தளவுக்குத் தெருவுக்குத் தெரு புராண படலங்களால் தர்மங்கள் எங்கும் செழித்தோங்கியது. இன்று குற்றங்களின் அதிகரித்த இடமாக நீதிமன்றங்களால் 'யாழ்ப்பாணம்' நிரூபிக்கப்பட்டுள்ளது.

எங்கு பார்த்தாலும் கொலை, களவு, கற்பழிப்பு, வழிப்பறியென்று இந்தப் பட்டியல் நீண்டு செல்கின்றது. காலப்போக்கில் இந்தக் குற்றங்கள் இன்னும் நீளலாம் அதில் எந்தச் சந்தேகமும் இல்லை. இதெல்லாம் எதனால் நடக்கின்றன..?

ஆறுமுக நாவலர் காலத்திலிருந்து இன்று வரை அர்த்தமுள்ள இதிகாசங்ளையும், புராணங்களையும் யாழ். மண்ணில் போதித்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள். இருந்தும் என்ன பயன்..? அறியாமையெனும் இருளடைந்து போயுள்ள மக்களின் மனங்களில் சொற்பொழிவாளர்களின் போதனைகள் ஏன் தாக்கம் செலுத்த மறுத்துவிட்டன? புது விடியலை ஏற்படுத்தவில்லை? காரணம் சொற்பொழிவாளர்கள் தாங்கள் மக்களிடத்து போதிக்கும் இறை செய்திகளை அல்லது தத்துவங்களைத் தங்களுக்குள் தாங்களே கடைப்பிடித்து ஒழுகாததாகக்கூட இருக்கலாம்.

பெயருக்காகவும், புகழுக்காகவும், பட்டங்களுக்காகவும் போதனைகளை நிகழ்த்தினால், மக்களின் மனங்களில் இருளைத்தான் நிரப்ப முடியும். ஒருபோதும் ஆன்மீக விடியலை ஏற்படுத்தவே முடியாது என்பதைச் சொற்பொழிவாளர்கள் சற்றுச் சிந்தித்துக்கொள்ள வேண்டும்.

ஒருவர் தாம் கடைப்பிடிப்பதையே பிறருக்கு போதிக்க முன்வர வேண்டும். ஏனென்றால் அதிலிருந்துதான் பெரும் சக்தி வெளிப்படுகின்றது. அச்சக்தியே போதிப்பவனுடைய ஆன்மாவிடத்தில் கேட்பவனின் ஆன்மாவை ஈர்க்கின்றது. அதாவது பூவை நாடி வரும் தேனிபோல.

இன்றைய சமகாலத்தில் அனேகமான சொற்பொழிவாளர்கள். கம்பை எடுத்துச் சிலம்பாட்டம் செய்கின்ற வீரனைப்போல், ஆலயங்களில் சொற்களை எடுத்துச் சொல்லாட்டம் செய்கின்றார்கள். இந்த வாரத்தை மாயங்களால் எந்த பயனும் கிடையாது. தான் காணாத இறைவனின் திருவடி தரிசனத்தைப் பிறருக்குப் போதிக்க முற்பட்டால் அது எப்படி அவர்களால் பின் பற்றப்படும். சமயச் சொற்பொழிவுகள் எப்போதும் தொழிலாக மட்டும் இருந்து விடக் கூடாது. அவை பாடங்களாகவும் இருக்க வேண்டும். அத்தகைய இந்து சமயச் சொற் பொழிவாளர்களை விரல் விட்டு எண்ணி விட லாம்.

நீங்கள், உங்களுக்குள் கண்டுணர்ந்த உண்மையைத்தான் பிறருக்குப் போதிக்க முற்படுங்கள். அதுவே இறை தர்மமாகும். நீங்கள் பின்பற்றுவதையே பிறருக்குப் போதிக்கும்போது ஆயிரத்தில் ஒருவராவது அதைக் கேட்டுப் பின் பற்றும் வாய்ப்பு தானாகவே வந்து அமைந்து விடுகின்றது.

இல்லையென்றால் இறை தர்மத்திற்கு முன் மன்னிக்க முடியாத அதர்மத்தைச் சுமந்தவர்களாய் நரகத்தில் விழ வேண்டி ஏற்படலாம். உங்கள் தலைமுறையே அந்தப் பாவத்தின் கறையைச் சுமக்க வேண்டி ஏற்படும்.

அதனால் 'போதனையிலும் சாதனை சிறந்தது' என்கிறார் எம் ஈழத்துச் சித்தர் தவத்திரு யோகர் சுவாமிகள். ஆன்ம சாதனை செய்த பின்பே பிறருக்குப் போதிக்க முற்பட வேண்டும். அதுவே உலக ஞானிகளின் தலைசிறந்த தர்மமாகும்.

## ஆசிரியருக்கு ஒரு கடிதம்

### செம்மண்ணோடு குழைய விரும்புவது......

நான் செம்மண்ணில் மூன்றாம் துகளிலிருந்து புரண்டும் அழைந்தும் வரும் ஒருவன். சமூகப் பொறுப்புமிக்க விதமான ஆக்கங்களால் சமூகத்தக்குக் கூறவேண்டியவற்றைக் கூறக்கூடிய எளிய தெளிந்த நடையில் கவனத்தை விடயப்பரப்பில் ஆழமாகப் பதிக்கக்கூடிய விதமான வடிவமைப்பில் இயலுமானளவு சுருக்கமாகவும் அதேவேளை மிகவிளக்கமாகவும் நிறைத்த வளமான செம்மண்ணாக அமைந்திருந்தது. ஆசிரியர் மற்றும் அவரோடிணைந்த அனைவரும் பாராட்டுக்குரியோராகின்றனர்.

இருபதாவது துகழ் வரை சங்கடமின்றிப் பெருமிதத்தோடு இது தொடர்ந்தது. இந்தத் துகளை கண்ணில் ஒற்றவோ கட்டியணைக்கவோ முடியவில்லை. அவ்வாறு செய்திருப்பின் அதன் முன்பக்கப் படத்தோடு பொருத்தி என்னை ஒருவிதமானவனாகவே சூழஉள்ளோர் பார்த்திருப்பர் என்பதில் உங்களுக்கும் சந்தேகமேதுமிருக்காது என நம்புகின்றேன்.

அவ்வாறானதொரு படமும் அதுதொடர்பான முதன்மைக் கட்டுரையும் ஏன் என இப்போது வரை குழப்பமான பல கேள்விகளோடு அல்லாடுகிறேன். ஆறியிருந்து பலவிதமாக யோசித்தேன். இதனது நோக்கம் பத்திரிகையினது விற்பனை அதிகரிப்பா? தக்கவைத்தலா? இன்றைய குறைந்துவரும் (அச்சு) வாசிப்புச் சூழலில் அரசியல் நிலைப்பாடு பண்பாடு என தெளிவானதொரு பார்வையோடும் நிலைப்பாட்டுடனும் முன்கூறப்பட்ட விதமான சிறப்புகளோடு வெளிவரும் ஒரு பத்திரிகை தனக்கென ஒரு (பண்பட்ட) வாசகர் கூட்டத்தை தக்கவைத்தல் என்பதும் விரிவாக்கம் பெறுதல் என்பதும் சவாலான ஒரு விடயமே அல்ல. அப்படியிருக்கையில் இது ஏன்?

சமூக கவனத்தைத் திசைமாற்றுதல் எனும் தேவை அரசியலுக்குப் பொருந்தலாம். அண்மைய உதாரணமாக மாவீரர் தினம் புட்டுச் சிந்தனையால் திசைமாற்றப்பட்டமையை எடுத்துக்கொள்ளலாம். அது பற்றிய ஒரு விரிவான பார்வையை செம்மண் தாங்கிருந்தது இங்கு கவனிக்கத்தக்கது. அப்படியிருக்கையில் இந்த அட்டை பத்திரிகைக்கு பொருந்துமா? அதுவும் செம்மண்ணுக்கு அடுக்குமா? வெள்ளக் குளிருக்குச் சூடேற்றம் செய்வதாயின் இப்படியும் செய்யலாமோ! எண்ணத் தோன்றுகிறது. அப்படியான வாசகர் சுவைக்கும் வழிநிறைத்தல் எனும் பெருமனமிருந்தால் உட்பக் கங்களில் மறைவாக மறைப்பற்ற உடல்களை காட்சிப் படுத்தலாமல்லவா?

இனிவரும் துகழ்கள் அருங் குவியலாக மாற வாழ்த்துக்களுடன் நிறைக்கிறேன்.

நன்றி.

**செம்மண் அழையும் அன்பன்**
**சி.சுதன், சங்கானை.**

**ஆசிரியர் பதில்:** இந்த டிஜிட்டல் யுகத்தில் செம்மண்ணில் புரண்டு, அதை அழையும்போது கையில் நெருடிய முள்ளைப் பற்றியும் எழுதி அனுப்பிய அன்புரிமைக்காக சிரம்தாழ்ந்த வணக்கம்! வாழ்த்து!

செம்மண்ணின் ஒரே கொள்கை, பார்வை அது எந்தச் சட்ட கங்களுக்கும், வகைப்பாடுகளுக்கும், சார்பு நிலைகளுக்குள்ளும் அடக்கப்படமுடியாதது என்பதுதான். எதையும் எந்த எல்லைவரை சென்றும் பேசும், நெற்றிக்கண் திறக்கினும் குற்றம் குற்றமே என்றவரின் வாரிசுத் திறத்தைப் பெற முனையும் ஒரு முயற்சிதான் இது. அதற்காக அது மனிதத்தைத் தொலைத்து சமூக அக்கறையைப் புறக்கணித்துவிடும் என்பது பொருளல்ல.

எந்தவொரு சட்டங்களுக்குள்ளும் மட்டுப்பட்டுவிடாத நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் கையாளப்பட்ட 21ஆவது அட்டைப்படக் கட்டுரை வாசகர்கள் பல ருக்கும் நெருடலை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைக் கிடைத்த தொலைபேசி அழைப்புக்கள், குறுந்தகவல்கள், உள்பெட்டித் தகவல்கள், மின்னஞ்சல்களில் இருந்து புரிந்துகொள்ள முடிக்கின்றது. எதிர்பாராத அந்த நெருடலை, உறுத்தலைத் தந்ததற்காக ஆசிரியர் என்கிற முறையில் வாசர்களிடம் என் உளமார்ந்த மன்னிப்பைக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேநேரம் இந்த அட்டைப் படத்திற்காக ஒரு சில வரவேற்பையும் நாம் எதிர்கொண்டோம் என்பதைக் கவனத்தில் கொண்டிருக்கின்றோம் என்பதையும் நான் இங்கு மறைக்க விரும்பவில்லை. ஆனால், இனியொரு போதும் இத்தகைய உறுத்தல், நெருடலைச் செம்மண் தனது வாசகர்களுக்குத் தராது என்பதை உறுதியாகக் கூறுகின்றேன்.

## ஒய்வை அறிவித்தார் படேல்...!




இந்தியக் கிரிக்கெட் வீரர் பார்தீவ் அஜய் படேல் அனைத்து விதமான கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் ஒய்வு பெறுகிறார் என அறிவித்துவிட்டார். அறிவிப்பு வெளியாகும் தருணத்தில் அவருக்கு வயது 35. தனது கீச்சகப் பக்கத்தில் அவர் இந்தத் தகவலைப் பதிவிட்டிருந்தார். அந்தப் பதிவில் பிசிசிஐ, குஜராத் கிரிக்கெட் சங்கம், ஐ.பி.எல். நிர்வாகம், குடும்பத்தினர்கள், ரசிகர்கள், அணித் தலைவர்கள் என அனைவருக்கும் நன்றி கூறிய அவர், கங்குலிக்கும் நன்றி தெரிவித்தார்.

2002இல் இந்திய அணியில் குறைந்த வயதில் இடம் பிடித்த இவர் 2003ஆம் ஆண்டில் நியூசிலாந்துக்கு எதிராக ஒரு நாள் போட்டியிலும் 2011ஆம் ஆண்டில் மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான ரி20 போட்டியிலும் விளையாடினார். 2018இல் தென் ஆபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில், இந்தியாவுக்காக விளையாடியதுதான் இவரது கடைசி டெஸ்ட் போட்டி. இலங்கைக்கு எதிராக, 2012 இல் விளையாடியது இவரது கடைசி ஒரு நாள் போட்டி. இங்கிலாந்துக்கு எதிராக 2011இல் விளையாடியது கடைசி சர்வதேச ரி20. எல்லாமாக 25 டெஸ்ட், 38 ஒரு நாள் மற்றும் இரண்டு டி20 போட்டிகளை விளையாடி இருக்கிறார். டெஸ்டில் 6 அரைச் சதங்களையும், ஒரு நாள் போட்டியில் 4 அரைச் சதங்களையும் பதிவு செய்துள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் அணியில் தனக்கான இடம் குறைவாகவே இருப்பதாகப் பல தடவைகள் தனது மனக்குமுறலை வெளிப்படுத்தி வந்த நிலையிலேயே ஒய்வை அறிவித்திருக்கிறார்.

## ஜமாலை அடுத்து மலாலா...?

சவூதி அரேபியாவைச் சேர்ந்தவர் பத்திரிகையாளர் ஜமால் கசோக்ஜி. அமெரிக்கப் பத்திரிகையில் பணியாற்றிவந்த அவர் தனது திருமண விடயம் ஒன்றுக்காகத் துருக்கியிலுள்ள சவூதித் தூதரகத்தை அணுகியபோது தூதரகத்துக்குள் வைத்துச் சின்னாபின்னமாகத் துண்டுகளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். இறுதி வரை அவரது உடலைக் கண்டுபிடிக்கமுடியாத அளவுக்குக் கொடூரமாகக் கொல்லப்பட்டார்.

சவூதி அரசரே இந்தக் கொலையின் பின்னால் இருக்கிறார் என்று வெளிப்படையாகவே பேசப்பட்டது. அது குறித்த உள்ளக விசாரணைகளைச் சவூதி கண்துடைப்பாக முன்னெடுத்து வருகிறது. ஜமால் கொல்லப்பட்டது 2018ஆம் ஆண்டு. இதுவரை அந்த வழக்கில் எந்தத் தீர்ப்பும் முடிவும் இல்லை. இப்படியிருக்கையில், ஆப்கானிஸ்தானில் மற்றொரு பத்திரிகையாளர் கொல்லப்பட்டிருக்கிறார்.

தொலைக்காட்சிப் பத்திரிகையாளரான மலாலா மைவந்த் என்பவர் ஆப்கானின் ஜலாலாபாத் நகரில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் மாத்திரமன்றி மலாலா மைவந்த்தை வேலைக்கு ஏற்றிச் சென்று கொண்டிருந்த அவருடைய வாகன ஓட்டுநரும் கொல்லப்பட்டார்.

ஆப்கானிஸ்தானின் சுதந்திர பத்திரிகையாளர்கள் சங்கம் ஆப்கானிய பாதுகாப்பு நிறுவனங்களிடம் இந்தக் கொலை குறித்து விசாரணை செய்து கொலையாளிகளைக் கண்டுபிடிக்குமாறு கோரியுள்ளது. 2020ஆம் ஆண்டில், 10 ஆப்கானிய ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். உலகம் முழுதும் ஊடகவியாலாளர்கள் குறிவைக்கப்பட்டுக்கொண்டேயிருக்கிறார்கள்.



# திடீரென ஏன் இப்படியொரு முடிவு?

## விலகாத மர்மங்களில் நடிகை சித்ரா சாவு

பாண்டியன் ஸ்ரோர்ஸ்' என்கிற விஜய் தொலைக்காட்சித் தொடரில் முல்லை என்கிற பாத்திரம் ஏற்று நடித்து வந்ததன் மூலம் எம்மவர்க்கும் அறிமுகப்பட்ட 28 வயதேயான இளம் நடிகை சித்ரா தற்கொலை செய்துகொண்டார் என்கிற செய்தி பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

அவரது இறப்புச் செய்தி அவருடைய ரசிகர்களைச் சோகத்தில் ஆழ்த்தியிருக்கிறது. அவர் தானே தனது உயிரை மாய்த்துக்கொண்டார் என்றே அவரது இறப்புத் தொடர்பில் மருத்துவ, காவல்துறை விசாரணைகளில் முடிவாகியிருக்கின்றது. ஆனால், மிகவும் தைரியசாலியும் புத்திசாலியுமான சித்திரா தற்கொலை செய்து கொள்ளுமளவிற்குக் கோழையல்ல என்று சீறுகிறார்கள் அவரது நெருங்கிய நண்பர்கள்.

தொடர் நாடகங்களில் அவரது நடிப்புப் பேசப்படுமளவுக்கு, அவருடைய இறப்பும் அதையொட்டிய சம்பவங்களும்கூடப் பேசப்படுகின்றன. அத்தோடு ஏனைய தொடர்நாடக நடிகர்களை விடவும் சித்ராவுக்கு ரசிகர்களும், மவுசும் அதிகம். தொலைக்காட்சித் தொகுப்பாளராக அறிமுகமாகிப் பின்னர் சின்னத்திரை நாயகியாக வளர்ந்தவர்.



**தனது மகள் உயிரை மாய்த்துக்கொள்ளும் அளவுக்குப் பலவீனமானவர் இல்லை என்றும் அவர் உயிர் மாய்ப்பதற்குரிய தேவையும் இல்லை என்றும் தந்தை வாதிட்டார்**

### எவ்வாறு இறந்தார்...?

சென்னை - நசரத்பேட்டையில் உள்ள தனியார் நட்சத்திர விடுதி அறை ஒன்றில் அவர் தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். சென்னை - திருவான்மியூரில் தனது குடும்பத்தாருடன் வசித்து வந்த அவருக்குக் கடந்த ஆவணி மாதம்தான் ஹேமநாத் என்பவருடன் திருமண நிச்சயதார்த்தம் செய்யப்பட்டது. அடுத்த ஆண்டு தைமாதம் திருமணமும் நடக்கவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அவர்களுக்கு ஏற்கனவே பதிவுத் திருமணம் நடந்து விட்டது என்று இப்போது தகவல் வெளியாகி, ஏன் இந்த அவசரம் என்று அதுவும் சர்ச்சையாகி இருக்கின்றது.

இந்த நிலையில், 'பாண்டியன் ஸ்ரோர்ஸ்' தொடரில் நடிப்பதற்காகச் சென்னை - பெங்களூரு நெடுஞ்சாலைப் பகுதியில் உள்ள இவிபி ஃபிலிம் சிட்டிக்கு அவர் சென்று வரவேண்டியிருந்தது. திருவான்மியூரிலுள்ள அவரது வீட்டில் இருந்து அங்கு சென்றுவருவது சிரமம் என்பதால் படப்பிடிப்புப் பகுதிக்கு அருகே உள்ளவிடுதியில் அவர் தங்கினார் என்றும் அவருடன் ஹேமநாத்தும் தங்கினார் என்றும் கூறப்படுகிறது.

இந்த நிலையில், கடந்த புதன்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் தான் குளிப்பதற்காகக் ஹேமநாத்தை வெளியே இருக்குமாறு சித்ரா தெரிவித்தார் என்று ஹேமநாத் கூறுகிறார். வெளியே வந்த பின்னர் வெகுநேரமாகியும் அறைக் கதவைச் சித்ரா திறக்காததால் விடுதி ஊழியர் ஒருவரின் உதவியுடன் அறையின் மாற்றுச் சாவியைப் பயன்படுத்தி அந்தக் கதவைத் திறந்தார் எனவும் அப்போது, சித்ரா தூக்கிட்ட நிலையில் கிடந்தார் எனவும் ஹேமநாத் காவல்துறையினரிடம் தெரிவித்தார்.

### சாவில் சந்தேகம்...?

காவல்துறையினரிடம் ஹேமநாத் மேற்கண்டவாறு கூறினாலும் சித்ராவின் கன்னம், தாடை ஆகிய பகுதிகளில் நகக் கீறல் மற்றும் குருதிக்கறை ஆகியன இருப்பது கண்டறியப்பட்டதாக வந்த தகவல்களையடுத்து அவரது சாவில் சந்தேகம் இருப்பதாக அவரது தந்தை காவல்துறையினரிடம் முறைப்பாடளித்தார்.

தனது மகள் உயிரை மாய்த்துக்கொள்ளும் அளவுக்குப் பலவீனமானவர் இல்லை என்றும் அவர் உயிர்மாய்ப்பதற்குரிய தேவையும் இல்லை என்றும் தந்தை வாதிட்டார். அத்தோடு "எனது மகளை அடித்துக் கொன்று விட்டார்கள். அவர் தற்கொலை செய்து கொள்ளக்கூடியவர் அல்லர்" என்று சித்ராவின் தாயாரும் தெரிவித்தார். இதனால் சித்ராவின் இறப்புக் குறித்துத் துரித விசாரணைகளில் காவல் துறையினர் இறங்கினர்.

சம்பவ நாளுக்கு முன்தினம் நள்ளிரவு வரை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவுகளை இட்ட சித்ரா தனது நண்பர்களுடன் தகவல் பரிமாற்றமும் நடத்தியுள்ளார். படப்பிடிப்பை முடித்து விட்டு நள்ளிரவு 2 மணியளவிலேயே அவர் விடுதிக்குச் சென்று சேர்ந்திருக்கிறார். படப்பிடிப்புத் தளத்திலும் அவர் உற்சாகமாகவே இருந்தார் என்கிறார்கள் சக நடிகர்கள். எனவே, இயல்பாக இருந்தவர் தற்கொலை செய்து கொண்டாரா அல்லது அதற்கு தூண்டப்பட்டாரா அல்லது தாக்கப்பட்டாரா என்ற கோணத்தில் காவல்துறையினர் விசாரித்தார்கள்.

அவர் கடைசியாக யாருடன் தொடர்பில் இருந்தார், இறுதியாக அவருக்குக் குறுந்தகவல்கள் யாரிடமிருந்து வந்தன என்று அவரது கைபேசியைக் கைப்பற்றியும் அவர்கள் விசாரிக்கிறார்கள். அவரது இறப்புத் தொடர்பாக முதன் முதலில் தகவல் அளித்த விடுதி நிர்வாகிகள், அவரது அறைக்கு மாற்றுச் சாவியை வழங்கிய ஊழியர், சித்ராவின் அறையில் தங்கிய ஹேமநாத் ஆகியோரிடம் விசாரணை நடத்துகின்றனர். இந்த விசாரணைகளின் முடிவிலேயே இந்த வழக்கில் உள்ள மர்மம் விலகும் என்று தெரிகிறது.

### உயிர்மாய்ப்பு என்கிறது அறிக்கை

சென்னை கீழ்பாக்கம் மருத்துவமனையில் சித்ராவின் உடல் கடந்த வியாழக்கிழமை காலையில் உடற்கூறாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. அதன் முடிவில், அவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்று தெரியவந்துள்ளதாகக் காவல்துறையினர் தெரிவித்தனர். அவரது கன்னத்தில் ஏற்பட்ட கீறல்கள் சித்ராவின் நகக்கீறல்கள்தான் என்றும் அவர்கள் கூறினர். ஆனாலும் அவரது இறப்புத் தொடர்பாக ஹேம்நாத்திடம் காவல்துறையினர் தொடர்ந்து விசாரணை நடத்துகின்றனர்.

உடற்கூறாய்வின் முடிவின்படி அவர் உயிரை மாய்த்தார் என்றால் அதற்குத் தூண்டியது யார், காரணம் என்ன, அதன் பின்னணி என்ன என்பது குறித்து விசாரிப்பதாகக் காவல்துறை வட்டாரம் தெரிவிக்கிறது.

இவ்வாறிருக்கச் சித்ராவின் உடல் அவரது வீட்டுக்குக் கொண்டுசெல்லப்பட்டது. சித்ராவின் அஞ்சலி நிகழ்வுக்கு வந்த அவரது நண்பர்கள் பலரும் ஹேம்நாத்துக்கு குடிப்பழக்கம் உள்ளதாக வும் அவர் பல இரவு நேரக் கேளிக்கை விடுதிகளுக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார் என்றும்




"எனது மகளை அடித்துக் கொன்று விட்டார்கள். அவர் தற்கொலை செய்து கொள்ளக்கூடியவர் அல்லர்" என்கிறார் சித்ராவின் தாயார்.

தெரிவித்தனர் என்று ஊடகங்கள் பலவும் செய்தி வரைந்துள்ளன.

சித்திரா நள்ளிரவு தாண்டியும் படப் பிடிப்பில் கலந்துகொள்வது குறித்தும் தொலைக்காட்சித் தொடர்களில் நெருக்கமான காட்சிகளில் நடிப்பது குறித்தும் ஹேம்நாத்துக்கும் அவரது குடும்பத்தினருக்கும் பிடிக்கவில்லை என்றும் அதனை அவர்கள் கண்டித்தார்கள் என்றும் அதனால் ஏற்பட்ட வாக்குவாதங்களால் ஒரு தடவை தனது கையை ஹேம்நாத் அறுத்துக்கொண்டார் என்றும் சித்திராவின் நண்பர்கள் கூறுகின்றனர்.

இந்தத் திருமணத்தை நிறுத்துவதற்குகூட சித்ரா தயாராக இருந்தார் என்று அவரது தாயார் கூறினார் என்றும்கூடச் செய்திகள் வெளியாகி இருக்கின்றன. இவ்வாறு பல ஊகங்களும், சர்ச்சைகளும் தொடரும் நிலையில் சித்திராவின் இறப்பு பற்றிய மர்மமும் தொடர்கின்றது.



### சித்ராவின் திரைப் பயணம்

1992ஆம் ஆண்டு பிறந்த சித்ரா முதுகலை வரை படித்திருக்கிறார். பி.எஸ்.சி. இளங்கலைப் பட்டத்தைச் சென்னையில் உள்ள டொக்டர் எம்ஜிஆர் ஜானகி பெண்கள் கலை அறிவியல் கல்லூரியிலும் அதையடுத்து 2012 - 14ஆம் ஆண்டு எம்.எஸ்.சி. உளவியல் படிப்பை சென்னை எஸ்.ஐ.டி. கல்லூரியிலும் முடித்திருக்கிறார்.

முதுநிலை பட்டம் படித்துக் கொண்டிருந்த நேரத்திலேயே மொடலிங் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தொகுப்பாளராகப் பணியாற்றியுள்ளார். முதன் முதலாக இவர் மக்கள் தொலைக்காட்சியில் அறிவிப்பாளரானார். இவருடைய முதல் நிகழ்ச்சி, பத்து நிமிடக் கதைகள் என்னும் நிகழ்ச்சி. அதைத் தொடர்ந்து பல நிகழ்ச்சிகளைத் தொகுத்தார். அறிவிப்பாளரானார்.

நிறைய விளம்பர படங்களிலும் நடித்திருக்கிறார். பிரபலமான துணிக்கடைகள், தனியார் மருத்துவமனை, சமையல் எண்ணெய் ஆகியவற்றின் விளம்பரப் படங்களில் நடித்திருக்கிறார். சின்னத் திரையில் நிறையத் தொடர்களில் நடித்திருக்கிறார். 2014 ஆம் ஆண்டு ஜெயா ரீவியில் மன்னன் மகள் என்னும் தொடரில் வைஷாலி என்னும் கதாபாத்திரத்தில் அறிமுகமானார்.

தொடர்ந்து, சன் ரீவியில் சின்னப் பாப்பா பெரிய பாப்பா தொடரில் பெரிய பாப்பா கதாபாத்திரம் ஏற்று நடித்தார். விஜய் ரீவியின் சரவணன் மீனாட்சி சீசன் 2 இல் வேட்டையனின் தோழி கதாபாத்திரத்திலும் சீசன் - 3 இல் பேய் கதாபாத்திரத்திலும் நடித்தார். ஜீ தமிழில் டார்லிங் டார்லிங் தொடர், கலர்ஸ் தமிழில் வேலுநாச்சி தொடர் எனப் பலவற்றில் கால் பதித்த தேர்ந்த நடிகையாக வளர்ந்தார். கடைசியாக இவர் நடித்து வந்தது பாண் டியன் ஸ்ரோர்ஸ் தொடர்.

## எலும்பு + முருங்கைக்காய்ச் சாம்பார்




இறைச்சியை நீக்கிவிட்டு எலும்பில் சாம்பார் சமைப்பது என்பது வித்தியாசமானது. அசைவப் பிரியர்களைக் கவர்கின்ற நல்லதோர் ஓர் அசைவ உணவு இது. அதிலும் ஆட்டு எலும்பில் (குறிப்பாக நெஞ்சு எலும்பில்) இதைச் செய்யும்போது மணமும் ருசியும் தூக்கலாக இருக்கும். இதனுடன் முருங்கைக் காயையும் தக்காளியையும் சேர்த்தால் சுவை இன்னும் கூடுதலாக இருக்கும்.

இறைச்சியை விரும்பி உண்பவர்கள் இறைச்சியுடன் சேர்ந்தே கிடைக்கின்ற எலும்புகளைத் தனியாக்கியும் இந்தச் சாம்பாரைச் செய்வதற்கு முயற்சித்துப் பார்க்கலாம். அல்லதுபோனால், இறைச்சி நீக்கப்பட்ட எலும்பை மாத்திரமே தனியாக வாங்கியும் சமைத்து ருசிக்கலாம்.

**என்னென்ன பொருள்கள் தேவை…?**

கால் கிலோ (250கிராம்) வரையிலான எலும்பு, முருங்கைக்காய் 1, தக்காளிப் பழங்கள் 2, துவரம் பருப்பு 50 கிராம், பெரிய வெங்காயம் 1 (சின்ன வெங்காயமும் சேர்க்கலாம்) இஞ்சி, உள்ளி ஆகியன தேவையான அளவு, மிளகாய்த் தூள் 2 தேக்கரண்டி, தனியா தூள் 4 தேக்கரண்டி, மஞ்சள் தூள் சிறிதளவு, கரைத்த புளித் தண்ணீர் 2 தேக்கரண்டி, உப்பு தேவையான அளவுக்கு.

அத்தோடு கீழ் வருகின்ற பொருள்களை அரைத்து எடுத்துக் கொள்ளவேண்டும். துருவிய தேங்காய்ப்பூ - 2 மேசைக்கரண்டி, கசகசா - 1 தேக்கரண்டி, மிளகு - 1 தேக்கரண்டி, சீரகம் - 1 தேக்கரண்டி. இவற்றோடு கீழ்வரும் பொருள்களைத் தாளித்துத் தனியாக எடுத்து வைத்திருக்க வேண்டும். புரியாணி இலை - 1, கறுவாப் பட்டை - சிறிய துண்டு, பெருஞ்சீரகம் - 1 தேக்கரண்டி, செத்தல் மிளகாய் - 2, கறிவேப்பிலை தேவையான அளவு, நல்லெண்ணெய் - 2 மேசைக்கரண்டி.

**எப்படிச் சமைப்பது…?**

வெங்காயம், தக்காளிப் பழங்கள் ஆகியவற்றை நறுக்கி கொள்ளுங்கள், முருங்கைக்காயைத் துண்டுகளாக வெட்டிக்கொள்ளுங்கள், எலும்பை நன்றாகக் கழுவி சட்டிக்குள் போட்டு அடுப்பில் வைத்துத் துவரம் பருப்பு, உப்பு, மஞ்சள்தூள் ஆகியன இட்டு 2 கப் தண்ணீர் சேர்த்து நன்கு கொதிக்க வையுங்கள்.

பிறிதொரு சட்டியில் நல்லெண்ணெய் விட்டு, தாளித்த பொருட்களைப் பிரட்டி எடுங்கள். இதனுடன் நறுக்கிய வெங்காயத்தைச் சேர்த்து அதை நன்கு வதக்குங்கள். சிறிது நேரத்தின் பின்னர் அதனுடன் தக்காளியைச் சேர்த்து அது கரையும்வரை வதக்குங்கள். பிறகு, கொதிக்க வைத்திருந்த கலவையை இதனுடன் சேருங்கள்.

பின்னர் மசாலாத் தூள், முருங்கைக்காய், தேவை யான உப்பு ஆகியன சேர்த்துக் கலந்து நன்கு கொதிக்க விடுங்கள். சற்றுநேரத்தில் புளித் தண்ணீரையும், தேங்காய்த் துருவலையும் சேர்த்து கொதிக்க வைத்து இறக்குங்கள். சுவையான, மணம் மிகுந்த எலும்பு முருங்கைக்காய் சாம்பார் தயார்.



## எல்லை மீறினேன்; வெற்றி பெற்றேன்!

### மனம் திறக்கிறார் ஏ.ஆர்.ரஹ்மான்

ஸ்லம்டோக் மில்லியனர், எலிசபெத்: தி கோல்டன் ஏஜ் ஆகிய படங்களுக்கு இசையமைத்தன் மூலம் உலக விருதுகளைக் குவித்த இந்திய இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான். பொலிவூட், ஹொலிவூட் மற்றும் இந்தியச் சினிமாத் துறைகளில் தனக்கென ஓர் இசைச் சாம்ராஜ்யத்தையே உருவாக்கி வைத்திருப்பவர்.

ஒஸ்கார் விருதுக்கும் சொந்தக்காரன். பிரிட்டிஷ் அக்கடமி ஒவ் ஃபிலிம் அண்ட் டெலிவிஷன் ஆர்ட்ஸ் என்கிற இசைக் கல்லூரியை இந்தியாவில் நிறுவி இசை பயிலும் மாணவர்களை அதில் இணைப்பதற்கான முயற்சிகள் நடப்பதால் பலரும் அதில் இணைவதற்கு மிகவும் உற்சாகமாக உள்ளனர் என்று ரஹ்மான் கூறுகிறார். 2013ஆம் ஆண்டிலிருந்து பிரிட்டனில் இயங்கி வருகின்ற அந்த நிறுவனம் மாறுபட்ட, கலைத்துறையைத் தழுவியது என்பது குறிப்பிடத் தக்கது.



“சினிமாத்துறை என்பது திரைப்படத் தயாரிப்புடன் மட்டும் நின்றுவிடவில்லை, அது திரைப்படம், தொலைக்காட்சி மற்றும் விளையாட்டுத் தொழில்களின் அனைத்துப் பகுதிகளிலும் ஆதிக்கம் செலுத்துவதுடன் திரைக்குப் பின்னால் பணிபுரியும் கலைஞர்களுக்கு வாழ்வளிப்பது வரையிலும் பரந்த அளவில் விரிவுபட்டிருக்கிறது”என்கிறார் ரஹ்மான்.

தமிழ் சினிமாவில் இயக்குநர் மணிரத்தினம் 1992ஆம் ஆண்டு இயக்கிய திரைப்படத்தில் இசையமைத்தன் மூலம் அறிமுகமாகிய ரஹ்மான் அந்தப் படத்தின் பாடல்கள் மூலம் பெயரையும் புகழையும் சம்பாதித்தவர். ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு முன்பு வெளியாகிய ரோஜாவின் வாசனையைத் தற்போதும் புத்துணர்ச்சியுடன் உணர்வதாகக் குறிப்பிட்ட ரஹ்மான் அதுபற்றிப் பெருமிதமடைந்தார்.

தன்னைத் தமிழ்த் திரைக்கு அறிமுகப்படுத்திய மணிரத்னம் குறித்தும் பேசினார். தனது சொந்த வழிகாட்டியான மணிரத்னத்தை அவர், ‘இந்தியாவின் ஸ்பீல்பெர்க்’ என்று விவரித்தார்: “எனது முதல் திரைப்படத்திற்காக இவ்வளவு பெரியவருடன் பணிபுரிவது மிகப்பெரிய பொறுப்பு - அது எனக்கு நிறைய ஆற்றலையும் தைரியத்தையும் கொடுத்தது” என்று ரஹ்மான் நினைவு கூர்ந்தார். “நான் கற்றுக் கொண்டேன், கற்றுக் கொண்டேன், கற்றுக்கொண்டேன் - அதற்காக நான் பணம் பெற்றேன்!” என்று இசையில் உச்சம் தொட்டுநிற்கும் அவர் நகைச் சுவை படரவும் பேசினார்.

இசையமைப்பாளராக அறிமுகமான ஒரு தசாப்தத்திற்குள், ஆண்ட்ரூ லாயிட் வெபரால் லண்டனின் வெஸ்ட் எண்டிற்கு இசையமைத்தும், தி லார்ட் ஒவ் தி ரிங்ஸின் இசைத் தழுவலைப் பெறவும் ரஹ்மான் அணுகப்பட்டார். சர்வதேச அரங்கில், அவரது பெரு வெற்றி, 2009இல் டேனி பாயலின் ஸ்லம்டாக் மில்லியனருக்கான மதிப்பெண்ணுடன், ரஹ்மானுக்கு ஒரு பாஃப்டா, கோல்டன் குளோப் மற்றும் இரண்டு ஒஸ்கார் விருதுகள் உட்படப் பல விருதுளுடன் கிடைத்தது.

இதில் எப்படிச் சாதித்தீர்கள் என்று கேட்டால், “திரைப்பட இசையின் எல்லைகளையும் வரம்புகளையும் எனது இசை மீற வேண்டும் என்பதே எனது நோக்கமாக இருந்தது” என்கிறார் 56 வயதான அவர்.

# சட்டியிலிருந்து அடுப்பிற்குள் வீழ்வதா?

● அகில்

கல்முனை மாநகரம் அண்மைக்காலமாக அடிக்கடி பரபரத்துக்கொண்டிருக்கின்றது. கல்முனை வடக்கு தமிழ் உப பிரதேச செயலகத்தைத் தரமுயரத்தும் விவகாரம் இதற்கான முக்கிய காரணம்.

நல்லாட்சி எனச் சொல்லப்பட்ட மைத்திரி - ரணில் ஆட்சிக் காலத்தில் இந்த உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவதற்கான நடவடிக்கை உடன் தொடங்கப்படும் என்று வாக்களிக்கப்பட்டது.



அதனடிப்படையில் உப பிரதச செயலகத்திற்கு நிரந்தர கணக்காளர் ஒருவரை நியமிப்பதற்கான உத்தரவும் அமைச்சரால் பிறப்பிக்கப்பட்டது. ஆனால், பின்னர் அது நிறுத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்து அதிபர் தேர்தல், பொதுத் தேர்தல் என்பன வந்த காரணத்தால் இந்த விவகாரம் தேர்தல் வடிவமெடுத்தது. தம்மை ஆட்சிக்குக் கொண்டுவந்தால், அல்லது வெற்றிபெற வைத்தால் கல்முனை உப பிரதேச செயலகம் தரமுயர்த்தித் தரப்படும் என்று அரசியல்வாதிகள் அதனைத் தேர்தல் வாக்கெடுப்பு பொறிக்குள் சிக்க வைத்தனர்.

இந்தப் பின்னணியில்தான் கடந்தவாரம் இடம்பெற்ற கல்முனை மாநகர சபையின் 2021 பாதீட்டுக் கூட்டம் நடத்தப்பட்டது. தேர்தல்களோடு கொஞ்சம் அடங்கியிருந்த இந்தப் பிரச்சினை மாநகர சபையின் பாதீட்டுடன் மீண்டும் தலைதூக்கியது.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஆளுகையில் உள்ள கல்முனை மாநகர சபையின் பாதீட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு பிரிவு ஆதரிக்க மற்றொரு பிரிவு எதிர்த்ததன் மூலம் இந்தச் சர்ச்சை மீண்டும் தலைதூக்கியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரு உறுப்பினர்கள் பாதீட்டுக்கு எதிராக வாக்களித்தனர். இதுவே தற்போது இந்த விவகாரம் மீண்டும் சூடு பிடித்திருப்பதற்குக் காரணம். கல்முனை உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவதற்கு நகர பிதா எதிர்ப்புத் தெரிவிப்பதைக் கண்டித்தே தாம் பாதீட்டை ஆதரிக்கவில்லை என்று அந்த இரு உறுப்பினர்களும் அறிவித்திருக்கிறார்கள்.

மாநகர பிதா சட்டத்தரணி ஏ. எம்.றகீம் தலைமையில் நடந்த கூட்டத்தில் பாதீட்டுக்கு ஆதரவாக 24 பேர் வாக்களித்திருந்தனர். 15 பேர் எதிர்த்து வாக்களித்தனர். 9 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது. கூட்டமைப்பின் 5 உறுப்பினர்கள் பாதீட்டுக்கு ஆதரவாகவும் 2 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர்.

கல்முனை தமிழ் உப பிரதேச செயலகத்தை முன்வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரண்டாகப் பிளவுண்டுள்ளமையே இப்போது இங்கு பெரிதும் பேசுபொருளாகியிருக்கின்றது.

**அடுத்த கணம்**

எதிராக வாக்களித்த கூட்டமைப்பின் இரு உறுப்பினர்களுமான சந்திரசேகரம் ராஜன், வி. சிவலிங்கம் ஆகியோர் ஊடகங்களிடம் பேசியபோது, ''கல்முனைத் தமிழ் மக்களின் உயிர்நாடியான கல்முனை வடக்கு தமிழ் உப பிரதேச செயலகத் தரமுயர்த்தலை வலியுறுத்தி நடந்த பட்டினிப் போராட்டத்திற்கு எதிராக இடம்பெற்ற முஸ்லிம்களின் பட்டினிப் போராட்டத்தில் மாநகர முதல்வர் றகீம் கலந்துகொண்டு தமிழர்களுக்கு எதிராகச் செயற்பட்டமை மற்றும் தமிழ் உப பிரதேச செயலகத்தினுள் அமைத்த ஆலயத்திற்கெதிராக வழக்குத் தொடுத்தமை ஆகிய காரணங்களுக்காகவே பாதீட்டுக்கு எதிராக வாக்களித்தோம்'' என்றனர்.

இதனிடையே கல்முனையில் தமிழ் மக்களுக்காக முன்னின்று இயங்குவதாகக் கூறப்படும் கல்முனைப் பிராந்திய தமிழ் இளைஞர்சேனை, தமிழ் இளைஞர் ஒன்றியம், அறிவியலாளர் ஒன்றியம் போன்ற 5 பொது அமைப்புக்கள் இறுதிக்கட்டத்தில் இந்தப் பாதீட்டை எதிர்க்குமாறு கூட்டமைப்பின் 7 உறுப்பினர்களிடமும் கோரிக்கை வைத்திருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால் கூட்டமைப்பின் 5 உறுப்பினர்கள் பாதீட்டை ஆதரித்தார்கள். அடுத்த நாள் முதலே அந்த 5 பேருக்கு எதிராகவும் சமூக வலைத் தளங்களில் அவதூறுகள் தாறுமாறாகப் பரவத் தொடங்கின. உச்சமாக, ''ஆதித்த கரிகாலன்'' என்ற பெயரில் மிக மோசமான அவதூறு முகநூலில் வெளியாகியது.

பாதீட்டை ஆதரித்த 5 கூட்டமைப்பினருக்கும் முஸ்லிம்கள் அணியும் தொப்பிகள் அணிவிக்கப்பட்ட ஒளிப்படங்கள் வெளியாகின. இவர்களுக்கு 'கத்னா' செய்யவேண்டும் என்பது உட்பட மிக மோசமான வார்த்தைகளால் தூசிக்கப்பட்டார்கள். இந்த அவதூறுகள் தொடர்பில் உறுப்பினர்கள் ஐவரும் கல்முனைக் காவல் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

> கல்முனை தமிழ் உப பிரதேச செயலகத்தை முன்வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரண்டாகப் பிளவுண்டுள்ளமையே இப்போது இங்கு பெரிதும் பேசுபொருளாகியிருக்கின்றது.

**இடையில் கலைந்த...**

இதேவேளை, மேற்படி கல்முனை தமிழ்ப் பொது அமைப்புக்களால் பாதீட்டுக்கான ஆதரவு, எதிர்ப்பு தொடர்பில் தெளிவூட்டல்கோரும் கூட்டமொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை பாண்டிருப்பு வன் சீ பல் தேவைக் கட்டட மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொள்ளுமாறு கல்முனை மாநகர சபையின் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டிருந்தபோதிலும் பாதீடை எதிர்த்த கூட்டமைப்பு உறுப்பினர்களும் தமிழ் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர்கள் மட்டுமே கலந்துகொண்டனர்.


குறித்த கூட்டமைப்பு உறுப்பினர்கள் தாம் பாதீட்டை ஏன் எதிர்த்தோமென விளக்கமளித்துக்கொண்டிருக்கையில் அங்கு வந்த சுகாதாரத்துறை அதிகாரிகள் மற்றும் காவல்துறையினர் கொரோனாவைக் காரணம் காட்டி அந்தக் கூடத்திலிருந்தவர்களைக் கலைந்துபோகச் செய்துவிட்டனர்.

பாதீட்டை ஆதரித்த கூட்டமைப்பு உறுப்பினர்கள் வழங்கிய தகவலின் பேரிலேயே மாநகர பிதா இந்தக் கூட்டத்தைக் கலைக்க நடவடிக்கை எடுத்தார் என்று நம்பப்படுகின்றது.

இந்த நிலையில் பாதீட்டை ஆதரித்த கூட்டமைப்பு உறுப்பினர் கென்றி மகேந்திரனிடம் செம்மண் சார்பில் பேசினோம். ''கல்முனை மாநகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான பாதீட்டை ஆதரித்த எம் மீது சேறுபூசுவதிலேயே சிலர் முனைப்புக்காட்டுகின்றனர்.

கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகச் செயற்பட்டவர்களே இவர்கள். எந்தச் சந்தர்ப்பத்திலும் இவர்கள் தமிழ்த் தேசியத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் ஆதரவாக இருந்தவர்களுமல்லர். நல்லெண்ண அடிப்படையிலும் கல்முனை வாழ் தமிழ் மக்களின் உரிமைகள், வேணவாக்கள், எதிர்பார்ப்புகளை முன்னிறுத்தியுமே புரிந்துணர்வு உடன்பாடுகளுடன் பாதீட்டை நாம் ஆதரித்தோம்.

கட்சித் தலைமையின் ஆலோசனையின் பேரில் எடுத்த தீர்மானமே இது. சுய விளம்பரம் தேடுவதற்காக கட்சியைப் பிளவுபடுத்துவோர் பின்னால் நாம் செல்லமாட்டோம்'' என்றார்.



பாதீட்டை எதிர்த்திருந்தால் அது தமிழர்கள் சட்டிக்குள் இருந்து அடுப்புக்குள் வீழ்ந்த நிலையாகவே இருந்திருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். அவர் சொல்வதிலும் உண்மை இருக்கவே செய்கின்றது. முஸ்லிம்களுடன் இன்னும் இன்னும் பகைமையை வளர்த்துக்கொள்வதன் மூலம் கல்முனை உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்திவிட முடியாது. அத்தகைய நிலை மூன்றாவது நபர்கள் தேர்தல் குளிர்காய்வதற்கு மட்டுமே பயன்படும். யதார்த்தத்தை உணர்ந்து தமிழர்களும் முஸ்லிம்களும் செயற்படுவது அவசியம். ■



எழுத்தாளர்
மு.சிவநேசன்
எழுதும்
புதிய தொடர்

# நிலவைப் பார்த்து வானம் சொன்னது...

நாங்கள் எப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்தவர்கள்?

எங்களது இளமைக் காலத்தில் உறவுகளை தலையில் தூக்கி வைத்து கொண்டாடினோம். இன் முகம் கொண்டு உறவுகளையும் ஏன் முகம் தெரியாத மனிதர்களையும் வரவேற்றோம். உதவி செய்தோம், இடர் துடைத்தோம். கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தோம். நிறைய நேரத்தை உறவினர்களுடன் அன்பு கலந்து செலவழித்தோம்.

வஞ்சகம், சூது, களவுகள் மலியத் தொடங்கவும், பொருள், பதவி பெரிதென்று எண்ணத் தொடங்கவும் தலைப்பட்டவேளையில் உறவுகள் இடையேயான இடைவெளி அதிகரிக்கத் தொடங்கியது. தவிர மனிதனை மனிதன் சந்தேகக் கண்கொண்டு பார்க்கவும் தொடங்கிவிட்டான்.

மனிதனைப் பார்த்து மனிதன் சிரிக்கவும் மறுத்தான், மறந்தான். இந்த நிலமையில் எங்களது பிள்ளைகள், பேரக் குழந்தைகள் தமது சொந்த உறவுகளையே அடையாளம் கண்டு பழக முடியாத அவசர யுகத்தில் வாழ்கின்ற அவலம் படிப்படியாக உருவாக்கம் பெற்றது. நவீன கைபேசிகள் கையில் கிடைத்ததும் வீட்டுக்குள்ளேயே ஒருவரை ஒருவர் முகம் பார்த்து பேசுவது அருகிவிட்டது.

இந்த நிலமையை மேலும் வலுப்படுத்த வந்துவிட்ட கொடுமைதான் கொரோனா என்றால் மிகையாகாது.

வந்தது வந்ததுதான் அறிமுகமானவையோ முகத்தை மறைக்கும் முகக் கவசம், வீட்டில் இருத்தல், கைகழுவுதல், தனிமைப்படுத்தல், உண்மையான தீண்டாமை, சமூக இடைவெளி, கொத்தணி பேதங்கள் எனப் பல கொடுமைகள். காண்கின்ற எவரையும் கொரோனா நோயாளியாக இருக்கலாம் என்கின்ற சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்ற அச்ச மனப்பாங்கு. ஒருவரது முகத்தை முழுமையாக பார்க்கவோ அடையாளம் காணவோ முடியாத அவலம். காண்பவர் புன்னகை புரிகிறாரா, முறைக்கிறாரா என்று கண்டுபிடிக்க முடியாத நிலைமை.

இந்தப் போக்கில் சில ஆண்டுகள் கழிந்தால் இளைய சமுதாயத்தில் உறவுகள், நட்புக்கள் அடியோடு விடுபட்டுப் போய்விடும். பழையவர்கள் பழைய ஞாபகங்களை கொண்டாட வேண்டியதுதான்.

பள்ளிக்கூடம் விட்ட நேரம் பாதிவழிக்கு வந்து, துள்ளிக் குதிக்கும் என்னைத் தூக்கி தோளில் வைத்த அம்மா இப்போது முதலில் குளித்துவிட்டு வா என்கிறா. அலுவலகத்தில் இருந்து திரும்பும் பெற்றோரை வரவேற்கக் காத்திருக்கும் குழந்தை உடனே ஓடிச் சென்று தழுவிக் கொள்ள இயலவில்லை.

இன்றைய நிலமையில் ஒவ்வொருவரும் கொரோனாவுக்கு எதிராக அல்லது அதனோடு போராட வேண்டிய இக்கட்டில் இருக்கிறார்கள். இவர்களில் ஆபத்தான முன்னணியில் சகல மட்ட மருத்துவ மற்றும் சுகாதார துறையினரும், ஒழுங்கமைப்பில் பாதுகாப்பு படையினரும் நிற்கின்றனர்.

அனைவரையும் பரீட்சிப்பதும், மூலங்களை தேடுவதும், தனிமைப்படுத்துதலும், சகலருக்குமான தீவிர சிகிச்சைகளும் சாத்தியமற்றவையாகவே மாறிவருகின்றன. அவரவர் தன்னைத் தான் காக்கும் உத்திகளே பெரும்பாலும் பயன் தரும்.

உலகம் முழுவதும் பிரார்த்தனை செய்தும், அதி உச்சமான மருத்துவ வசதிகள் வாய்த்தும் பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் போன்றவர்களை காப்பாற்ற இயலவில்லை என்கின்றபோது சாதாரண குடிமகனின் விதியை என்னவென்பது.

தாய்லாந்தும் வியட்னாமும் வருமுன் காத்தல் பாணியில் செயற்பட்டு நோயை சிறப்பாக கட்டுப்படுத்தி இருந்தன. சமூக மட்ட விழிப்புணர்வு மற்றும் கடைப்பிடித்தல் செயற்பாடுகளே இதற்காக பிரதான காரணிகள் எனக் கருதப்படுகின்றன. இதற்கான கட்டுப்பாடான முன் அனுபவத்தை SARS தொற்று அனுபவமே வழங்கியது எனலாம்.

அதனை விடுத்து மருத்துவ வசதிகளை மேம்படுத்தலில் முனைப்பாக இருந்த வசதி வாய்த்த நாடுகள் அலைகளை சமாளிக்க முடியாது திணறுகின்றன. ■

# தோல்வியடைந்த...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் சட்டவாட்சி போன்ற வற்றை அரசியல்சார் கணிப் பான்களாக கொள்ளும் அதேவேளை, குடித்தொகை சார் அழுத்தங்கள் மற்றும் வெளியக தலையீடுகள் என்பவற்றையும் இது ஆராய்கிறது.

நலிந்த அரசுகளின் சுட்டி என மொழிப்பரிவர்த்தனை செய்யக்கூடிய **Fragile States Index** அமைப்பின் **2020**ஆம் ஆண்டுக்கான தனது அறிக்கையில் கொவிட் **- 19** இன் பாதிப்புக்கள் தொடர்பான பிரதிபலிப்புக்கள் எதனையும் உள்ளடக்கவில்லை என்கிறது அந்த அமைப்பு.

கொவிட் **- 19**இன் தாக் கங்களை கருத்திலெடுக்காமல் வெளியிடப்பட்டிருக்கும் நலிவடைந்த அரசுகளின் சுட்டி அறிக்கை, இலங்கையை நலிவடைந்த அரசுகளின் முதல் **52** நாடுகளுக்குள் பட்டியலிட்டிருக்கிறது. கொவிட்**-19** இன் இடி மட்டுமல்ல, புரவி சூறாவளி மட்டுமல்ல ஆட்சி மாற்றம் அரசமைப்பு மாற்றம் என்பவற்றின் நடை முறைகளும் இப்போதுதான் நடைமுறைக்கு வந்த வண்ணம் இருக்கின்ற நிலையில், இவை, அடுத்த ஆண்டுக்கான அறிக்கையில் யேமன் திசையினை நோக்கி இலங்கையை நகர்ந்த வாய்ப்புகள் இருக்கின்றன.

ஆனால், இலங்கையை தோல்வியுற்ற அரசு என ஏற்றுக்கொள்ள எதிர்க்கட்சியும் தயாராக இல்லை. சபாநாயகரும் தயாராக இல்லை.


இந்தப் பின்னணியில், ஆளுங் கட்சியும் அதனை ஏற்றுக்கொள்ளாது என்பது எதிர்வுகூறக்கூடியதே.

**2015** தொடக்கம் **2019** இறுதி வரையான ஆட்சியின் பங்காளரான தன் மீது விரல் சுட்டப்படாமல் இருப்பதற் காகவும், ஆளுந்தரப்பை குற்றஞ்சாட்ட வசதியாகவும், தனது ஆங்கிலப் புலமையை நிரூபிக்கவும் இலங்கை தோல்வியுற்ற அரசு அல்ல தோல்வியடைந்த ஆட்சியைக் கொண்ட நாடு என சஜித் வாதிட முடியும்.

தோல்வியுற்ற அரசு எனும் பதப் பிரயோகம் நாடாளுமன்றில் சொல்லப்படவில்லை எனக்கொண்டால் ஹன் சார்டிலிருந்து நீக்கப்பட வேண்டிய அவசியமும் அங்கில்லை. ஆனால், சொல்லப்படாத அந்த வார்த்தை நமக்கு பொருத்தமற்றது என்பதை நிரூபிக்க, அது தொடர்பான அளவீடு களினதும் சுட்டிகளின் நிலை வரத்தினையும் மேம்படுத்த, நாடு நிறையவே உழைக்க வேண்டியிருக்கிறது.

# தளபதி 65 அறிவிப்பு வெளியானது..!!

தமிழ் திரையுலகின் முன்னணி நடிகராக வலம்வந்து கொண்டிருக்கும் இளையதளபதி விஜய் நடிக்க இருக்கும் அடுத்த படத்திற்க்கான அறிவிப்பு வெளியாகியுள்ளது. சன் பிக்சேர்ஸ் நிறுவனத்தின் கலாநிதி மாறன் தயாரிக்கவுள்ள இந்தப் படத்தில் முதன் முதலாக இயக்குனர் நெல்சன் டிலீப்குமார் இயக்கத்தில் விஜய் நடிக்க உள்ளார். இந்தப் படத்திற்கு இசையமைப்பாளர் அனிருத் இசையமைக்கவுள்ளார். ரசிகர்கள் மத்தியில் தளபதி 65 இற்கான வரவேற்ப்பு சமூக வலைத்தளங்களில் அமோகமாகவுள்ளது.








# சம்பந்தர் கடையடிச் சமா...

"சும்மாவே....! இந்தியாவால வந்தும் வராததுமாப் பெடியனப் பிரதேச சபை எலக்சனில இறக்கின உடனேயே எல்லாரும் வாரிசு அரசியல்... அது, இதெண்டு நக்கல் விட்டவங்கள்... இப்ப வாரிசுகள் கலியாணம் வேற கட்டினாச் சொல்ல வேணுமே?

மாவிட்டபுரத்தில இருந்து... சாவகச்சேரிக்கு லைன் ஓடுறது எண்டா என்ன சும்மாவே... பெடியன் வலு கெட்டிக்காரன் போலத்தான் கிடக்குது... என்னண்ணை... நீ என்ன சொல்லுறாய்?" கேட்டபடி வந்து கடையடியில் குந்தினான் அப்பன்.

"ஓமண்ணை...! நானும் உதைக் கேக்க வேணும் எண்டு நினைச்சனான்... அதெப்பிடி அண்ணை மாவிட்டபுரத்தார் சாவகச்சேரியில கட்டுறதுக்கு ஓமெண்டவை?" கூடவே சுப்பனின் பக்கப்பாட்டு...

"அட மோடுகளே...! உங்களுக்கு அடியும் தெரியாது... நுனியும் தெரியாது... காதலும் கத்தரிக்காயும் எண்டு தூக்கிக் கொண்டு வாறியள்... உந்தக் கலியாணம் காதல் கலியாணம் எண்டாலும், எல்லாரும் சம்மதிச்சு... ஒரு எதிர்ப்பும் இல்லாமத்தான் நடந்தது தெரியுமே?"

"ஓமண்ணை... அது தெரியும்...! ஆனா.. மாவிட்டபுரத்தில இருந்து.. சாவகச்சேரிக்கு...."

"அடப் பேயங்களே...! உங்களுக்கு மாமனிதர் ரவிராஜ் சாவகச்சேரி எண்டதுதானே தெரியும்? அவரின்ர அடி, நுனி தெரியுமே.... அவரிண்ட ஆம்பிள அடியும் மாவிட்டபுரம்தான்... அப்பிடிப் பாத்தா அவரும் மாவிட்டபுர வாரிசுதான். பிறகென்ன பிரச்சினை....?

இப்ப எப்பிடி மாவையரின்ர பெடி... அரசியல் செய்யப்போய்... அங்க கசிந்து, கண்ணீர் மல்கி விழுந்ததோ, அதைப்போல அந்தக் காலத்தில... வாட்ட சாட்டமான வடிவான ஆம்பிளை - நடராஜா மாஸ்டரும் மட்டுவிலில படிப்பிக்கப் போய், ஒரே பள்ளிக் கூடத்தில ரீச்சரைக் காதலிச்சுக் கை பிடிச்சவர் எண்ட கதை உங்களுக்குத் தெரியுமே? கொல்லங்கலட்டியிலயும் - அரசடியிலயும் அடி, தலை ஒண்டுக்கை ஒண்டு எண்டதாலதான் பிச்சல், பிடுங்கல் இல்லாம இந்தக் கலியாணம் முடிஞ்சதாம்...."

"அது சரி அண்ணை! கலியாண வீட்டில மாவையரின்ர இப்பத்தை வலது கை நிண்டது... இடது கையக் காணேல்ல எண்டுறாங்கள் உண்மையே?"

"ஆரத் தம்பி சொல்லிறாய்.......? அங்க தங்களத் தாங்களே வலது கை, இடது கை எண்டு நினைச்சுக் கொள்ளுற கனக்க நிண்டவையள்தான்... ஆரு. கனகசபாபதியரைச் சொல்லுறியோ... அவர்தானே அங்க ஒரே அலுவலா நிண்டவர்... மாப்பிள வீட்டுக்காரரா..."

"இல்லையண்ணை... பெடியனுக்கு வலக்கை - இடக்கை எல்லாம் அவர் தான். அது தெரியும் எனக்கும். நான் கேட்டது மாவையரிண்ட ஒரு கையை... இப்ப எங்க போனாலும்... ஒருபக்கம் சீனியரும், மறு பக்கம் பேப்பர்காரருமாத்தானே திரியுறவர்.. அதைத்தான் கேட்டனான்... பேப்பர்காரரை அங்கினேக்கை குடுக்குக்.. குடுக்கெண்டு ஓடித் திரிஞ்சவர்... சீனியரைத்தான் காணேல்ல....."

"ஓ...! அவயளச் சொல்லிறியே....! ஓமடாப்பா... உந்த ரெண்டு பேரும் பக்கத்தில இருக்கேக்க, சப்போட் பண்ணேக்கத்தான் மாவையர் தோத்துப்போனார், அந்தாள் தனிய நின்றிருந்தால் வென்றிருக்கும் மனிசன் எண்டிறவையளுக்கு ரெண்டு பேரையும் பார்க்கேக்கை கொஞ்சம் கசப்பாத்தான் இருக்கும். சீனியர அவ்வளவு ஈடுபாட்டோட காணேல்லை எண்டது உண்மைதான். எல்லாத்துக்கும் ஒரு காரணம் இருக்கும்தானே!

ஆனா.. சீனியர் தனக்குள்ள இருக்கிற ஆசைய சொல்லத் தெரியாமல் சொல்லி கொஞ்சம் வாங்கிக் கட்டிப் போட்டார் எல்லே....?"

அவன் ஆரோ ஒரு சிங்கள எம்.பி கூட்டமைப்பைத் தடை செய்ய வேணும் எண்டு சொன்னதுதான் தாமதம், இங்க இவர் ஒரு பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தி... கூட்டமைப்பைத் தடை செய்தாலும், வேறு கட்சியில எலக்சனில நிப்பம் எண்டு தெனாவெட்டுக் காட்டியிருக்கிறார்.....

இவை ஒவ்வொருத்தருக்குள்ளும் என்ன இருக்குதெண்டு மெள்ள, மெள்ளத் தங்கள அறியாமலே கக்கத் தொடங்கிற்றினம் பாருங்கோ....

மாற்று இயக்கங்களைத் தேடித் தேடிப் போட்டுத் தள்ளிக் கொண்டிருந்த காலத்தில... அடைக்கலத்தாருக்கு அடைக்கலம் குடுத்து அங்கால கொண்டு போய் விட்டதுக்காக புலிகள் இவரிலயும் ஒரு கண் வைச்சுக்கொண்டுதான் திரிஞ்சவை... ஆனால்.. சீமான் எப்பிடியோ தப்பிற்றார்.

இதுக்குப் பிறகு... 2009 மாநகர சபைக்கு டக்ளசோட கேக்க வெளிக்கிட்டு, வெருட்டுப்பட்டு விட்டுப்போட்டு.... காங்கிரசோட திரிஞ்சு... இப்ப தமிழரசில தான்தான் சீனியர் எண்டு கொண்டு தனக்குத் தானே பதவியளயும் குடுத்துக் கொண்டு ஊடகங்களில.... பேட்டி வேற....

என்ன தான் ... ஆரா இருந்தாலும்.... தலைவர் காட்டின வீடு எண்டுற ஒண்டுக்காகத் தானே இண்டைக்கும் நாங்கள் அதோட நிக்கிறம்... இப்பிடி இருக்க எங்களப் போல எத்தின பேருக்கு... இவர் இப்பிடிச் சொன்னது கோபம் வந்திருக்கும்....

அதால தானாம் மாவையர் வழமை போலச் செல்லமா உரசிப் போட்டாராம். என்னதான் சுய நலத்தோட... குடும்பத்தை அரசியலால வளர்த்துப்போட வேணும் எண்டு நிண்டாலும்.... சனத்தின்ர நாடியைப் பிடிச்சுப் பாக்கிறதில மாவையர் கெட்டிக்காரன்தானே...

அண்ணை...! நீங்கள் இப்பிடிச் செல்லியிருக்கப்படாது.... கொஞ்சம் உங்களக் கொன்ரோல் பண்ணுங்கோ... மீடியாவில கதைக்கேக்க கவனமா இருக்கவேணும் எண்டுதான் சீனியருக்குச் சொல்லுப்பட்டதாம்..... அந்த உரசலால... சீனியர் கலியாண வீட்டில ஒட்டாமலும்... முட்டாமலும் நடந்து கொண்டாராம்....

இப்ப விளங்குதே... என்ன நடந்ததெண்டு.... இப்ப ஒரே ஒரு குழப்பம் தான் மாவையரின்ர வலக்கை பெரிசா...? இடக்கை பெரிசா எண்ட குத்துப்பாடொண்டு மெல்லப் புகையத் தொடங்கியிருக்குதாம்....

சூரனா... சுழியனா எண்டு பொறுத்திருந்துதான் பாக்கவேணும்.... கனக்கக் கதைச்சுப் போட்டன்... வீட்டில விழப்போகுது... வரட்டே!"

\- ஆதிரன்

## இந்த வார சுடோக்கு - 20

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 9 | 4 | 7 | | | 3 | 6 |
| | | | | 8 | | | 2 | 9 |
| | 1 | | 2 | | | | 5 | 7 |
| 7 | 6 | | | | | | | |
| | | 1 | | | | 6 | | |
| | | | | | | | 1 | 5 |
| 6 | 9 | | | | 1 | | 4 | |
| 8 | 2 | | | 5 | | | | |
| 1 | 4 | | | 6 | 9 | 7 | | |

இந்த சுடோக்கு விளையாட்டு தர்க்க ரீதியாக எண்களை ஓரொழுங்கில் அடுக்குவதற்கானது. நேராகவும் கிடையாகவும் 9 பெட்டிகளைக் கொண்டுள்ள இந்தச் சதுரத்தினுள் ஒவ்வொரு சிறிய பெட்டியினுள்ளும் 1 முதல் 9 வரையான ஒரு எண் இடப்பட வேண்டும். பெரிய பெட்டியின் கிடை மற்றும் நேர் வகிடுகளிலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைப் பெட்டிகளின் நேர் மற்றும் கிடை வகிடுகளிலும்கூட ஒரு எண் இரட்டிப்பாகக்கூடாது என்பதே விதி. முயற்சி செய்து பாருங்கள். சரியாக நிரப்பி விட்டீர்களானால் அதனை அப்படியே வெட்டி

**செம்மண்**
*சுடோக்கு,*
**551 A,** *கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்*

என்னும் முகவரிக்கு, உங்கள் முழுப் பெயர், வயது, தபால் முகவரி, தொடர்பு எண் என்பவற்றுடன் அனுப்பி வையுங்கள். சரியாக எழுதி வெற்றிபெறும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250 பரிசாக வழங்கப்படும். விடையும் வெற்றிபெற்றவரின் விவரங்களும் அடுத்தவார பத்திரிகையில் வெளியாகும். வெற்றிபெற்றவர் பரிசுத் தொகையை செம்மண் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த வாரம் வெளியாகிய சுடோக்கிற்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 7 | 4 | 2 | 3 | 1 | 8 | 9 |
| 8 | 1 | 4 | 9 | 5 | 6 | 2 | 7 | 3 |
| 3 | 9 | 2 | 1 | 8 | 7 | 4 | 5 | 6 |
| 5 | 4 | 6 | 8 | 7 | 2 | 3 | 9 | 1 |
| 7 | 8 | 1 | 3 | 9 | 4 | 6 | 2 | 5 |
| 2 | 3 | 9 | 5 | 6 | 1 | 7 | 4 | 8 |
| 4 | 2 | 5 | 6 | 1 | 8 | 9 | 3 | 7 |
| 9 | 6 | 3 | 7 | 4 | 5 | 8 | 1 | 2 |
| 1 | 7 | 8 | 2 | 3 | 9 | 5 | 6 | 4 |

கடந்த வார சுடோக்கிற்கான சரியான விடைகளை எழுதிய வெற்றியாளர்

**சு.சாரலன்**
மாசியப்பிட்டி, சண்டிலிப்பாய்.

வெற்றியாளர் பரிசை செம்மண் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

குறிப்பு:
**கிறீன் மீடியா கவுஸ் நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் சக நிறுவன ஊழியர்கள் இப் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.**

செம்மணி
வாரமலர் 12 – 18 மார்கழி 2020



# பிரமிட் அழகி கைது!

## எகிப்திய பாரம்பரியத்தை அவமதித்தாராம்

எகிப்து நாட்டிலுள்ள பிரமிட்டுக்கள் பழங் காலத்துக்குரியவை. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தவை என்றும் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தவை என்றும் கருதப்படுகின்ற இவை, உலக அதிசயங்களில் ஒன்றாகவும் இடம்பிடித்துள்ளன.
எகிப்திய அரசர்களையும் ராணிகளையும் உயர்பதவி வகித்தவர்களையும் இறந்த பிற்பாடு அடக்கம்செய்து அதன் மீது கட்டப்பட்டவை என்று இவை மதிக்கப்படுகின்றன. எகிப்தியப் பண்பாடு, கலாசாரம் ஆகியவற்றோடு பின்னிப் பிணைந்திருக்கின்ற இந்தப் பிரமிட்டுக்கள் எகிப்தின் அடையாளமாகவும் இருந்து வருகின்றன. இந்த நிலையில் பிரமிட்டுக்களை அவமதித்தார் என்கிற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர் ஓர் அழகி...! அவரது பெயர் சல்மா எல்-ஷிமி. அவருக்கு வயது 26. அத்தோடு இவரைப் படம்பிடித்த படப்பிடிப்பாளர் ஹோகம் முகம்மது என்கிற 22 வயதுடைய நபரும் கைது செய்யப்பட்டுள்ளார். இவர்களை விடவும் அங்கு பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். அந்தளவுக்கு விடயம் பூதாகரம்...!
எகிப்திய மக்களால் உயர்ந்ததும் மதிப்புக்குரியதுமான இடத்தில் வைத்து நோக்கப்படுகின்ற பிரமிட்டுக்கு முன்னாலும் பக்கமாகவும் நின்று தன்னை ஒளிப்படம் பிடித்துக்கொண்ட அந்த அழகி, எகிப்தின் பழங்காலத்தைப் பிரதிபலிக்கின்ற வகையிலான ஆடை வடிவமைப்பு மற்றும் கலாசார வடிவங்களைப் பறைசாற்றக்கூடிய விதத்தில் ஆடைகளை அணிந்திருந்தார். ஆனால் அந்த உடையிலும் அவர் படு கவர்ச்சியாக இருந்தார். தனது கவர்ச்சியான தேகத்தைப் பலகோணங்களிலும் படப்பிடிப்பாளர் ஒருவரைக் கொண்டு படம்பிடித்துள்ளார். அத்தோடு 'டிக் டொக்' தளத்தில் காணொலியாகவும் அதைப் பகிர்ந்துள்ளார். அதன் பின்னர் விடயம் தீயாகப் பரவி, பிரமிட்டை அவர் அவமதித்தார் என்கிற பேச்சுகள் எழுந்தன. அவர் கைது செய்யப்பட்டார். எகிப்தில் இந்த விவகாரம் கடும் விவாதமாக உருவெடுத்தது.



பாரம்பரிய - வரலாற்றுச் சின்னங்களை அவமரியாதை செய்த குற்றத்திற்காகவும் குறித்த பகுதியில் ஒளிப்படம் பிடித்துக்கொள்வதற்கு அனுமதி பெறாத குற்றத்துக்காகவும் அழகிக்கும் படப்பிடிப்பாளருக்கும் கடுமையான தண்டனை வழங்க வேண்டும் என்று அந்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கண்டனம் தெரிவித்தார். அத்தோடு அழகிக்கு ஆதரவாகவும் சிலர் பேச, எகிப்தியத் தொலைக்காட்சிகளில் இது பற்றிய விவாதங்கள் சூடு பிடித்தன. அனுமதி பெறாமல் தொல்பொருள் சின்னங்களுக்கு மத்தியில் ஒரு மொடல் அழகி எப்படி ஒளிப்படம் எடுக்கலாம் என்பதுதான் பலரின் கேள்வியாகவும் இருந்தது.
அழகி மற்றும் படப்பிடிப்பாளர் தவிரவும் இதற்கு உடந்தையாக இருந்தனர் என்ற குற்றச்சாட்டில் தொல்பொருள் அமைச்சகத்தின் 2 அதிகாரிகள், 4 பாதுகாவலர்களும் கைது செய்யப்பட்டனர். இந்த விவகாரங்களுக்கு மத்தியிலும் எகிப்தின் பாரம்பரிய உடையில் ஜொலிக்கும் அந்த அழகி இணையத்தில் கடும் வேகமாகப் பரவினார். சிகித்துக்கொள்ளாத அதிகாரிகளோ எகிப்தியப் பாரம்பரிய முறையில் இருந்து வேறுபட்ட ஆபாச ஆடைகளை அணிந்தார் என்றும், குறிப்பிட்ட பிரமிட் பகுதியில் ஒளிப்படம் எடுப்பதற்குத் தொல்பொருள் துறை அமைச்சகம் வகுத்த விதிகளை மீறினார் எனவும் அவர் மீது மேலும் குற்றங்களைப் பதிவு செய்துள்ளனர்.

# வெள்ளையுடை தேவதை!



விஜய் தொலைக்காட்சியின் "பாண்டியன் ஸ்ரோர்ஸ்" தொடரில் முல்லைக் கதாபாத்திரத்தில் நடித்து வந்த சித்ரா உயிரிழந்த செய்தி வெளியாகியிருக்கும் சோகத்தில் விஜய் தொலைக்காட்சியின் பிரபல தொகுப்பாளினியான திவ்யதர்ஷினி பற்றிய செய்திகளும் படங்களும் வெளியாகியிருக்கின்றன.
டிடி என அழைக்கப்படும் திவ்யதர்ஷினி தனது நிண்ட கால நண்பரைத் திருமணம் செய்துகொண்ட பின்னர் விவாகரத்துச் செய்துகொண்டார். அதன் பின்னர் திரைப் படங்களிலும் நடிக்கத் தொடங்கியிருக்கிறார். இயக்குநர் கௌதம் மேனனின் துருவ நட்சத்திரம் படத்தில் ஏற்கனவே முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் திவ்யதர்ஷினி ப.பாண்டி மற்றும் சர்வம் தாள மயம் ஆகிய படங்களிலும் நடித்துள்ளார்.
வழக்கமாகத் தனது ஒளிப்படங்களை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டுவரும் திவ்யதர்ஷினி அண்மையில் வெள்ளைநிறப் புடவையில் மின்னும் தங்கமாகப் பதிவிட்ட படங்கள் அவரது ரசிகர்களைக் கொள்ளையடித்துச் சென்றிருக்கின்றது.



இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ, கஸ்தூரியர் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.12.2020 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு: 0214927781